வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலயத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.




புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 மாசி திங்கள் 18-ம் நாள் (1—3—1964) ஞாயிற்றுக்கிழமை ஷவ்வா 15 இதழ் 40

## சிங்களக் காசோலை, படிவம் பற்றி

# மந்திரிகள் முடிவு

## பிரச்னையின் தீர்வுக்கு தற்காலிக ஏற்பாடு

வடக்கு—கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் பேசும் மக்களுக்கு அரசாங்க திணைக்களங்களிலிருந்து அனுப்பப்படும் காசோலைகள், அனுமதிப் பத்திரங்கள், கடிதங்கள் அனைத்தும் சிங்கள மொழியில் இல்லாது இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதென்று கடந்த புதன்கிழமை கூடிய அமைச்சர்கள் முடிவு செய்திருப்பதாக விஷயம் தெரிந்த வட்டாரங்களிலிருந்து தெரிகிறது. தமிழரசுக் கட்சி தமது நேரடி நடவடிக்கையை ஒத்திவைப்பதற்குச் சில உடனடித் திட்டங்களை இடைக்கால ஒழுங்காக ஆட்சியாளரிடம் சமர்ப்பித்திருந்தனர். அவற்றின் பயனாகவே இம் முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

### புரியாத மொழியில் வேண்டாம்!

—திரு. சா. ஜே. வே.

கொழும்பில் மோட்டார் வாகனங்களுக்குச் சிங்கள மொழியில் லைசன்ஸ் வழங்கப்பட்டு வருகிறது. தனக்கு வழங்கப்பட்டது என்ன வென்று தன்னால் அறிய முடியாது இருக்கிறது — புரியும் மொழியில் தருக என்று கேட்டு திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் தனது வாகன லைசன்சைத் திருப்பிக் கொடுத்தார்.

திரு. சிவானந்தம்

அதே போல் திருமலை நக

(9-ம் பக்கம் பார்க்க)

# சுகாதார மந்திரி பதவி துறப்பாரா?

## டாக்டர்கள் வேலை நிறுத்தம் செய்ததின் எதிரொலி

வைத்திய அதிகாரிகளின் வேலைநிறுத்தத்தின் விளைவாகச் சுகாதாரமந்திரி திரு. பதியுதீன் மாமூத் பதவியைத் துறக்கக்கூடிய நிலைமை உருவாகலாம் என்று தெரிகிறது.

வைத்திய நிபுணர்கள் தொடங்கிய வேலைநிறுத்தம் வலுவடைந்து வருகிறது. திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, திரு. சி. பி. டி. சில்வா போன்ற மந்திரிகள் தனிப்பட்ட முறையில் தொழில்பார்க்கும்பிரச்சினையில் வைத்திய நிபுணர்களுக்குச் சில சலுகைகள் வழங்க வேண்டுமென்று கூறிவருகின்றனரென்றும் சுகாதார மந்திரி அவர்களுக்கு எத்தகைய சலுகையும் வழங்க முடியாதெனப் பிடிவாதமாக இருக்கிறாரென்றும் கூறப்படுகிறது.

அவர்களுக்குச் சிலசலுகைகள் வழங்கி வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர மந்திரிசபை முடிவுசெய்தால் திரு. மாமூத் மந்திரிசபையிலிருந்து ராஜிநாமா செய்து வெளியேறி விடுவாரென்றும், அவர் நிச்சயம் வைத்திய நிபுணர்களுக்குப் பணியமாட்டார் என்றும் நம்பகமாக அறியப்படுகிறது.

### சிங்கள மக்கள் மத்தியில் பிரதேசச் சண்டை?

நிதி மந்திரிப் பதவியைத் திரு. இலங்கரத்தின ஏற்றுக் கொண்டது முதல் மலைநாட்டுச் சிங்களவர்களுக்கே முதற்தரமான உத்தியோகங்கள் வழங்கப்படுவதாகப் பலத்த வதந்திகள் அடிபடுகின்றன.

மத்திய வங்கியின் உயர் பதவியிலுள்ள கரையோரச் சிங்களவர் ஒருவரை வெளியேற்றிவிட்டு, அதே பதவிக்கு ஒரு மலைநாட்டுச் சிங்களவரை நியமிக்க எத்தனங்கள் நடைபெறுவதாகவும் கூறப்படுகிறது.

#### இராணுவத்திலும்...!

இராணுவத்தில் உயர் பதவி வகிக்கும் ஒருவர் அண்மையில் தியத்தலாவையி

(9-ம் பக்கம் பார்க்க)

# சர்வாதிகார ஆட்சி ஏற்படுமா?

## நிலைமையை சீர்படுத்த ஆளவந்தார் திட்டம்

சர்வாதிகார ஆட்சி முறை ஒன்றினை காலம் தாழ்த்தாமல் உடனடியாக ஏற்படுத்தி நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைக் களைய வேண்டுமென்று ஆளும் கட்சி மேலிடத்தினர் சிலர் அபிப்பிராயம் கூறியிருப்பதாகத் தெரிகிறது. அடுத்த வருடம் நடைபெற வேண்டிய பொதுத் தேர்தலை ஒத்திவைத்துவிட்டு ஆளும் கட்சியே தொடர்ந்து ஆக்க வேலைகளைச் சர்வாதிகார முறையில் நடாத்த வேண்டுமென்றும் அவர்கள் கருத்து வெளியிட்டிருக்கிறார்களாம்.

ஆளும் கட்சிக்குள் கோஷ்டிச் சண்டைகள் ஏற்பட்டு வருவதும், மந்திரிமார்களுக்குள்ளேயே பலதரப்பட்ட அபிப்பிராய பேதங்கள் நிலவுவதும் யாவரும் அறிந்த உண்மைகளே. சிங்களத் திணிப்பை மையமாக வைத்து, அடுத்த தேர்தலை நடத்திப் பொது மக்களின் வாக்குகளைப் பெற்று, தாங்களே ஆட்சி பீடத்துக்கு அடுத்த முறையும் வந்துவிடலாம் என ஆளும் கட்சி எண்ணியிருப்பதாகக் கூறப்படுகிறது. இதனாலேதான் இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் தேர்தலை நடத்துவதற்கும் அரசாங்கம் முயற்சித்ததாகவும் தெரிகிறது.

'இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கும் சூழ்நிலை காரணமாக அடுத்து ஒரு தேர்தலில் ஆளும் கட்சி ஆட்சி பீடமேறுவது முடியாத காரியமாகும். ஆகவே நாட்டின் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு இதே அரசாங்கம் நீடிப்பது அவசியம். இன்றுள்ள ஆட்சி முறையில் மலிந்து வரும் ஊழல்களைக் களைவது முடியாத காரியமாகும். சர்வாதிகார ஆட்சி முறையினைப் பின் பற்றினால் நிச்சயம் இப்போதுள்ள கஷ்டங்களை நீக்கி சுபீட்ச வழியை உண்டாக்கலாம். பரீட்சார்த்தமாகவாவது உடனடியாகச் சில காலத்துக்காவது ஓர் சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்துவதே பலனளிக்கக்கூடும்.'

மேற்கண்டவாறு ஆளும் கட்சியைச் சேர்ந்த பல பிரமுகர்கள் அண்மையில் பிரதமரைச் சந்தித்துக் கூறியுள்ளதாக அறிகிறோம்.

### வெளிநாட்டுக் கொள்கை

இதுவரை இலங்கை அரசு அனுட்டித்து வந்த வெளிநாட்டுக் கொள்கையில் குழப்பம் ஏற்பட்டு வருவதாக அரசியல் அவதானிகள் அபிப்பிராயப் படுகின்றனர். அரசின் நடுவு நிலைமைக் கொள்கை கைவிடப்பட்டு ஒரு முகாமுடன் இலங்கை அரசு அத்தியந்த உறவு கொண்டு விடக்கூடும் என்

(9-ம் பக்கம் பார்க்க)

# ஆசிரியர் சம்பளம் திருப்பி அனுப்பப்படுகின்றது

கிழக்கு இலங்கையில் தமிழ் ஆசிரியர்களுக்கு இம் மாதத்துக்குரிய சம்பளக் காசோலைகளையும் மட்டக்களப்பு கல்விக்காரியாலயம் சிங்களத்திலேயே அனுப்பியுள்ளது. ஆசிரிய சங்கங்கள் ஏகோபித்த கண்டனங்களைத் தெரிவித்தும் கல்வி அதிகாரிகள் சட்டை செய்ததாகத் தெரியவில்லை.

சிங்களத்தில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள காசோலைகளைக் கல்வி அதிகாரிக்குப் பதிவுத்தபால் மூலமாக ஆசிரியர்கள் திருப்பி அனுப்புகின்றனர்.

உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்கம், கிழக்கு இலங்கை அரசினர் சுயபாஷை ஆசிரியர் சங்கம், கிழக்கு இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம், அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழ் ஆசிரியர் சங்க மட்டக்களப்புக் கிளை ஆகிய சங்கங்கள் கூட்டாகச் சேர்ந்து சிங்களக் காசோலைகள் அனுப்பி வைக்கப்பட்டால் திருப்பி அனுப்புவதெனை முடிவுசெய்தன. அக்கரைப்பற்றுமுதல் செங்கலடிவரை மேற்படி

(9-ம் பக்கம் பார்க்க)

# இந்தியாவின் இடத்தை சீனு பிடித்துக் கொண்டது

நடந்த ஆண்டின் முதல் 10 மாதங்களில் இலங்கையின் மொத்த இறக்குமதியில் இந்தியப் பண்டங்களின் இறக்குமதிப் பங்கு 9.17 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. 1962ல் இதே காலக் கட்டத்தில் இந்தியாவின் பங்கு 10.37 சதவிகிதமாக இருந்தது.

இலங்கையுடன் உள்ள வர்த்தகத்தில் இந்தியாவுக்கு இருந்துவரும் வர்த்தக சாதக நிலையும் இதே போல் ரூ 9.5 கோடியிலிருந்து ரூ. 7.9 கோடியாகக் குறைந்தது. இதற்கு இலங்கையின் கடும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளே காரணமாகும்.

ஆனால், அதே சமயத்தில், இந்தியா பாதிக்கப்பட்ட இடங்களில் சீனு சாதகமடைந்துள்ளது. இலங்கைக்குப் பண்டங்களை சப்ளை செய்வதில் பிரிட்டன் முதலிடம் வகிக்க, சீனு இப்பொழுது இரண்டாவது இடத்தை வகிக்கிறது.

1962ல் இலங்கைக்குப் பண்டங்களை அனுப்புவதில் சீனு 14வது இடத்தில் இருந்தது. இலங்கையில் அந்த ஆண்டின் முதல் 10 மாதங்களில் சீனுவின் வருமானம் ரூ 2.3 கோடியாக இருந்தது; ஆனால் 1963ல் இதே காலக் கட்டத்தில் இலங்கைக்குப்பொருட்களை வழங்குவதன் மூலம் சீனுவுக்குக் கிடைத்த வருமானம் ரூ. 11.8 கோடியாக உயர்ந்தது.

இருதரப்பு வர்த்தக ஒப்பந்தங்களின் பலனாக ரஷ்யா, ருமேனியா, எகிப்து, தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் இலங்கையின் வர்த்தகம் அதிகரித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்ச்சிக் கவி எழுதி-தமிழ் உள்ளங்கவர் கவிஞன் —காசி ஆனந்தன்



உலகாண்ட தமிழர் சமுதாயம் தாழ்வு நிலையுற்று, அடிமைச் சமுதாயமாக உறங்கிக் கிடப்பதை இலங்கையில் பிறந்த ஒரு இளம் கவிஞன் தானுகவே உணர்ந்து தனக்குள்ளேயே புழுங்கித் துடித்தான். அவனுடைய துயரப் பெருமூச்சு ஒவ்வொன்றும் புயல் வேகத்தில் உணர்ச்சிப் பாடலாகக் கிளம்பிற்று. வெகு சீக்கிரத்தில் அந்த இளைஞன் விடுதலைக் கவிஞர் வரிசையில் இடம் பெற்றுப் போனுன்.

கவிஞர் காசி. ஆனந்தனுக்கு முதல் பாடல் பிறந்த இடமே போர்க்களம்தான். மட்டக்களப்புப் பொலீஸ் நிலையத்திலுள்ள பெயர்ப் பலகையில் சிங்கள எழுத்துக்களைத் தார் கொண்டு அழிப்பதற்காக யாருக்கும் தெரியாமல் அவர் ஒரு நாள் ஏற்பாடு செய்தார். அந்த எழுத்துக்களை அவர் அழித்துக் கொண்டிருந்த போது பொலீசார் அவரைப் பிடித்துச் சென்று சுவரில் சாய்த்து வைத்து மார்பிலே அடித்தார்கள். அடியை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்த கவிஞர்,

'துடிக்கின்ற நரம்பெல்லாம்
துணிவுண்டு! தமிழர்
தோற்றகதை உலகத்தின்
வரலாற்றில் இல்லை!
இடிக்காதிர் பொலீசாரே!
இடித்தாலும் என்றன்
எலும்போடு தசைமோதித்
தமிழ் என்றே கூறும்!

என்ற பாடலை உணர்ச்சியோடு எழுதி முடித்தார். அன்றிலிருந்தே அவர் தமிழ் பேசும் இனத்தின் விடுதலைக் கவிஞர் ஆவதற்கான எல்லாத் தகுதிகளையும் பெற்றுவிட்டார்.

தமிழ்மொழி மீது கவிஞருக்குள்ள பற்று தனித் தன்மை வாய்ந்ததாகும்.

தமிழே உயிரே வணக்கம்!
தாய்பிள்ளை உறவம்மா
உனக்கும் எனக்கும்!
அமுதே நீயில்லை என்றால்...
அத்தனையும் வாழ்வில்
கசக்கும் புளிக்கும்!

என்று அன்னை மொழியிடம் தனக்குள்ள பற்றை வெளிப்படுத்துகிறார் கவிஞர். தமிழன்னையின் கண்கள் கலங்கிப் போய் இருப்பதை அவர் கண்டுவிடுகிறார்.

சங்கத் தொட்டிலில் மன்னர்களின் செல்லப் பிள்ளையாக வாழ்ந்த தங்கத் தமிழ் மகள் அழுது துடிப்பதைக் கவிஞரின் உள்ளம் எப்படிப் பொறுத்துக் கொள்ளும்?

தாயே......தமிழே!
தலைகவிழ்ந்த பொற்
செல்வி!
வாயலற வேண்டாம்......
வருங்காலம் உன்காலம்!
அம்மா தமிழே!
அடுத்த பரம்பரையில்
உம்மை வணங்கும்
உலகத்தை நான்
செய்வேன்!

என்று சபதம் எடுக்கிருர் கவிஞர். தமிழ் பேசும் இனத்தின் தாழ்வு நிலை அவர் உள்

எழுதியவர்:-
எம். பி. தாயுமானவர்,
சேலம்

ளத்தை அணுவணுவாகச் சித்திரவதை செய்கிறது.

இலங்கையில் பிறந்து தமிழகத்தில் தமிழ்த்தொண்டு புரிந்த அறிஞர் வரிசையில் இளைஞரான கவிஞர் காசி ஆனந்தனும் இடம் பிடித்துக் கொண்டுள்ளார். அவருடைய கவிதைகள் தமிழகத்தின் முன்னணி ஏடுகளிலே யெல்லாம் இடம் பெற்று, தமிழக மக்களின் உள்ளங்களிலே தமிழுணர்ச்சிப்பெருக்கை மூட்டிக் கொண்டிருக்கின்றன. 'உயிர் தமிழுக்கு' என்று கவிஞரால் பாடப்பெற்ற கவிதைத் தொகுப்பு நூல் பல்லாயிரம் பிரதிகள் விற்பனையாகியுள்ளன. திருமதி பூங்கோதை அம்மையார் காசி ஆனந்தனின் மற்றுமொரு கவிதைத்தொகுப்பை வெளியிடுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்றும் தெரிய வருகிறது. மக்களின் உளப்பாங்கை உணர்ந்தும், அவர்களுடைய தேவைகளைப்புரிந்தும் அதற்கேற்ப செயல்படும் உள்ளமை எழுத்தாளர்கள், கவிஞர்கள், பேச்சாளர்கள், செயலாளர்கள் அனைவரும் எங்கு வாழ்ந்தபோதும் மக்கள் மன்றத்தில் மதிப்புடன் உலவுவர் என்பது உண்மை. தமிழ் பேசும் மக்களின் இன்னலைத் துடைக்கவல்ல கவிதைகளை யாத்து வரும் கவிஞர் காசி ஆனந்தனைத் தமிழகம் கொண்டாடுகின்றது என்பதற்கு பிரபல தமிழக எழுத்தாளர் எம். பி. தாயுமானவர் அவர்களின் விமர்சனமே சான்று பகரும்.

மூந்தி முனைத்த கலங்கரை
தமிழ்ப் பரம்பரை—நடுச்
சந்தியில் வீழ்ந்து
துடிப்பதேன்?
தாழ்ந்து கிடப்பதேன்?
அள்ளிக் கொடுத்தகை
கேட்குதே,
ஓடு தூக்குதே—இலை
கிள்ளிப் பொறுக்கித் திரியுதே
வயிறு எரியுதே!

கவிஞரின் ஏக்கம் உணர்ச்சி வரிகளாக வடிவம் பெறுகின்றன. உறங்கிக் கிடக்கும் தமிழினத்தை அவர் தட்டி எழுப்புகிறார்.

மானம் எனும் ஒரு
பானையில் வாழ்வெனும்
தீனி சமைத்தவனே!—தமிழ்
போனதடா! சிறை
போனதடா! அட!
பொங்கி எழுந்திடடா!

நாறு பிணக்களம் நூறு
படித்த நம்
வீறு மிகுத்தகுலம்—பெறும்
ஊறு துடைத்திடு மாறு
புறப்படு!
ஏறு நிகர்த்தவனே!

அவருடைய ஒவ்வொரு கவிதையிலும் உணர்ச்சி கொப்பளிப்பதை நாம் காணலாம். தமிழினத்தைப் பார்த்து அவர் சில கேள்விகளைக் கிளப்புகிறார்.

வலி படைத்து முறமெடுத்துப்
புலியடித்த தமிழகம்
கிலி பிடித்த நிலை படைத்து
வெல வெலத்து
வாழ்வதோ?
பகை ஒதுங்கப் பறை முழங்கிப்
புகழுடைந்த தமிழகம்
கதி கலங்கி விழி பிதுங்கி
நடு நடுங்கி வாழ்வதோ?

நிலை மறந்து உறக்கத்தில் ஆழ்ந்துவிட்ட தமிழ்ச் சமுதாயத்தின் மான உணர்ச்சியைத் தூண்டி விடுகிறார் கவிஞர்.

வாள் தொட்ட
கையெல்லாம்,
வலிகுன்றிப் புகழ்
குன்றி வழக்கம் குன்றி
கால்தொட்டு வாழ்கின்ற
அவலத்தை நாமின்று
கண்ணால் கண்டோம்!
பாழ்பட்ட இந்நாட்கள்
பல நாட்கள் ஆகாமல்
பார்த்துக் கொள்வோம்!
தோள் தட்டி மானத்தில்
தோய்கின்ற
போராட்டம்
தொடங்குவோமே!

என்று, தமிழினம் போர்க்களம் செல்ல வேண்டிய அவசியத்தைக் கவிஞர் வெளியிடுகிறார். தமிழினத்திற்கு அவர் அழைப்பு விடுகிறார்.....

வீரத்தமிழா! விழித்தெழு!
மூலையில்
வீழ்ந்து கிடந்த[illegible]!
நிலையுணர்வாய்!
ஐவரைத் திரட்டிச் செயல்
படுவோம் தமிழ்
ஓசை முழக்கிப்
புறப்படடா!'
'அன்னை அழைத்தனள்!
ஆண்மை அழைத்தது!
இன்னும் உறங்குதல்
இல்லை! புறப்படு!
சின்ன மனிதர்கள்
செந்நீர் எடுத்து நம்
பொன்முகத் தாய்க்கொரு
பொட்டிடுவோமடா!

என்று வீரக் கவிதைகளை வடித்து வைக்கிறார் விடுதலைக் கவிஞர்! தமிழினம் அணி அணியாகத் திரண்டு வருகிறது. தனக்கு முன்னால் உணர்ச்சி கொண்டு நிற்கும் சமுதாயத்தைப் பார்த்து அவர் முழக்கமிடுகிறார்.

'வல்லமை கொண்டு புதிய
வளம் பெற
வந்தாய் தமிழ்க்
குலமே! உனை

(13-ம் பக்கம் பார்க்க)


## உங்கள் வியாதி எதுவானாலும் திர்த்துத் தருகிறோம்



நரம்பு பலவீனம், பெலக்குறைவு, குஞ்டிக்காய், மூத்திரப்பை கோளாறுகள், அசுத்த இரத்தத்தால் ஏற்படும் பண்புறைகள், பற்றுகள், க்ஷயரோகம், இளைப்பு, இருமல், வலிப்பு, தீராத வயிற்று வலி, வாதம், வயிற்றுக் கோளாறுகள், பித்த, காமாலை, சோகை, பாண்டு, அண்டவாய்வு, இரத்த மூலம், சீழ்மூலம், வெளி மூலம், பெண்களுக்கு ஏற்படும் சூதகக் கோளாறுகள், கெர்ப்பக் கோளாறுகள் இன்னும் பல டாக்டர்களால் கைவிடப்பட்ட நாட்பட்ட வியாதிகளினின்று பூரண குணமடைவதற்கு உடனே காலதாமதமின்றி புகழ்வாய்ந்த ஆயுர்வேத டாக்டர் T. H. மதுரநாயகம் வைத்தியராஜ் M.D. MS. (H) Cal. அவர்களைக் கலந்தாலோசியுங்கள்.

63 வருட பரம்பரை வைத்திய நிபுணர்.

ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு, கொழும்பு.


## கவிதைப் பூங்கா

# தமிழின்பம்!

—வழூத்தூர்—ஒளியேந்தி—

சுவை கொண்ட இன்பத் தமிழென்று சொல்லின்
சுரம் கொள்ளும் உள்ளப்; அது போல
நவை கண்ட மேனி நளிர்தென்றல் பூச்சில்
நலமார்ந்து இன்பத் தேன கொள்ளும்;
துவைந்தென்றும வாட்டும் துயர்நீங்கி வாழ்வில்
துணிவூட்டுங் கொள்கை மிக மேவும்;
இவையெல்லாம் எங்கள் இனிதான தூய
தமிழாலே என்போம்! புகழ்கொள்வோம்!

மதுபோதை யூட்டும் மலர்மஞ்ச இன்பம்
மடிமீதில் கொஞ்சி குதித் தாட
புதுபோதை கூட்டும் புனல்நீரின் தண்மைப்
புரந்திங்கே எங்கள் புயமாகி
பொதுவாழ்வில் கூட புனைந்தாடி நின்று
பொருந்தாத கொள்கை பொடியாக்கி
விதிசெய்யும் நல்ல வினைசெய்யும் எங்கள்
விறல் கொண்ட இன்பத் தமிழ் என்போம்!

தமிழென்னும் போதில் தழலாவோம் சூழ்ச்சித்
தனைதெய்த்து வீரக்கலை செய்வோம்!
தமிழென்னும் போதில் புலியாவோம்; தீயர்
தலைசாய்த்து தர்மநெறி நெய்வோம்!
தமிழென்னும் போதில் புயலாவோம்; மூர்க்கத்
தனம்வென்ற தீரச்செயல் கொள்வோம்!
தமிழென்னும் போதில் தகையாவோம்; இன்பத்
தளம் கொள்ளும் அன்புப் புலம் ஆவோம்!!

—— | ஃ | ——

# வெற்றி காண்போம்

—வெற்றி வேந்தன்—

பேரன்பு கொண்டோரே பெரியோரே எம்
பெருங்குடியின் தாய் தந்தை தங்கையோரே!
தீராத துயர் அழுத்த மனம் வெதும்பித்
திகைக்கின்ற என்னருமைத் தமைக்கையோரே!
வீராப்புக் கொண்டு தமிழ்க்குடியை வீழ்த்த
வீணர்களும் செயும் சூழ்ச்சி தனை ஆற்றுது
ஊர் ஒப்பத் தமிழ்க்குடியை காத்து நிற்க
உவந்தெழுந்த தம்பியரே தமையன்மாரே!

தட்டியே கேட்பவர் இல்லை என்று
தலைவிக்கம் மிகக் கொண்ட சூழ்ச்சியாளர்
முட்டியே பார்க்கின்றார் தமிழன் மீது
முடிந்தவரை திணிக்கின்றார் சிங்களத்தை
எட்டியைப் போன்ற மனக் கோலம் பூண்டு
இடர்செய்து நமைப்பழிக்கும் இடும்பரெல்லாம்
வெட்டிய மரம்போல வீழ்வதற்கு
வீறு கொண்டெழுந்திடுவோம் வெற்றி
காண்போம்.

காதலுக்கு தனியிடம் தந்தும்பின்னே
காவியங்கள் கவிதை பல கொடுத்தும் இன்னும்
மாதருக்கு மதிப்பு பல தந்தும் நல்ல
மனதோடு பிறர் போற்ற வாழ்ந்தும்—மேலும்
பேதலித்த உள்ளமே கொண்டு வாழும்
பேடிகளைத் திருத்தியதும் யாரோ—போரில்
சாதலுக்கு அஞ்சாத மறவன் வையம்
தலைநிமிர்ந்து வாழ்வதற்கு வெற்றி காண்போம்.

நாய்களுக்கும் குரைப்பதற்கு உரிமை உண்டு
நரிகளுக்கும் ஊளையிட தடையோ இல்லை,
பேயிருட்டில் சிறு எலியை தேடும் பூனை,
பெரும்புலியும் தன்மொழியில் கத்தும் போது
தாய் மொழியாம் தமிழிலே எழுதப் பேச
தமிழனுக்குத் தடை போட்டு—நேர்மை நீதி
வாய்ப்பளிக்க மறுக்கிற கூட்டத்தாரின்
மதிவென்று தமிழினத்தின் வெற்றி
காண்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இ. முருகையா,**
பலாங்கொடை

கே: நான் ஒரு துப்பறியும் நாவல் எழுதியுள்ளேன். அதைச் சுதந்திரனுக்கு அனுப்பினுல் பிரசுரிப்பீர்களா? தொடர் கதையாகத் தொடரும். அனுப்பலாமா?

ப: தாராளமாக அனுப்புங்கள். இங்கே பழைய பேப்பருக்கு பெரும் பஞ்சம். உங்களின் தொடர் கதை தொடரும் அளவுக்கு பழைய பேப்பர் கடைக்காரனுக்கு இலாபமே.

ஃ

சி. அருள்மயம்,
கல்முனை

கே: ஓர் ஆண் உடற்பயிற்சிப் போதனுசிரியர் இருக்க வேண்டிய இடத்தில், (ஆணுக்குப் பதிலாக) ஒரு பெண் உடற்பயிற்சிப் போதனுசிரியை வைத்துக் கொண்டிருக்கும் ஒரு பாடசாலை அதிபரையிட்டு நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: உடற்பயிற்சிக்காக அமர்த்திக் கொண்டிருக்கிருரோ!

ஃ

ச. பகீதரன்,
தெகிவளை

கே: அடுத்து வரும் பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத் தொகுதிக்குத் தனிப் பெருந் தலைவரும், அவரது மருகரும் போட்டியிடுவார்களா?

ப: வழக்கம் போல போட்டியிடக்கூடும். ஆனுல் மண் கவ்வுவதில் இருவருக்கும் அடுத்த தடவை போட்டியிருக்காது.

கே: எனக்கு வயது 24 ஆகியும் தொழில் கிடைக்கவில்லையே, என்ன செய்வது? எஸ். எஸ். சி. பாஸ் பண்ணி 6 வருடம்!

ப: வயது 24க்கு முன்போ பின்போ உங்களுக்குத் தொழில் கொடுப்பதாக யார் வாக்குறுதியளித்தது? எஸ். எஸ். சி. சித்தி பெற்றதும் வேலை தருவதாக யாராவது உங்களிடம் கூறியதுண்டா?

ஃ

இ. தயாநிதி,
ஆனைக்கோட்டை

கே: நான் ஒரு போராட்டம் தொடங்கப் போகிறேன். உமது கருத்து என்ன?

ப: தொடங்குவதென்ன? இப்பொழுதும் கூட போராடிக்கொண்டுதானே இருக்கின்றீர். போராட்டமின்றி எந்த மனிதனும் வாழ முடியாது.

ஃ

ம. ச தம்பையா,
பண்டத்தெருப்பு

கே: நாங்கள் எத்தனையோ லட்சம் பேர் தாய்மொழி பறிபோகுதென்று கவலை கொண்டு இருக்கும் நேரத்தில் நீங்கள் மூன்று பேர் எந்த நேரமும் சிரித்துக் கொண்டு இருப்பதற்குக் காரணம்?

ப: கவலைப் பட்டுக்கொண்டிருந்தால் காரியம் நடக்காது. எனவே சிரித்து, கவலையைப் போக்கி விட்டால், துணிவுடன் மொழியுரிமைக்காகப் போராடுவீர்களல்லவா?

ஃ

வே. மகேந்திரன்,
கொழும்பு-12

கே: உத்தியோகத்திற்காகச் சிங்களத்தைப் படித்துக் கொண்டே சிங்களத்தை எதிர்க்கும் தமிழ் ஊழியர்களை எதற்கு ஒப்பிடலாம்?

ப: தொண்டைக்குத் தெரியாமல் மருந்து உண்ண முடியுமா? அவர்கள் பிறரை ஏமாற்றுவதற்காகத் தங்களையே ஏமாற்றிக் கொள்கிருர்கள்.

ஃ

ச. நடராசா,
காரை நகர்

கே: 16-2-64 சுதந்திரன் மஞ்சள் நிறத்தில் வெளியிடப்பட்டதற்குரிய காரணம் என்ன?

ப: மங்களகரமான மஞ்சளில் மட்டுமென்ன! சிகப்பு, நீலம், பழுப்பு நிறத் தாள்களிலும் பத்திரிகைகள் அச்சிடப்படுகின்றன. காரணம் காகிதப் பஞ்சம். காகிதச் சந்தையில் சக்கரவர்த்திகளாக விளங்கும் சில ஏகபோக உரிமையாளர் அரசாங்கத்தின் மைத்ரீயிக்குப் பாத்திரமாகியிருப்பதும் பஞ்சத்துக்கு ஒரு காரணமாம்.

ஃ

செல்வி இந்திரமலர்,
தொம்பவளை

கே: எல்லா மக்களையும் சிங்களத்தைப் படிக்கச் சொல்லும் அம்மையார், தன் மகளை இங்கிலாந்திற்குப் படிக்க அனுப்பப் போகிருரே ஏன்?

ப: அனுப்பவில்லை என்று கல்வி மந்திரி கூறிவிட்டார். இதெல்லாம் அரசியல் வாண வேடிக்கையென்றும், மகளை அனுப்பப் போவதாகக் கூறி பிறகு அனுப்புவதை நிறுத்திவிட்டதாகக் கூறி ஒரு பெரிய

ரையையோ சுதந்திரனில் பிரசுரிக்கத் தகுதியானதெனத் தெரிவு செய்தல்—மற்றது அதனைச் சுதந்திரனில் பிரசுரித்தல்.

ஃ

க. திலீப் தோமஸ்,
உடபுசல்லாவ

கே: தாய் மொழியைக் காப்பதற்கு, நான் தொண்டர் படையில் சேரவிரும்புகிறேன். அதற்கு என்ன செய்யவேண்டும்? எப்படிச் சேர வேண்டும்?

ப: ஒரு தமிழரசு எம். பிக்கோ தமிழரசுக் கட்சி அலுவலகத்துக்கோ எழுதுங்கள்.

ஃ

க. சிவஸ்கந்தா
வட்டுக்கோட்டை

கே: கேள்விகளுக்குப் பதில் எழுதுவதில் சில வேளையில் சிரமப்படுவது உண்டா குயுக்தியாரே?

ப: வாசகர்களின் கேள்விகளுக்குப் பதில் கூறுவது

## "அந்தி வானம்"

—ராஜே[illegible], நெடுந்தீவு—

பொங்கிவரும் அலைகடலின் புறத்தே யோர் நாள்
போயிருந்தேன் புதுமை யின்பம் காண வென்று
செங்கதிரோன் தன் செயலும் குறைந்த தன்மைச்
சோதியை இவ்வுலக மெங்கும் செல்ல விட்டான்
தங்கமென ஆகியது மேலே வானம்
தகதகென்று விரியது கதிரின் சோதி
மங்காத அழகுதனை அங்கு கண்டேன்
மனமெலாம் பறிகொடுத்து மயங்கி நின்றேன்.

செஞ்சடையெம் பெருமானுர் சென்னிமீது
சிங்கார மாகஇளம் பிறையைத் தாங்கி
கங்கை யென்னும் மங்கையையும் அங்குதாங்கி
கைகளிலே அங்கியுநல் மழுவுந்தாங்கி
பங்கமிலா உமைதன்னைப் பாகம் வைத்து
பணிகளெனப் பாம்புகளைத் தாங்கி நின்று
செங்காலைத் தூக்கி இந்த வையமுய்யச்
செய் நடனந் தனையங்கு கண்டு கொண்டேன்.

கரிய இருள் மெல்ல மெல்ல உலகந் தன்னைக்
கவிந்து வரும் காட்சியிலே கண்ணன் நின்ருன்
அரியபெரு மறைகளைத் தன் அகத்துள் தாங்கி
அவனியைக்காத் தருள் புரியும் கருணை வள்ளல்
கனிவு தரு கான வெள்ளம் அசைந்து ஆடும்
காற்றினிலே மிதந்து வந்து காதைத்தீண்ட
இனியதொரு சுகம் பெற்றேன் இன்பம் பெற்றேன்
இதயமெலாம் பூரித்துப் பொங்க நின்றேன்.

தியாகத்தைச் செய்துவிட்டதாகக் காட்டிக் கொள்வது மலிவான பிரசார வகையென்றும் திருமதி குயுக்தியார் கூறுகிருர்.

ஃ

செல்வம், எருவில்

கே: ஒரு சில தமிழ் ஆசிரியர்கள் சிங்களம் படிக்கிருர்கள், தமிழ்ப் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்களை நியமித்தால் நல்லது என்று தெருக்களில் கொக்கரிக்கிருர்களே ஏன்!

ப: உதவி ஆசிரியர்கள் சிங்களம் படிக்க வேண்டிய சட்டாயமில்லை. அப்படியிருந்தும் அவர்கள் படிப்பதாலை, அது அவர்களின் அடிமைப் புத்தியை விளம்பரப்படுத்தவே உதவும். சிங்கள ஆசிரியர்களை நியமிக்கும்படி கோருவதால் நாளடைவில் தமிழ் ஆசிரியர்களின் தேவை அற்றுப் போய்விடும்.

ஃ

ஆர். கோபால்,
பதுளை

கே: "சுதந்திரனு"க்கு கதை, கட்டுரை எழுதி[illegible] உண்டா?

ப: இரு பரிசுகள் உண்டு. ஒன்று கதையையோ கட்டு

சிரமமன்று. திருமதி குயுக்தியாரின் கேள்விகள் இருக்கின்றனவே, அவைதான் என்னைத் திணறடிக்கின்றன.

ஃ

கு. கோ. ராஜா,
நிவித்திகலை

கே: தமிழரசுக் கட்சியின் எதிர்வரும் போராட்டம் முன்னைய போராட்டங்களைப் போல் அடக்கி ஒடுக்கப்படுமா அல்லது வெற்றி பெறுமா?

ப: சாத்வீகப் போராட்டங்கள் அடக்கி ஒடுக்கப் படக் கூடியவை அல்ல. அடக்குமுறையின் கை ஓங்கும்போது அது ஓரடி பின்னுல் தள்ளப்படும். அடக்குமுறையின் கொடூரம் தணிந்ததும் அது மீண்டும் முன்னேறும்.

ஃ

வி. சண்முகலிங்கம்,
பலாங்கொடை

கே: பாரதத்தில் முக்கிய மந்திரிகள் எல்லோரும் காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்தும் முகமாகப் பதவிகளை ராஜுனுமாச் செய்திருக்கிருர்களே. இன்று நாடுள்ள நிலையில் அவர்கள் கட்சி நலனையே பெரிதென மதிக்கிருர்கள் என்று நான் எண்ணுகிறேன்!

ப: உண்மைதான் — கட்சி வலுவடைந்தால், பதவிகள் அனைத்தும் அவர்கள் கையில் பத்திரமாக இருக்குமென்பதும் உண்மைதான்.

ஃ

"கரிகாலன்"
தெல்லிப்பளை

கே: மாணவர்கள் அறப் போராட்டத்தில் பங்குபற்றலாமா?

ப: தமிழ் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்களை நியமிக்கும் போது, மாணவர்களும் போராட்டத்தில் பங்குபற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

கே: திருமணம் செய்த பின்பும் வேருெரு பெண்ணைக் காதலிக்கும் ஆண்கள் எப்படிப்பட்டவர்கள்?

ப: அவர்கள் மாடு போன்றவர்கள். இக்கரையிலுள்ள மாடு அக்கரையில் பச்சையைக் கண்டு அங்கு செல்லத் துடிக்கும் அங்கு சென்ற பிறகுதான் தெரியும் இரு கரையும் ஒரு மாதிரியானதென்று.

ஃ

ஆர். சந்தானம்,
கல்லாறு

கே: வருங்காலத்தில் பிறப்பவர்களின் தலை பெரிதாக இருக்குமாமே? நீர் என்ன சொல்லுகிறீர்?

ப: வருங்காலத்திலென்ன? இக்காலத்திலேயே சிலருக்குத் திடீரெனத் தலை வீங்கி பெரிதாகி விடுகிறதே!

ஃ

எஸ். கே டீன்,
திருகோணமலை

கே: குடியேற்ற வெளியேற்ற சட்டத்தைத் திருத்தியமைக்க, ஓர் வழிகாட்டியாகப் பிரகாசிக்க நினைத்து ஒன்றரை வருடகாலமாக, கொம்பெனி வீதி முகாமிலிருந்த ஜனுப் அப்துல் லதீபை முன்னறிவித்தலின்றி நாடு கடத்த வேண்டிய காரணம் என்ன?

ப: ஐயா, இது பெரிய இடத்து விஷயம். இலஞ்சம் கொடுப்பதும் ஒரு குற்றம் என்பது உங்களுக்குத் தெரியுமா?

ஃ

'மறத்தமிழ் மகன்',
இராமநாதபுரம்

கே: யான் காதலித்த பெண்ணை வேருெருவர் காதலிக்கிருர். நான் என்ன செய்வது?

ப: "நீ யாரைக் காதலிக்கிருய்" என்று ஒரு வார்த்தை அந்தப் பெண்ணிடம் கேட்க முடியுமானுல் உங்கள் கேள்விக்கு விடை கிடைத்து விடும்.

ஃ

ந. அரசு, பதுளை

கே: நான், இராவணன் ஆண்ட இலங்கை வேறு, நாமிருக்கும் இலங்கை வேறு என்றும், இராவணன் ஆண்ட இலங்கை கடலால் அழிந்தது (லெமூரி கண்டம்) என்றும் கூறுகிறேன். உமது விளக்கம் என்ன?

ப: அதே இலங்கைதான். சில பகுதிகளைக் கடல் விழுங்கிவிட்டதற்கு ஆதாரங்கள் சில உண்டு.

கே: காஷ்மீர் பிரச்சினை காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டதே ஏன்?

ப: காஷ்மீர் பிரச்சினை என்றுமே ஒத்திவைக்கப்படவில்லை. தீர்ப்பைத்தான் ஒத்தி வைத்துக் கொண்டேயிருக்கிருர்கள்.

ஃ

எம். எம். மர்ஜூ,
கிண்ணியா-9

கே: ஒரு தினசரி தரகர் வேலையில் ஈடுபட்டுள்ளதேன்?

ப: ஏன் பயப்படுகிறீர்? "மாமா" வேலை என்று பகிரங்கமாகக் கூறலாமே!

திருவாளர்
**குயுக்தியார்**
சே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் [illegible] திருமதி [illegible] குயுக்தியாருக்கு எடுக்கப்படும்.





பக் கில்லர்

மந்திர சக்தி போன்று

மூட்டைகளை

கொன்று விடுகிறது.

கரப்பொத்தான்கள், சிலந்திப் பூச்சிகள், எறும்புகள், படுக்கை மூட்டைப் பூச்சிகள், மற்றும் ஊரும் பூச்சிகளிலிருந்தும் பாதுகாக்க இதோ உத்தரவாதத்துடன் கூடிய மருந்து. பக் கில்லர். இதில் மலாத்தியான், டில்ட்ரன், பிரிந்ரின்ஸ் ஆகியன அடங்கியுள்ளன.

ஸ்ப்ரே இணைப்புடன் கூடிய கைக்கு கந்த போத்தலாக கிடைக்கும்.




இன்றே உங்கள் வியாபாரியிடம் ஒரு போத்தல் வாங்குங்கள்-

ஏக விநியோகஸ்தர்கள்:
லூயிஸ் பிரவுண் அன் கம்பெனி லிமிட்டெட்,
மக்கலம் ரோடு, கொழும்பு.
BAI


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளவந்தார் இனிமேலும் ஏமாற்ற வேண்டாம்

# தவறை உணர்ந்து திருந்திக் கொள்ளட்டும்

## முடிவைச் செயலில் உறுதியாக்கட்டும்

**பேச்சுவார்த்தை, சமரச முயற்சி என்று ஆட்சியாளர் பல தடவைகள் கூறி, தமிழ் பேசும் மக்களை ஏமாற்றியுள்ளார்கள். ஏமாற்றத்தின் பயனாக தமிழர்கள் இதயத்தில் எரிச்சலையும் எதிர்ப்பையும் கிளப்பிவிட்டுள்ளது. இனியாவது ஆளவந்தார் தமது தவற்றைத் திருத்திக் கொள்ள வேண்டும். நல்லதொரு முடிவுக்குச் சீக்கிரம் வர வேண்டும். தவறினால்; விளைவுகள் நிச்சயம் பாரதூரமானதாகத் தானிருக்கும். இது வெறும் பயமுறுத்தலல்ல. நன்மையை விரும்பும் தமிழ் பேசும் மக்களின் பயன் மிகு எச்சரிக்கை.**

தீவே ஆறுதல் பெருமூச்சு விட்டது அரசாங்கத்தின் முடிவைக்கேட்டு. காலங் கடந்த முடிவுதான். ஆனாலும் இப்போதாவது புத்தி நேர்ப்பட்டதே என்றுதான் சிந்திக்கும் ஆற்றல்படைத்த எந்த மனிதனும் கூறுவான். இப்படி எல்லோருடைய கவனத்தையும் ஏககாலத்திலே கவர்ந்த அந்த முடிவுதான் என்ன?

1955-ம் ஆண்டு சேர். ஜோன் பிரதமராகவிருந்த காலத்தில் பரபரப்போடு தொடங்கி 1956 ஜூன் மாதம் உச்சநிலையை அடைந்து அதன் பிறகு இன்றுவரை பல கசப்பான சம்பவங்களுக்கும் காரணமாயிருந்துவரும் மொழிப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க ஒருசர்வகட்சிவட்டமேசை மாநாட்டைக் கூட்ட வேண்டும் என்ற அரசாங்கத்தின் தீர்மானம் தான் அது.

### யார் குற்றம்?

இந்தத் தீர்மானத்தைக் கேட்டதும் தமிழ் மக்கள் மகிழ்ச்சி கலந்த திருப்தி காட்டினார்களா என்று கேட்டால்—அல்ல, அலுப்புக் கலந்த அசட்டை காட்டினார்கள் என்றுதான் கூறவேண்டும். 'பேச்சென்ன பெரிய பேச்சு! இத்தனைகாலமும் பார்த்த பேச்சுத்தானே? இதனால் வீண்கால தாமதமின்றி வேறுபலன் கிடையாது' என்று அவர்கள் அதிருப்தியுடன் கூறினால் அதற்காக அவர்கள் சமாதானத்தை வெறுக்கும் கலகப் பிரியர்கள் என்று எவரும் குற்றம் சுமத்திவிடமுடியாது. அவர்களை அப்படி

**அறிவழகன்**

எண்ணும்படி ஆக்கிவிட்ட கடந்தகால திகழ்ச்சிகளுக்குக் காரணமாயிருந்தவர்களைத்தான் குற்றவாளிகளாகச் சுட்டிக்காட்டவேண்டும்.

பலமுறை விவாகம் நிச்சயிக்கப்பட்டு மாப்பிள்ளை அழைப்புவரை எல்லாம் சரியாக நடந்து பின்னர் ஒவ்வொருதடவையும் கடைசி நேரத்தில் மாப்பிள்ளை வீட்டுக்காரர் எவராவது காட்டும் அற்ப காரணத்திற்காகக் கல்யாணம் தடைபட்டுத் தடைபட்டுப் போனால் கல்யாணத்திற்கு நிற்கும் பெண்ணின் மனநிலை எப்படியிருக்கும்? கல்யாணம் ஒவ்வொரு தடவையும் நிறுத்தப்படுவதனால் ஏற்படும் அவமானம், அபவாதம், மனவேதனை இவையெல்லாவற்றையும் கண்டு அவள் கலங்கி, விவாகம் என்றதுமே வேதனை கலந்த வெறுப்புக் காட்டினால் அது அவள் குற்றமாகுமா?

இந்த அரசாங்கம் கடந்த காலத்தில் செய்த எத்தனையோ நம்பிக்கைத்துரோகங்கள், நம்பிக்கை மோசங்கள் தமிழ்மக்களை மேற்கூறிய பெண்ணின் மனநிலையிலேதான் கொண்டுவந்து நிறுத்தியிருக்கின்றன. 'பேச்சுவார்த்தையா? வேண்டாமே? மீண்டும் ஒரு ஏமாற்றத்திற்கு நாம் தயாராகஇல்லை' என்றுகூறுமளவிற்குக் கசப்பு வளர்ந்துவிட்டது. பதவிக்கு வரவிரும்பும் ஒவ்வொருவரும் உருட்டும் பகடையாகத் தன் தலைவிதிமாறிவிட்ட பரிதாபத்தைக் கண்டு நொந்து நொந்து மரத்துவிட்ட தமிழன் மனம் சமரசமென்றதும் செவிசாய்க்க மறுத்தால் அது அவன்குற்றமாகுமா?

### பின்னணி

காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா சிங்களம் மட்டும் சட்டத்தைப் பாராளுமன்றத்திலே நிறைவேற்றிய கையோடு தமிழ் மக்களின் உரிமைகளைப்பாதுகாக்கும் ஒரு சட்டத்தைத் தயார் செய்தார். ஆனால் லட்சக்கணக்கான மக்களின் உரிமைகளை மறந்து இருகைதேர்ந்த வகுப்புவாதிகளின் உண்ணாவிரத மிரட்டலுக்குமுன் மண்டியிட்டார். முடிவு? அந்தச்சட்டம்பாராளுமன்றத்தை எட்டிப்பார்க்காமல் கருவிலேயே சிதைந்தது. சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்ட மகிழ்ச்சிக்கடலிலே சிங்கள மக்கள் மூழ்கியிருக்கும் போதே அந்தச்சட்டம் சட்டமாகியிருக்கலாம், தமிழர்களுடைய உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் காலஞ்சென்ற பிரதமருக்கு இருந்திருந்தால். ஆனால் வகுப்புவாதிகளின் கட்டளைக்கு அவர் பணிந்துபோனவேகத்தையும் சிரத்தையையும் பார்க்கும்போது தொட்டிலையும் ஆட்டிவிட்டுத் தொடையையும் கிள்ளிவிட்டவர் அவரேதானோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

அடுத்தவருடம்—1957 தமக்கிழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகச் சட்ட மறுப்பு இயக்கம் தொடங்கப்போகிறார்கள் தமிழர்கள் என்றதும் தான் விழிப்பு ஏற்பட்டது, காலஞ்சென்றபண்டாரநாயக்காவுக்கு. உடனே சுறுசுறுப்படைந்தார். தமிழ்ப் பிரதிநிதிகளை அழைத்து வைத்துப் பேசினார். ஓர் உடன்படிக்கையும் எழுதிக் கைச்சாத்திட்டார்கள். அதுதான் இன்றுவரை உயிர்கொடுக்கப்படாமலிருக்கும் பண்டா-செல்வா ஒப்பந்தம்.

### தாமதம் பொறுமை...

மீண்டும் ஒருவருடம் ஓடிற்று. ஒப்பந்தம் வெறும் காகிதஒப்பந்தமாகவேகேட்பாரற்றுக் கவனிப்பாரற்றுக் கிடந்தது. ஆனால் சிங்களச் சட்டமோ சகல துறைகளிலும் சதிராடத் தொடங்கியது. வெறிபிடித்து வேகமாகப் பரவியது. ஒப்பந்தம் இன்று அமுலாகும் நாளை அமுலாகும் என்று காத்துக்கிடந்த தமிழ்மக்களைத் தாமதம் பொறுமையை இழக்கச் செய்தது. சிங்களச்சட்ட அமுலில் தீவிரவாதிகள் காட்டிய தீவிரம் அவர்களைத் திக்குமுக்காட வைத்தது.

'பண்டா-செல்வா ஒப்பந்தத்திற்கு உயிரூட்டப்படாவிட்டால் ஒத்திவைக்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கம் தொடங்கப்பட்டுவிடும்-போதியளவு பொறுமை காட்டியாயிற்று' என்று பகர்ந்தனர் தமிழ்த் தலைவர்கள். இப்படியவர்கள் கூறியது உண்மையாகவே பொறுக்கவில்லையோ அல்லது இப்படி ஏதாவது கூறட்டும், அதையே சாட்டாக எடுத்துக் கொள்ளலாம் என்றுதான் காத்துக்கிடந்தார்களோ என்னவோ? உடனே தமிழருக்கெதிராக வகுப்புவாதக் கூச்சல் தெற்கே கிளம்பியது.

### இருவர் கையில்...

பண்டா-செல்வா ஒப்பந்தம் தாங்கிநிற்பது, கேவலம் சின்னஞ்சிறு உரிமைகள் தாம். அவற்றையாவது இப்போதைக்குப் பெறுவோம். போகப் போகப் பார்க்கலாம் என்றுதான் கருதினார்கள் தமிழர்கள். ஆனால் அந்த உரிமைகளைக்கூடத் தமிழன் அநுபவிக்கக்கூடாதென்றே கருதினார்கள் சிங்கள வகுப்புவாதிகள். பலன்? அரசியல் வானிலே திடீரென்றுதோன்றிச் சிலகாலம் அட்டகாசத்துடன் பிரகாசித்துப் பின் எரி நட்சத்திரமாகிவிட்ட ஒரு பெண்மணியும், அன்றைய சக்திவாய்ந்த பிக்கு ஒருவரும் தலைமைதாங்கச் சில நூறு பிக்குகள் செய்த நிர்ப்பந்தத்தால் பலலட்சம் மக்களுடைய தலைவிதி மீண்டும் திருப்பப்பட்டது. ஆமாம்! ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது!!

அதைத் தொடர்ந்து தமிழ்ப் பகுதிகளிலே சிறு எதிர்ப்பு நடந்ததும் அதன் எதிரொலியாகத் தமிழனுடைய இரத்தம்—புத்த ஜயந்தியைச் சோலாகலமாகக் கொண்டாடிய வீதிகளிலே—வெள்ளமாக ஓடியதும், நாகரிகம் படைத்த எவரும் பேச நாக்கூசும் சம்பவங்கள் நடந்ததும் உலகறியும்.

### சந்தேகம்

தமிழனுடைய கிளர்ச்சியை ஒப்பந்தம் என்றபெயரிலே அடக்கிவைத்து, ஓராண்டு சென்றபின் அது கிழித்தெறியப்பட்டு, அதைத் தொடர்ந்து திட்டமிட்டவைபோலபிக்குகளின் தலைமையில் நடந்தசம்பவங்கள், தமிழனுடைய உயிரையோ உடைமையையோ பண்டாரநாயக்கா பாதுகாக்க எடுத்துக்கொண்ட அசட்டை ஆகியவற்றையெல்லாம் கூட்டிக் கழித்து வகுத்துப் பார்த்தால் தீயசக்திகள் தமிழனுக்கெதிராகத் தயார் படுவதற்கு அவகாசமும் ஊக்கமும் ஏற்படுத்தித்தந்தவர்கள் அன்று ஆட்சியிலிருந்தவர்களே தானோ என்ற தீராத சந்தேகத்தைத் தமிழன் மனதிலே உண்டாக்கியது. அப்படியும் சந்தேகிக்கலாமா என்று எவராவது குறைப்பட்டால் 'மன்னிக்கவும்' என மரியாதைக்காகச் சொல்லமுடிகிறதே தவிர, மனமாற, நெஞ்சாறக் கூற முடியவில்லையே. பின்பும் ஒருவருடம் 1959-பிக்குகளினால்-பதவிக்குவந்து, அவர்கள் அசைத்த அசைப்புகளுக்கெல்லாம் அசைந்து கொடுத்து அவஸ்தைப்பட்ட பண்டாரநாயக்கா பிக்கு ஒருவராலேயே சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து தகநாயகா பிரதமரானார்.

### ஏறிவந்த ஏணி...

'சிறுபான்மையினர் சிலகாலமாகத் துன்புற்று வருகின்றனர். அதையெல்லாம் நான் நிவர்த்திசெய்வேன். என்று சொன்னார். தமிழன் மனதிலே நம்பிக்கை துளிர்விட்டது. நாலேநாலு நாட்கள் தான். அவர் கக்கிய வகுப்புவாத நஞ்சிலே அந்த நம்பிக்கைச் செடி கருகியது.

அதற்கும் அடுத்தவருடம்--1960. தேர்தலிலே வெற்றி பெறுவோமா? மாட்டோமா? என்று இன்று ஆளுவோர் தடுமாறிக்கொண்டிருந்த தருணம். தமிழரசுக் கட்சியின் ஆதரவு அத்தியாவசியம் என்று கருதப்பட்ட நேரம். தெற்கே வாழும் தமிழர்களுடைய வாக்குகளின் அவசியத்தை உணர்ந்த வேளை. ஓடி ஓடி வந்தார்கள் தமிழ்த் தலைவர்களிடம். கூடிக் கூடிப் பேசினார்கள். பதவிக்கு வந்தால் பண்டா-செல்வா ஒப்பந்தத்திற்கு உயிரூட்டுவோம் என்று இன்று பொறுப்புள்ள மந்திரிகளாயிருக்கும் சிலர், தோடம்பழச்சாறு சாட்சியாக ஒரு கனவான்கள் ஒப்பந்தம் செய்தார்கள். பதவிக்கும் வந்தார்கள். ஆனால் அவர்கள் தங்களைக்கனவான்களாகக் கருதவில்லையோ என்னவோ, ஒப்பந்தம் நூலறுந்த காற்றாடியாகத் திசைகெட்டுப் பறந்து மறைந்தது. தோடம்பழச்சாறென்ன? தேவாதிதேவர்கள் சாட்சியாகத் தந்த வாக்குறுதிகளைக்கூட மீறுவோமே நாங்கள் என்ற தோரணையில் நடந்துகொண்டார்கள். ஏறிவந்த ஏணிஎட்டிஉதைக்கப்பட்டது.

### தவறென்ன?


மீண்டும் வருடம் ஒன்று ஓடியது—1961, இனி எவரையும் நம்பிப் பயனில்லை என்று கருதிய தமிழர்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தினார்கள். போராட்டம் நிறுத்தப்பட்டால் பேச்சுவார்த்தை என்றார்கள். எதுவித உறுதியுமில்லாமல் இனிமேலும் போராட்டத்தைக் கைவிடத் தயாராயில்லை என்றனர் தமிழ்மக்கள். மரியாதையைக் காப்பாற்ற வேண்டிக்கூட அரசாங்கம் எதுவிதசமரசமுயற்சியிலும் இறங்கவேயில்லை. பேச்சுவார்த்தை என்பதெல்லாம் பொய். சத்தியாக்கிரகத்தை நிறுத்தக்கையாண்டவெறும் தந்திரம் இது என்றுதமிழன் கருதியதில் தவறென்ன?

அடுக்கடுக்காக இத்தனை ஏமாற்றங்களுக்குப்பின்னும் பேச்சுவார்த்தை என்றதும் 'போதும் போதும்! எங்களை அவமானப்படுத்தியது ஏழேழு தலைமுறைக்கும் போதும்!' என்று தமிழன் கூறினால் அவனை எவராவது குற்றம்கூற முடியுமா?

### புதிய ஞானம்

மீண்டும் இன்றைக்கு நாட்டு நிதி நிலைமை நெருக்கடியடைந்திருக்கும் சமயத்திலே, விலைவாசிகள் தலைகரணமாய் உயர்ந்து நாட்டு மக்களுக்கு ஆட்சியிலிருப்பவர் பால்அதிருப்திஏற்பட்டிருக்கும் வேளையிலே, ஆளுவோருக்கு 'அரோகரா' என்று கடந்த இடைத்தேர்தல்கள்பட்டைநாமம்சாத்திவிட்டபோதிலே, என்னே திடீரென்று தீர்ந்துவிட்டதே (ஒருதலை

(13-ம் பக்கம் பார்க்க)


ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜா பீடி கம்பனி
கொழும்பு 14.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிப் பிரச்சினையில் தீர்வுகாண

## சமஷ்டி ஆட்சியை நிறுவ தமிழரசார் முயற்சி

## இலங்கையின் மீது படையெடுப்பு எந்நேரமும் நடைபெறலாம்

"மொழிப் பிரச்சினையைத் தீர்க்கத் தமிழரசுக் கட்சி பிரதம மந்திரியிடம் சமர்ப்பித்துள்ள கோரிக்கைகளின் நோக்கம் வட, கிழ் மாகாணங்கள் உட்பட்ட ஒரு சமஷ்டி ஆட்சியைத் தனியாக நிறுவிக்கொள்வதற்கு அடிப்படை அமைத்துக்கொள்வது தான் என்று தெரிகிறது." இவ்வாறு ஒருசெய்தியை "ரிவி தின" (தவஸ நிறுவனத்தைச் சேர்ந்த ஞாயிறு இதழ்) 23-2-64ந் திகதி முதற் பக்கத்தில் முதற் செய்தியாகப் பிரசுரித்துள்ளது. "மொழியைக் கருவியாகக் கொண்டு தமிழ் அரசொன்றினை நிறுவும் முயற்சி" என்று இச் செய்திக்குத் தலைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

இச் செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

'பிரதமரிடம் தமிழரசுக் கட்சி கோரியுள்ள முக்கியமான கோரிக்கைகளாவன:-

(1) வட, கிழ் மாகாணங்களின் நிர்வாகம் தனித் தமிழில் நடைபெறவேண்டும்.

(2) வட, கிழ் மாகாணங்களில் தபால் விவகாரம் பற்றிய எல்லாவிதமான படிவங்கள் உட்பட தஸ்தாவேஜுகள் அனைத்தும் தனித்தமிழில் மட்டுமே அச்சிடப்பட வேண்டும்.

(3) அரசாங்கம் வட, கிழக்கு மாகாண மக்கள் அனைவருடனும் நடத்தும் கடிதப் போக்குவரத்துக்கள் எல்லாம் தனித் தமிழில் மட்டுமே நடைபெறவேண்டும்.

### சிங்கள இதழ்களில்...

(4) இவ்விரு மாகாணங்களில் உள்ளூராட்சி மன்றங்களினதும், உத்தேசமாவட்ட சபைகளினதும் நிர்வாகம் தமிழில் நடத்த உரிமை வேண்டும்.

(5) மத்திய அரசாங்கத்துக்கும் மாவட்ட சபைகளுக்குமிடையே தொடர்பு தமிழில் இருத்தல் வேண்டும்.

(6) தமிழ்ப் பிள்ளைகள் தமிழில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும்.

(7) தமிழாசிரியர்களினதும் ஏனைய தமிழ் அரசாங்க ஊழியர்களினதும் சம்பளம் காசோலைகள் மூலம் செலுத்தப்படுமாயின், அந்தக் காசோலைகள் தமிழில் எழுதப்பட வேண்டும்.

தமிழரசுவாதிகள் இக் கோரிக்கைகளிலிருந்து எதிர்பார்ப்பது, வட, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் ஒரு சுதந்திர ஆதிபத்தியத்தை நிறுவுவதற்கான ஒரு நிலைமையை அரசாங்கத்தின் வாயிலாக ஏற்படுத்திக்கொள்வதுதான்.

ஆனால் வட, கிழக்கு மாகாணங்களின் நிர்வாகத்தைத் தமிழில்மட்டும் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முற்றாக நிராகரித்து விடுவதென மந்திரி சபை முடிவுசெய்திருப்பதாக அறியப்படுகிறது.

பொதுமக்களின் உபயோகத்தை முன்னிட்டு அரசாங்கத்தின் எல்லாவித 'படிவங்களை'யும் மும்மொழியிலும் அச்சிட அரசாங்கம் விரும்புகிறது.

#### நேரு பிக்குவிடம் கூறியவை

'இலங்கைவாழ் இந்தியர்களை முதலில் பதிவுசெய்து கொண்டு, பின்னர் சிறு சிறு கோஷ்டிகளாக கூச்சல், கிளர்ச்சி எதுவுமின்றி மாதா மாதம் இந்தியாவுக்கு அனுப்பிவைக்க ஏற்பாடு செய்வதானல் இந்தியப் பிரதமர் நேரு மகிழ்ச்சியடைவார்' என்று இலங்கைப் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இலங்கை வந்துள்ள பாரத பௌத்த நாயக்க தேரோவும், சாஞ்சி விகார அதிபதியுமான ஹென்டிகல்லே பஞ்ஞதிஸ்ஸ தேரோ கூறியதாக ஒருசெய்தியை தவஸ 24-2-64ந் திகதி பிரசுரித்துள்ளது.

இப்பத்திரிகை இதுபற்றி மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

'தங்களுக்குத் தனியரசு வேண்டுமென தென்னிந்திய மக்கள் இந்திய அரசாங்கத்தைச் சதா வற்புறுத்திக் கொண்டிருப்பதால், இலங்கை இந்தியப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்படாவிட்டால், தனக்கு எதிர் காலத்தில் இன்னும் கடுமையான பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டிய நிலைமை ஏற்படுமென்றும், இலங்கைக்கும் ஆபத்து ஏற்படக் கூடுமென்றும் நேரு தன்னிடம் கூறியிருப்பதால், அது பற்றி பிரதமர் ஸ்ரீமா பண்டாரநாயக்காவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தவே தான் வந்திருப்பதாகப் பஞ்ஞாதிஸ்ஸ தேரோ கூறினர்.

இலங்கை—இந்திய உறவுகளுக்கு தீங்கு ஏற்பட முன்பே இலங்கை-இந்தியப் பிரச்சினை தீர்த்துக்கொள்ளப்படவேண்டுமென்றும், இந்திய அரசாங்கத்தைப் பயமுறுத்திக்கொண்டிருக்கும் தென்னிந்திய 'பலவேகயா'க்கள் இந்தப் பிரச்சினையின் மீது எந்தச் சமயத்திலும் இலங்கையின் வடபகுதியைக் கைப்பற்றிக்கொள்ளக் கூடுமென்றும் இலங்கை அரசுக்கும், இந்திய அரசுக்குமிடையே நல்லெண்ணம் நீடிக்கக்கூடியதாக இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்காக நாம் அனைவரும் பாடுபட வேண்டுமென்றும் பாரதப் பிரதமர் தன்னிடம் கூறியதாக நாயக தேரோ தெரிவித்தார்.

நேருஜியின்பேச்சைக்கேட்டதும் தனக்குக் கவலையும் பயமும் ஏற்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.'

வண பஞ்ஞாதிஸ்ஸ தேரோவுக்குப் பிரதமர் நேரு அழைப்பு அனுப்பி அவரைச் சந்தித்ததாகவும், அவரிடம் நேரு ஆசிபெற்றதாகவும், நேருவின் உடல் நலம் கோரி அவர் 'பிரித்' ஓதியதாகவும் 'லங்கா தீப' செய்தியொன்று கூறுகிறது.

யாழ்ப்பாணம் கச்சேரியில் ஏற்பட்ட சிறு தீ மூட்டலின் விளைவாக, மொழிப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுகாணும் பொருட்டு தமிழரசுக் கட்சிக்கு அரசாங்கத்தின் பின்னல் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதுஎன்று தவஸ 22-2-64ந் திகதி எழுதியுள்ள அரசியற் குறிப்பில் கூறுகின்றது.

தவஸ மேலும் குறிப்பிடுவதாவது:-

'தமிழரசுக்கட்சி எத்தகைய கோரிக்கைகளைச் சமர்ப்பித்தாலும் சிங்களத் தொகுதிகளில் பிரதிநிதித்துவம் வகிக்கும் எந்த அரசியல் கட்சியும் சிங்கள மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை மீறமுடியாது.

தங்கள் பிரதேசத்தில் வசிக்கும் தமிழ் விவசாயிகளுக்குச் சிங்களம் தெரியாதென்றும், தமிழில் தங்கள் நடவடிக்கைகளை நடத்த அவர்களுக்கு உரிமை இருக்க வேண்டுமென்றும் தமிழரசுக்கட்சி கோருகிறது.

அரசகரும மொழிச் சட்டத்தைத் திருத்தினலன்றி இந்தக் கோரிக்கைக்கு இடமளிக்க முடியாது.

அவர்களின் பிரச்சினையை மாவட்ட சபைகள் அமைப்பதன்மூலம் நியாயமான முறையில் தீர்த்துவைக்க முடியும். தங்களின் மொழியில் மாவட்ட சபைகளுடன் தொடர்புகொள்ள அவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

அத்துடன், தமிழ் அதிகாரிகள் சிங்களத்தில் தேர்ச்சி பெறும்வரை குறிப்பிட்ட காலத்துக்கு வட, கிழக்கு மாவட்ட சபைகள் மத்திய அரசாங்கத்துடன் ஆங்கிலத்தில் கடிதப்போக்குவரத்து வைத்துக்கொள்ளவும் அனுமதிக்கவேண்டும்.'

#### 24 மணி நேரம் 70080 மணியான விந்தை

24 மணி நேரத்தில் சிங்களத்தை அரியாசனமேற்றுவதாகக் கூறி ஆட்சிபீடமேறிய அரசாங்கம்எட்டு ஆண்டுகளாகியும்—மணிக்கணக்கில் கூறின், 70080 மணி நேரம் கடந்த பிறகும்—இன்னும் சந்தியில் நின்று தயங்கிக்

(13-ம் பக்கம் பார்க்க)

## இதய சுத்தியுடன் முன்வருக


### ஆட்சியாளருக்கு திருமலை நகராண்மை தலைவர் வேண்டுகோள்

"இத்தடவையிலாவது ஆட்சியாளர்கள்மொழிப் பிரச்சினைகளுக்கு முடிவுகாண முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ் பேசும் மக்களின் தலைவர்கள் இவ்விடயத்தில் தங்கள் கடமைகளை உணர்ந்து விவேகத்துடன் செயலாற்றுவார்கள் என்பதில் சந்தேகமே இருக்க முடியாது. ஆட்சியாளர்கள் இந்த விடயத்தை அடுத்துவரும் தேர்தலுக்கான ஓர் அரசியற் தந்திரமாகக் கருதாமல் மனப்பூர்வமாக இப்பிரச்சினைக்கு முடிவு காண விரும்பின், நீண்ட காலமாக இருந்து வரும் இப் பிரச்சினை தீர்ந்து விடும் என்பதுறுதி. திரு. கே. எம். பி. இராஜரத்தின போன்ற வகுப்புவாதிகளின் பழைய பல்லவிகளுக்குப் பிரதமர் பணிந்துவிடமாட்டார் என்றே நம்புகிறேன்"

இவ்வாறு திருகோணமலை நகராண்மைக் கழகத் தலைவர் திரு. சி. சிவானந்தம் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தம் அறிக்கையில் மேலும் கூறியதாவது:—

ஆட்சியாளர்கள் மொழிப் பிரச்சினையில் ஒரு நல்ல முடிவு காண்பதற்கு முன் வந்திருப்பதை நாட்டு நலனில் நாட்டம் கொண்டவர்கள் அனைவரும் வரவேற்கத் தான் செய்வர். ஒரு நாட்டில் ஆளப் பிறந்தவர்கள்



திரு. சி. சிவானந்தன்

என்று ஒரு இனமும், ஆளப்படுபவர்கள் என்று ஒரு இனமும் இருக்கும் வரை அங்கு அமைதி நிலவ முடியாது என்பது சரித்திரம் கண்ட உண்மை.

நாட்டின் ஐக்கியம் காப்பாற்றப்படவேண்டுமானல், சிறுபான்மையினரின் பிரச்சினைகளில் ஒரு சமரசம் ஏற்படத்தான் வேண்டும். இன்று நமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிகளுக்கு சிறுபான்மையினரின் பிரச்சினைகள் தீர்க்கப்படாததும் ஒரு முக்கிய காரணமாகும். இதை உணர்ந்துதான் ஆட்சியாளர்கள் இக் கட்டத்திலாவது இப் பிரச்சினைக்கு ஒரு நல்ல முடிவு காண்பதற்கு இறங்கிவந்திருக்கின்றனர் என்று நான் கருதுகிறேன்.

பேச்சுவார்த்தைகள் மூலம் மொழிப் பிரச்சினையில் ஒரு சமரசம் காண்பதை நாட்டின் பெரிய அரசியல் கட்சிகள் அனைத்தும் மனப்பூர்வமாக வரவேற்றிருப்பதானது ஒரு நல்ல அறிகுறியாகும். தமிழ் பேசும் மக்களின் ஜீவாதார உரிமைகளை ஆட்சியாளர்கள் அலட்சியம் செய்துவிட முடியாது என்ற உண்மையை இன்று உணர்ந்துகொண்டுவிட்டனர்.

#### வேறு வழியில்லாததால் அறப்போர்

இந்த நாட்டுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதில் தமிழ் பேசும் மக்களின் உழைப்புச் சிங்களச் சகோதரர்களின் உழைப்புக்குச் சிறிதும் குறைந்ததல்ல. இந்த நாட்டின் இரு பெரும் சமூகங்களும் இணைந்து வாழ்ந்தால்தான் எமது நாட்டின் எதிர்காலம் ஒளி மிகுந்ததாக இருக்க முடியும்.

ஆட்சியாளர்கள் அன்புக் கரத்தை நீட்டும் பொழுது தமிழ் பேசும் மக்களும் தங்கள் நேசக்கரத்தைப் பிணைப்பதற்கு என்றும் தயாராக இருக்கின்றனர். இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாட்டின் இரு சமூகங்களும் ஒற்றுமையுடன் வாழ்வதற்கு வழிவகுக்க வேண்டியது இன்றியமையாததாகின்றது

நாட்டின் எதிர்காலத்தை மனதில் நிறுத்தி, இதில் ஒரு நல்ல தீர்ப்பை வழங்கவேண்டியது ஆட்சியாளர்களின் நீங்காத கடமையாகும். ஆட்சியாளர்களுக்கு வேண்டுமென்றே தலையிடியைக் கொடுக்க வேண்டுமென்பது தமிழ் பேசும் மக்களின் எண்ணமல்ல.

(13 ப் பக்கம் பார்க்க)




இன்றைய அதிசயமான பைப் எஸ்-லோன்

உங்கள் வீட்டில், ஸ்டோரில், அல்லது தொழிற்சாலையில் தண்ணீர் வசதி அமைத்துக்கொள்ளும் உத்தேசம் உங்களுக்கு உண்டானல் எஸ்-லோன் பைப்புகள் மிகக் குறைந்த செலவில் மேலானபயன் தரவல்லவை என்பதை மறந்து விடாதீர்கள். இவை வளையக்கூடியவை, கனக்குறைவானவை, நேரத்தையும் கூலியையும் மிச்சப்படுத்தும் - இணைப்பதும் வெகு சுலபம்-நீங்களே செய்யலாம். எஸ்-லோன் உக்காது கறையானை அண்டவிடாது, அரிப்பு ஏற்படுத்தாது, கிருமி, கறள், அழுக்குப்படல எதிர்ப்புடையது.

ஆகவே பணத்தை மிச்சம் பிடிக்க வேண்டுமானல், உங்கள் எஸ்-லோன் பைப் தேவைகளை எந்த பெரிய ஹார்ட்வெயர் ஸ்டோரிலிருந்தாகிலும் இன்றே வாங்குங்கள்.

ராஜேந்திராம்ஸ் லிமிட்டெட்.

கொள்ளுகட்டிடம், பேஷால் வீதி, கொழும்பு-11.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மம்பட்டித் தோட்டத்தில்

# மீண்டும் வேலை நிறுத்தம் ஆரம்பமாகலாம்

## இ. தொ. கழக குழுத்தலைவரை நிர்வாகம் ஏற்க மறுத்தால்

கொட்டகலை பெரிய மம்பட்டித் தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 475 தொழிலாளர்கள் 24-2-64-ல் ஓர் நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்.

மேற்படி தோட்ட குழுத் தலைவர் திரு டீ. ஜெகநாதன் அவர்களை தோட்ட நிர்வாகம் ஏற்க மறுத்ததால் மேற்படி அடையாள வேலை நிறுத்தத்தைக் கைக்கொண்டனர்.

இவ் வேலை நிறுத்தத்தின் பயனுல் அட்டன் தொழில் அலுவலகத்தில் சமரச பேச்சுவார்த்தைகள் நடைபெறவிருக்கின்றன. பேச்சு வார்த்தையில் ஓர் சுமுகமான முடிவு ஏற்படாவிட்டால் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்யத் தொழிலாளர்கள் முடிவு செய்திருக்கின்றனர்.

மேற்படி வேலை நிறுத்தம் செய்யும் அனைவர்களும் இலங்கைத் தொழிலாளர் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# உரிமை பெற்று வாழ இ. தொ. கழகத்தில் சேருங்கள்

## நாகசேனைக் கூட்டத்தில் இராமையா பேச்சு

தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் ஒன்று படுத்தி உரிமை பெற்று சுதந்திரத்துடன் வாழ்வதற்காக மலையகத்தில் இலங்கைத் தொழிலாளர் கழகம் இயங்கி வருகிறது. இக்கழகத்தைக் கட்டி வளர்த்துப்பயன் அடைய வேண்டுமானல் மலையக வாலிபர்கள் முன் வந்து கழகத்தில் சேர்ந்து அதை வழி நடத்திச் செல்ல முன் வர வேண்டும். மலையகத்தில் வாழும் 10 லட்சம் தமிழ் பேசும் தொழிலாளர்களை வாழவைக்கும் பொறுப்பு வாலிபர்களின் கையிலே தான் உள்ளது.

இவ்வாறு 19-2-64ல் நாகசேனையைச் சேர்ந்த நெடுந்தோட்டத்தில் நடைபெற்ற கழகத்தின் தேர்தல் கூட்டத்தில் உரை நிகழ்த்திய கழகத் துணைத் தலைவர் திரு. ரெ. ம. ராமைய்யா கூறினர்.

கழகத் துணைத் தலைவர் திரு. ரெ. ம. ராமய்யா, அட்டன் மாவட்டப் பிரதிநிதி திரு. செ. கலியபெருமாள் மஸ்கெலியா மாவட்டப் பிரதிநிதி, திரு. கே. பி. செல்லத்துரை ஆகியோர் இக்கூட்டம் நடைபெறும் இடத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். கூட்டத்தில் பெண்களும் குழந்தைகளும் கூட உற்சாகமாக கலந்து கொண்டனர்.

திரு. ராமய்யா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

மலை நாட்டின் சரித்திரத்திலேயே முதற் தடவையாக நமது கழகம் சகல நடவடிக்கைகளையும் தமிழிலேயே

(11-ம் பக்கம் பார்க்க)


ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11


## சட்டமறிந்து செயல் புரிந்த சான்றேன் பெரிசுந்தரம்

மலையக மக்கள் கல்வியறிவில் பின் தங்கியவராக இருந்த காலத்தில் ஒரு சிலரே தமது பிள்ளைகளுக்குக் கல்வியறிவையூட்டும் முயற்சியில் ஈடுபட்டனர். மலையக மக்களின் வாழ்க்கையில் பங்கு கொண்ட நூலறிஞர்கள் பலர் இருந்தாரெனினும், மலையக வம்சாவளியினரில் உயர்தரக் கல்வியும், சட்டப் படிப்பும், அமைச்சுப் பதவியும் கொண்டு புகழுடன் வாழ்ந்த சட்ட மேதை பெரியண்ணன் சுந்தரம் ஒருவரேயாவார்.

### வரலாறு

திரு. பெரிசுந்தரத்தின் பூர்வீகம் தென்னிந்தியத் தமிழகம். இவரது பூட்டனர் பெரிய கருப்பக்கோனர் ராமநாதபுரம் ஜில்லாவில் காரைக்குடியைச் சேர்ந்த ஆளவந்தான்பட்டி, பொய்யலூரில் வசித்தவர்.

அவரது புத்திரன் (அழக... பன்) சின்னக் கருப்ப... கோனர் தனது வாலிபத்தி... வீட்டாருக்குத் தெரியாம... 1840ம் ஆண்டு தொண்டி... துறையிலிருந்து படகேறி... தொண்டமன்னர் வந்திற... கினர்.

தொண்டமன்னரிலிருந்து நடை மார்க்கமாகப் பண்ணுகாமம் எனப்படும் மாத்தளை வழியாகக் கோப்பித் தோட்டங்களுக்கு வந்தடைந்தார் சின்னக் கருப்பக் கோனர்.

சக்தி அ. பாலையா

கோப்பித் தோட்டத்தில் தொழில் புரிந்த இவர் 1884ம் ஆண்டு மண முடித்தார். இவருடைய புத்திரர் பெரியண்ணன் நெல்லிமலைத் தோட்டத்தில் தலைமைக் கண்டக்டராகப் பணியாற்றினர். அத்தோட்டத்தில் அவரால் ஒரு பாடசாலையும் நடத்தப்பட்டது.

மடுல்கெல்லையைச்சேர்ந்த நெல்லிமலைத் தோட்டத்தில் 1890ம் ஆண்டு ஆடி மாதம் 23ந் திகதி திரு. பெரிசுந்தரம் பிறந்தார்.

சிறு வயதில் தனது தந்தையார் நடத்திய தோட்டப் பாடசாலையிலேயே ஆரம்பக் கல்வி பயின்றார். 1896 முதல் 1904 வரை கண்டி திரியேகத்வ (டிரினிட்டி) கல்லூரியில் பயின்றார். 1906ல் சென்ற். தோமஸ் கல்லூரியில் கல்வி பயின்றார். 1907ம் ஆண்டு அரசாங்கச் சட்டக் கல்லூரியில் பயிற்சி மேற்கொண்டார்.

### சட்டப் பயிற்சி

பின்னர் இங்கிலாந்து சென்று கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையின் இம்மானுவேல் கல்லூரியில் சேர்ந்து பட்டம் பயின்றார்.

இந்தக் கல்லூரியில் சேர்ந்த 33 மாதத்திலேயே எம். ஏ. எல். எல். பி. என்ற சட்டவிற்பன்னர்கள் பெறும் உயர் பட்டம் பெற்றார்.

வெள்ளையர்கள் தனியுரிமை கொண்டாடிய காலத்தில் ஒரு மலைநாட்டுத் தமிழர் இத்தனைச் சிறப்புடன் முன்னேறியது பெருமைக்குரியதாகும்.

இங்கிலாந்திலிருக்கும் போது, கேம்பிரிட்ஜ் [illegible] கலாசாலையில் இலங்கையர் சங்கத்தின் தலைவராகவும், இந்திய சங்கத்தின் தலைவராகவும், சர்வகலாசாலை சட்ட மன்றத்தின் தலைவராகவும், கேம்பிரிட்ஜ் மாணவர் சங்கத்தின் துணைத் தலைவராகவும் கடமை புரிந்தார்.

### இலங்கை திரும்பினர்

பாரிஸ்டர் பட்டம் ஏற்ற பின் இவர் 1913ம் ஆண்டு இலங்கை திரும்பி, நியாய துரந்தராகப் பணியாற்றினர்.

### இலங்கை தேசிய காங்கிரஸ்

இவர் இலங்கை தேசிய காங்கிரஸ் சபையின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவர். அதன் நிர்வாகக் குழுவின் அங்கத்தவராகவும் விளங்கினர்.

### இலங்கை இந்தியக் கழகம்

அதன் பின் இலங்கை இந்தியக் கழகத்தின் அமைப்பாளராகவும் அதன் துணைத் தலைவராகவும் பணி புரிந்தார். அதைத் தொடர்ந்து "இலங்கைத் தொழிலாளர் நலவுரிமைச் சங்க" அமைப்பாளராகவும், அதன் பிரதம காரியதரிசியாகவும் பதவி

மலையக அறிஞர்கள்— 5

ஏற்று சேவை புரிந்தார். அத்துடன் இலங்கைத் தொழிலாளர் சம்மேளனத்தை ஆரம்பித்து அதன் காரிய தரிசியாகவும் பணியாற்றினர்.

அக்காலத்தில் இலங்கை வாழ்ந்த இந்திய மக்களின் பிரதிநிதிகள் மலையக மக்களுக்காக மட்டுமல்லாமல், இலங்கைத் தொழிலாளர் நலன்களுக்காகவே பாடுபட்டனர் என்பதையும் நினைவு படுத்துதல் வேண்டற்பாலது.

### திருமணம்

1925ல் ஜுலை 11ந் திகதி திரு. பெரிசுந்தரம் திருமணம் செய்து கொண்டார்.

1928ல் இவர் சட்டக் கல்லூரியில் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார்.

### தேசிய சபையில்

1931ல் அட்டன் தொகுதியில் முதலாவது இராஜாங்க சபை அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டார். 1931ம் ஆண்டு முதல் 1936 வரை இவர் தொழில், வர்த்தக அமைச்சராகப் பதவி வகித்தார்.

அமைச்சராகப் பணியாற்றிய காலத்தில் இந்தியாவிலிருந்து வந்த பொட்சுவாலா கமிஷன் திட்டங்களை சிபார்சு செய்தவர் திரு. பெரிசுந்தரம். இன்றியங்கும் இலங்கை வங்கி அதனுல் ஏற்பட்டதாகும்.

அமைச்சராகப் பணியாற்றிய போது பல புதிய சட்டங்களையும் இவர் இயற்றினர்.

### கூலி என்ற கேலி நீக்கம்

இவர் அமைச்சராக இருந்தபோது தொழிலாளர்களைக் "கூலி" என இழித்துரைக்கும் சொல்லுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

மலைநாடு

வேலை செய்பவர்களைக் "கூலி" என்றழைப்பதைக் கண்டித்து "தொழிலாளி" என்ற பெயர் நிலவச் சட்டங் கொணரச் செய்தார் திரு. பெரிசுந்தரம்.

### எட்டு மணி நேர வேலை

வெள்ளைக்காரத் தோட்ட முதலாளிகள் மலையக மக்களைப் பன்னிரண்டு அல்லது பதின்மூன்று மணி நேர உழைப்பில் ஓய்வில்லாதவராக அல்லற்படச் செய்து வந்தனர்.

(11-ம் பக்கம் பார்க்க)

## இ. தொ. கழக கிளை நிர்வாகிகள்

பதுளை மாணிக்க வள்ளித் தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட இ. தொ. கழகக் கிளையின் பதவியாளர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. சி. இராமையா, துணைத் தலைவர்: திரு. பொ. இலட்சுமணன், செயலாளர்: திரு. சு. இராமச்சந்திரன், பொருளாளர்: திரு. மு. செல்லையா, துணைப் பொருளாளர்: திரு. ரு. இரத்தினம்.

கமிட்டி உறுப்பினர்கள்: திருவாளர்கள்: ம. முருகையா, ந. வீரையா, க. முத்தையா, வே. கருப்பையா, வீ. முருகையா. சி. சிவலிங்கம், பெ. இராமசாமி, செ. கணேஸ்.

தொண்டர் படைத் தலைவர்: திரு. மு. முத்துலிங்கம்.

மாதர் சங்கத் தலைவி: திருமதி கா. கறுப்பாயி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலேயரை வியப்பிலாழ்த்திய இந்திய வானம்பாடி

## அண்ணல் காந்தியாரின் அன்பைப் பெற்ற கவிக்குயில்

### சுதந்திரப் போராட்டத்தின் மாதர் தலைவி கவியரசி சரோஜினி

இந்தியத் துணைக் கண்டத்தின் விடுதலைக்கு வழிகோலிய தலைவர்கள் பலர். அவர்களுள் பெருந் தலைவர்கள் என்ற வரிசையில் வைத்துப் பெருமையோடு பேசத்தக்கவர்கள் மகாத்மா, நேரு, பட்டேல், சுபாஷ், இராஜாஜி போன்றோர். இவர்களோடு ஒத்த நிலையில் இருந்து இந்திய விடுதலை இயக்கத்திற்கு உவப்பூட்டி உயிரூட்டிய பெண் தலைவர் சரோஜினி நாயுடு அவர்கள். இந்திய விடுதலைப் போரில் பல பெண்களும் நேரடியாகப் பங்கு பற்றினார்கள். அவர்களுக்கெல்லாம் நல்ல வழிகாட்டியாக விளங்கினார் சரோஜினி நாயுடு அவர்கள். இவர் சிறந்த அரசியற் தலைவராக விளங்கியதோடு உள்ளத்தை ஈர்க்கும் பேச்சாளராகவும் மக்கள் மனம் கவர்ந்த கவிஞராகவும் துலங்கினார். இவரின் கவிதை ஆற்றலும் இனிய குரலும் இவருக்கு இந்தியாவின் வானம்பாடி (The Nightingale of India) என்ற புகழினை ஈட்டிக் கொடுத்தது. இவரின் நினைவு தினத்தை யொட்டி (2—3—64) இக் கட்டுரை பிரசுரமாகிறது.

பாரதத்தில் பண்டைக் காலத்தில் பாவையர்கள் பாங்கோடு போற்றப் பட்டார்கள் என்று இதிகாசங்கள், புராணங்கள், வரலாறுகள் வாயிலாக அறிகிறோம். குறிப்பாகத் தமிழ் நாட்டில் அவ்வையார், காக்கை பாடினியார், காரைக்கால் அம்மையார் (புனிதவதியார்), கண்ணகி, மங்கையற்கரசியார், திலகவதியார் ஆகியோர் வரலாறு, மேற்கூறிய கூற்றினை வலியுறுத்தி நிற்கிறது. எனினும் இடைக் காலத்தில் பெண்களைப் பேயென — பிள்ளை பெற்றிடும் பொறியென — வேண்டாத பொருளென இழித்துக் கூறும் நிலை நிலவியது. இந்நிலை மாறி, பெண் இனத்திற்கு விடிவும் விடுதலையும் காண்கிற நிலை இந்திய விடுதலை இயக்கத்தோடு உருவாகியது.

வட நாட்டில் இராய மோகன் ரோய், மகாத்மா ஆகியோரும் தென்னகத்தில் பாரதியும், திரு. வி. க. வும் பெண்கள் விடுதலைக்கு ஆற்றிய பணி குறிப்பிடத்தக்களவு முதன்மைவாய்ந்தது.

#### தேசிய காங்கிரசின் முதற் தலைவி

இந்த வரவேற்கத்தக்க புத்துணர்ச்சியும் மறுமலர்ச்சியும் உருவாகிய காலத்தில் தான் சரோஜினி அவர்கள் இந்திய விடுதலை இயக்கத்தில் ஒரு விடிவெள்ளியென விளங்கினார். வீட்டினில் பெண்களைப் பூட்டி வைக்கும் விந்தை மனிதர் தலை கவிழும் முறையில், பட்டங்கள் பெறுவதும் சட்டங்கள் இயற்றுவதும் நாட்டினை ஆள்வதும் பெண்களால் முடியும் என்பதை நிலைநாட்டியவர் நம் சரோஜினி அவர்கள். சரோஜினி நாயுடு அவர்கள் அரசியலில் அடி எடுத்து வைக்குமுன் அன்னி பெசண்ட் அம்மையார் இந்திய அரசியல் வானில் ஒளி விட்டு விளங்கியது உண்மையெனினும் அவரை இந்திய மண்ணில் தோன்றிய பெண்மணி என்று கணிக்க முடியாது. ஆனால் சரோஜினி அவர்கள்தான் இந்திய தேசிய காங்கிரசின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட முதல் இந்தியப் பெண்மணி என்பது ஈண்டு பெருமையோடு பேசத்தக்க பேருண்மையாகும்.

#### இளமையிலேயே இன் கவி ஆற்றல்

சரோஜினி நாயுடு அவர்கள் 13-2-1879ல் பாரதத்தில் உள்ள ஐதிராபாத் என்ற நகரில் புகழ்பூத்த பெற்றோருக்குக் குழந்தையாகத் தோன்றினார். அகோரநாத் சட்டோபாத் என்பது சரோஜினியின் தந்தையின் பெயர். இவர் பல மொழிகள் கற்ற, பல நூல்கள் நுகர்ந்த, பன்

**ஈழவேந்தன்**

மொழிப் புலவராயும் கூர்த்த மதியினராயும் விளங்கினார். இவர் தாயும் கவிதை யாக்கும் புலமை பெற்றிருந்தார். இவ்விருவர்களின் செங்குருதியில் உருவாகிய சரோஜினி அவர்களுக்குச் சூழ்நிலையும் சுற்றுடலும் கூட அவரின் அறிவு வளர்ச்சிக்குத் துணை புரிந்தது. அதனால்தான் தன் இளம் பருவத்திலேயே நுண் அறிவும் கவிதை இயற்றும் ஆற்றலும் பெற்று விளங்கினார். தனது 12ம் அகவையிலேயே சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'மற்றிக்கிலேசன்' தேர்வில் தேர்ச்சி அடைந்தது அவரின் நுண் அறிவின் திறனை எடுத்துக்காட்டுகிறது. கவிஞன் பிறக்கிறானேயன்றிக் கவிஞனாக ஆக்கப்படுவதில்லை. (Poets are-born and not made) என்ற ஆங்கிலப் பழமொழிக் கமைய சரோஜினி அவர்கள் தனது 11வது வயதிலேயே 1,300 வரிகள் கொண்ட கவிதையையும் 2,000 வரிகள் கொண்ட கவிதை நாடகத்தையும் உருவாக்கியது இங்கு வியப்போடு குறிப்பிடத்தக்கது.

#### கவர்ச்சி மிகு தோற்றமும் கனிவு மிகு பேச்சும், கவிதையும்

தனது 15ம் அகவைக்குள்ளேயே மேல்படிப்பிற்காக இங்கிலாந்து சென்ற சரோஜினி அவர்கள் நோய்வாய்ப்பட்டு இந்தியா திரும்பினார். சிறிது காலத்தில் பெற்றோரின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது நாயுடு என்ற மருந்துவரை (டாக்டரை) காதற் கடிமணம் செய்து குடும்பப் பொறுப்பை ஏற்றார். குடும்பப் பொறுப்போ, உடல் நலக்குறைவோ அவரின் பொது நலப் பணியையோ அறிவு வளர்ச்சியையோ தடை செய்யவில்லை. அவர் அக்காலத்தில் நுகர்ந்த நூல்கள் எண்ணில் அடங்கா. அத்தோடு பொருள் பொதிந்த, சுவை சொட்டும் கவிதைகள் பலவற்றைப் பல துறைகளில் ஆக்கி அளித்தார். அக்காலத்தில் அவரின் கவிதைகளைச் சுவைத்து மகிழ்ந்த ஆங்கிலக் கவிஞர்கள், இலக்கியத் திறன் ஆய்வாளர்கள் பலர். சரோஜினியின் ஆங்கில மொழிப் புலமை பலரை வியப்பில் ஆழ்த்தியது. இந்திய மொழிகளிலும் ஐரோப்பிய மொழிகளிலும் அவரின் கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்டுப் பாராட்டைப் பெற்றன. புகழ் பூத்த குடும்பத்தில் தோன்றித் தோற்றப் பொலிவில் கவர்ச்சி நிறைந்து கேட்போரைப் பிணிக்கும் முறையில் இனிக்கப்பேசி, நகைச்சுவை மிளிர உரையாடி, இன்ப வெறியூட்டும் கவிதைகளை அள்ளி இறைத்த சரோஜினியிடம் பலர் மெய்மறந்து மயங்கியது வியப்பல்ல.

#### ஆக்கி அளித்த நூல்களும் கவி ஊற்றும்

நம் சரோஜினி அவர்கள் பல துறைகளில் பாக்கள் படைத்துள்ளார்கள். நாட்டுப் பாடல்கள், இசைக் குரிய பாடல்கள், இயற்கை வருணனைகள், பெரு மக்கள் வாழ்த்து, காதல், குழந்தைகள், இறப்புப் பற்றிய பாடல்கள், பருவ காலப் பாடல்கள், உழவர்கள், நெசவாளர்கள், தொழிலாளர்கள் பற்றிய பாடல்கள், இந்திய விடுதலை இயக்கப் பாடல்கள் என அவரின் கவிதை ஊற்று பல திசைகளில் விரிந்து பரவியது. மேற்குறித்த பல்வகைப் பாடல்கள் 'Golden Threshold' 'The bird of time', 'The Bro--ken Wing' 'Feather of the-Dawn' என்று பல்வேறு தலைப்புக்களில் நூல்களாக வெளிவந்து மக்களுக்குக் கவி உணவை ஊட்டியபடியிருக்கின்றன. சரோஜினியின் கவிதைகளில் போதிய ஆழம் போதாது என்று குறை கூறுவது உண்டு. ஆனால் எவரும் அவர் கவிதைகளின் அழகையோ, இனிமையையோ குறை கூற முடியாது. மாறாக எதுவித முயற்சியும் எடுக்காது இயல்பாகவே அவர் உள்ளத்தில் கவிதை ஊற்றெடுத்துப் பொங்கி வழிந்தோடுகிறதென்பதை எல்லோரும் ஏற்றுப் போற்றியே இருக்கிறார்கள்.

#### காந்தி, காங்கிரஸ் தொடர்பு

1915ல் காந்தியடிகளை சரோஜினி அவர்கள் இலண்டனில் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றார். அன்று தொட்டு அவரினால் ஆட்கொள்ளப்பட்டு இந்தியத் தேசிய காங்கிரசில் சேர்ந்து இந்திய விடுதலைக்காக ஓயாது உழைத்தார். காந்தியடிகள் தொடக்கிய ஒத்துழையாமை, பகிஷ்காரம், சட்டமறுப்பு, வரி கொடா இயக்கம் முதலிய எல்லா இயக்கங்களிலும் பங்கு பற்றிச் சிந்தை நிறைவோடு பன்முறை சிறையும் சென்று மீண்டார். இவரின் பணியின் பாங்கினை உணர்ந்த தலைவர்கள் இவரை இந்தியத் தேசிய காங்கிரசின் தலைவராக 1925ம் ஆண்டில் ஆக்கினர். அன்று அவர் நிகழ்த்திய தலைமை யுரை சுருக்கமும் சுவையுமிக்க பேச்சாக மிளிர்ந்ததென அன்று எல்லாத் தலைவர்களும் அவரை வாழ்த்தினர். 1928ம் ஆண்டு அமெரிக்க மக்களுக்கு இந்தியரின் நிலையை விளக்க இவர் ஆற்றிய சொற்பொழிவுகளும் சிந்தனைக்கு விருந்தாக விளங்கின.

(அடுத்த இதழில் முடியும்)

---

# ஆபிரிக்க மக்களின் விடுதலை வரலாறு

## நம்மவர்க்கு முன்மாதிரி

(சென்ற வாரத் தொடர்ச்சி)

வைரம், கோபால்ட், தங்கம், சிசல், கொக்கோ, குரோம், கோப்பி போன்ற பல்வேறு விலை உயர்ந்த பொருட்களை அள்ளித் தரும் ஆபிரிக்கத் தாய், அன்று அவைகளைத் தான் பெற்றெடுத்த மக்களுக்கு கொடுக்க முடியாது பட்டினியால் வாட்டும் பரிதாபத்திற்குரியவளாக மேற்கத்திய நாடுகளால் ஆக்கப்பட்டாள். இந்நிலையில் ஆசியாவில் உதித்த இன உணர்வைக் கொண்ட சுதந்திரக் கனல் இருண்டு கிடந்த ஆபிரிக்காவிலும் தாவி வேகமான விடுதலைக் கனலை ஊட்டி அம் மக்களின் உரிமை உணர்வைக் கிளறி விட்டது. அதனால் அங்கே அடக்கு முறை ஆட்சியில் ஊறி விம்மும் உள்ளத்துடன் உழன்று கிடந்த அகண்ட நெஞ்சங்களில் அக்கனல் மின்னல் வேகத்தில் ஊடுருவிப் பாய்ந்தது. உடனே அவர்கள் நாம் யார்—நம் நாடு எது என்பவைகளை உணர்ந்து விடுதலை வீரர்களாக—புரட்சிப் படையினர்களாக மாறினர். தியாகம் செய்தனர். அதன் பலனாக விடுதலை முத்திரையையும் குத்தியுள்ளனர்.

#### பல லட்சம் கல்லறைகளில் விடுதலைக் கொ[illegible]

1914ல் முத[illegible]கப் பெரும் போர் ஆரம்பமான சில ஆண்டுகளுக்கு முன் ஆபிரிக்காக் கண்டத்தில் விடுதலை பெற்ற நாடுகளாக எத்தியோப்பியா, லைபீரியா ஆகிய இரு நாடுகளின் பெயர்கள் மட்டும்தான் உலக விடுதலை அரங்கில் நமக்குத் தென்பட்டன. மன்னராட்சியைக் கொண்ட எத்தியோப்பியாவும் - அமெரிக்கக் குடியரசிலிருந்து விடு

**கே. எஸ். ஏ. கபூர்**

தலை பெற்ற மக்களால் இருண்ட கண்டத்தின் மேற்குக் கரையில் நிறுவப்பட்ட லைபீரியாவும் விடுதலை பெற்ற நாடுகளாக இருந்தாலும் கூட, சில சமயங்களில் அவைகளும் ஏகாதிபத்திய எண்ணம் கொண்டோரின் நச்சுப் பார்வைக்குப் பலியாகி இருக்கின்றன. இப்பெரும் போர் முடிந்ததும் ஜெர்மன் காலனியான சில பகுதிகள் பிரிட்டன், பெல்ஜியம், பிரான்ஸ் ஆகிய வல்லரசுகளின் கைக்கு மாறின. இரண்டாவது உலகப் பெரும்போர் ஆரம்பமாவதற்குச் சில ஆண்டுகளுக்கு முன் வரை இருண்ட கண்டத்தில் சுமார் ஐந்து நாடுகள் மட்டும்தான் சுதந்திர பூமியாக உலகில் வலம் வந்தன.

இ[illegible]வது [illegible]ந்தைத் தொடர்ந்து தன் அடக்கு முறை ஆட்சியில் வைத்திருந்த சில நாடுகளுக்குப் பிரிட்டன் விடுதலை வழங்கி "காமன் வெல்த்" என்னும் அமைப்பை ஏற்படுத்திக் கொண்டது. வடக்கில் பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழிருந்த டூனிசியா, மொரொக்கோ, அல்ஜீரியா ஆகிய பல நாடுகள் தம் விடுதலைப் போராட்டங்களைப் பயங்கரமான அடக்குமுறைகளையும் தாண்டி பல லட்சோப லட்சம் மக்களையும் பலியாகச் சுதந்திர தேவிக்குக் காணிக்கை செலுத்தித் தம் போராட்டங்களில் வெற்றி கண்டன. பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழிருந்த சுமார் பதினெட்டு நாடுகளுக்கும் விடுதலையைத் தவிர, வேறு எந்த முடிவுக்கும் வர முடியாத பிரான்ஸ் அவைகளுக்கு விடுதலை வழங்கிப் பிரிட்டனைப் போன்று "பிரெஞ்சு கம்யூனிடி" என்ற அமைப்பை ஏற்படுத்திக் கொண்டது. பத்து ஆண்டுகளுக்குள் முப்பதுக்கு மேற்பட்ட நாடுகள் ஆபிரிக்காக் கண்டத்தில் தனிக் கொடிகள் பறக்க விட்டு உலக அரங்கில் தம்மை வீரத்துடன் அறிமுகப்படுத்தி இருக்கின்றன.

#### தமிழினம் விடுதலைக்கு விதிவிலக்கானவர்களா?

பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம், போர்த்துக்கல், ஸ்பெயின் போன்ற பல மண்ணாசை கொண்ட வல்லரசுகள் காலத்தின் வேகப்பாய்ச்சலையும்— அடங்கிக் கிடந்த மக்களின் இன எழுச்சியையும் அரசியல் யூகத்துடன் உணர்ந்து நடந்து கொண்டதற்கு ஆபிரிக்க மக்களின் உரிமை உணர்வும்—தியாக சிந்தையுமே காரணமாக அமைந்திருக்கின்றன. பல லட்சக் கணக்கான உயிர்களையும்— உடைமைகளையும் சுதந்திரத்தின் மகத்துவத்

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1964 மார்ச் மாதம் 1-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# நிலையற்ற வெளிநாட்டுக் கொள்கை

ஜனப் பிரதிநிதிகள் சபையில் நாளை மறுதினம் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை மீது விவாதம் நடைபெறவிருக்கிறது.

சமீபகால நிகழ்ச்சிகள் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. அதன் விளைவு இக்கொள்கை ஒரு நிலையற்ற தன்மையை அடைந்ததுதான்.

ஒரு நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை உள்நாட்டுக்கொள்கையின் பிரதிபலிப்பு என்பர் அரசியல் அறிஞர்கள். உள்நாட்டுக் கொள்கையில் நிலையற்றதன்மை நிலவும்போது, அது வெளிநாட்டுக்கொள்கையிலும் எதிரொலிப்பது வியப்பன்று. இந்த நிலையற்ற கொள்கை விரைவில் ஒரு வல்லரசையோ, வல்லரசுக் கோஷ்டியையோ சார்ந்து நிற்கவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தும்.

திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தமது கணவரின் மண்டல சார்பற்ற கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடிக்க முடியவில்லை. காரணம், சீனு போன்ற நாடுகளின் நிர்ப்பந்தத்தை எதிர்த்து நிற்கும் துணிவு அவரது அரசாங்கத்துக்கு இல்லாதிருப்பதுதான்.

மண்டல சார்பற்ற கொள்கை எது, சார்பான கொள்கை எது என்பதை விளக்கிக் கூறுவது கடினம் என்று செனட் சபையில் நடைபெற்ற வெளி நாட்டுக் கொள்கை விவாதத்தின்போது ஒரு மந்திரி கூறினார். இதிலிருந்து இலங்கையின் அயல்நாட்டுக் கொள்கை எந்த அளவுக்குக் குழப்பமடைந்துள்ளது என்பது தெளிவு.

சோஷலிஸம் என்ற பெயரால் உள்நாட்டில் கையாளப்படும் தேசியமயக் கொள்கை அயல்நாட்டுக் கொள்கையிலும் எதிரொலித்ததின் விளைவாக இலங்கை பெரும்பாலும் கம்யூனிஸ்டு நாடுகளை, குறிப்பாகச் சீனுவைச் சார்ந்து நிற்கும் நிலை தோன்றியுள்ளது. இது மண்டல சார்பற்ற கொள்கைக்கு மாறுனதாகும்.

இக்கொள்கையின் விளைவு மேற்கத்திய நண்பர்களை இலங்கை படிப்படியாக இழந்து வருவதுதான்.

இலங்கைவாழ் இந்திய வம்சாவளியினரின் பிரச்சினையில் இலங்கை அரசாங்கத்தின் போக்கு இந்திய—இலங்கை உறவுக்குப் பங்கம் ஏற்படுத்தியது. பின்னர் இலங்கையின் மீது சீனுவின் நிர்ப்பந்தம் அதிகரித்தவுடன் இலங்கை தொடர்ந்து இந்தியாவுக்கு எதிரான பாதையிலே செல்லத் தொடங்கியது.

இதன் நேரடி விளைவு இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை இந்திய—எதிர்ப்புக் கொள்கையாக மாறியதுதான்.

சீனு திடீரென பாரதத்தின் முதுகில் குத்தியபோது, எல்லா காமன்வெல்த் நாடுகளும் இந்தியாவுக்குத் தங்களின் ஆதரவையும் அனுதாபத்தையும் தெரிவித்தன. ஆனல் இலங்கையோ சீனுவுக்கு அஞ்சி மௌனம் சாதித்தது. சீனுவுடன் இலங்கைக்கு வர்த்தகத் தொடர்புகள் இருக்கலாம். ஒரு நாடு, வர்த்தக நலன்களுக்காக தனது வெளிநாட்டுக் கொள்கையைப் பலியிடுவதென்றுல், அந்நாட்டுக்கு நிச்சயம் சுதந்திரமான ஓர் அயல் நாட்டுக்கொள்கை இருக்கவே முடியாது.

ஆக்கிரமிப்பை ஆக்கிரமிப்பு என்று கூறத் துணிவில்லையேல், அந்த நாட்டுக்குச் சுயேச்சையான ஒரு கொள்கை எப்படியிருக்க முடியும்?

"சீனு இந்தியாமீது ஆக்கிரமிப்பு நடத்தியது" என்று இலங்கை கூறிவிட்டால், பிறகு இரு நாட்டு மக்களுக்கு மிடையே சமரசம் ஏற்படுத்தும் வாய்ப்பு இலங்கைக்கு இல்லாது போய்விடும் என்று பிரதமர் செனட் சபையில் கூறினர்.

இலங்கையின் நடுநிலைமையை விளக்கும்போது காலஞ்சென்ற பிரதமர் திரு பண்டாரநாயக்கா, "காமன்வெல்த் நாடாக இருந்தாலும்சரி, இல்லாவிட்டாலும்சரி ஒரு நேச நாட்டின் குற்றங் குறைகளைக் கண்டிக்க இலங்கைக்கு உரிமை உண்டு" என்று கூறினர். ஆனல் அவரது மனைவி கூறுகிறர், சீனு செய்த குற்றத்தைக் குற்றமெனக் கூறக்கூடாதென்று. இதிலிருந்து திரு. பண்டாரநாயக்காவின் வெளிநாட்டுக் கொள்கைக்கும் திருமதி பண்டாரநாயக்காவின் வெளிநாட்டுக் கொள்கைக்குமுள்ள வித்தியாசம் தெளிவாகிறது.

இந்தியா இலங்கையின் ஒரு பாதுகாப்பு அரண்—சீனரின் தாக்குதலின் போது, பிரிட்டனும், அமெரிக்காவும் இந்தியாவுக்கு உதவ மறுத்திருந்தால், இந்தியா வீழ்ச்சியடைந்திருக்கலாம். இந்தியா வீழ்ச்சியுற்றல் அடுத்த நிமிடம் இலங்கையும் சீனுவின் காலடியில் வீழ்ந்து கிடக்கும். இதனை ஏன் இலங்கை ஆட்சியாளர் சிந்தித்துப் பார்க்கவில்லை?

சீனுவுக்குச் சமரசம் பேசச் சென்ற பிரதமர் சீனுவுக்கு கப்பற் போக்குவரத்து வசதியளிக்கும் ஒப்பந்தமொன்றுக்குக் கையெழுத்திட்டுத் திரும்பினர். இதுவும் சீன [illegible] இத்த நிர்ப்பந்தத்தின் விளைவே.

மற்றும் பல்வேறு துறைகளில் இலங்கைமீது சீனு நிர்ப்பந்தத்தைப் பிரயோகித்து வருகிறது. சீனப் பிரதமரின் இலங்கை விஜயம் இந்த நிர்ப்பந்தங்களுக்கு மகுடம் சூட்டியது போலாகியுள்ளது.

மண்டல சார்பற்ற நாடுகளின் மகாநாட்டைக் கூட்டும் இலங்கை சீனுவின் சிருஷ்டியான ஆபிரிக்க—ஆசிய மகாநாட்டையும் ஆதரிப்பதற்குக் காரணம் சீனுவின் நிர்ப்பந்தமே என்பதில் ஐயமில்லை.

சீனத்தின் அயல் நாட்டுக் கொள்கையின் தேவைகளை நிறைவேற்றும் கருவியாக இலங்கையின் அயல் நாட்டுக் கொள்கை மாறிவருகிறதென்பது இதிலிருந்து தெளிவாகிறது.

நிர்ப்பந்தங்களுக்குப் பணியாத துணிவு இருந்தாலன்றி, இலங்கை தன் நடுநிலைமைக் கொள்கையை நிலை நிறுத்த முடியாது. அதற்கு முதற் படியாக ஒரு வல்லரசின் பால் சார்ந்து [illegible] அரசாங்கம் கைவிட்டு, இந்தியாவுடன் கொண்டுள்ள நேச உறவைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# தி. மு. கழகத்தின் வளர்ச்சி தவிர்க்க முடியாதது

## கம்யூனிஸ்டுகளின் வீழ்ச்சி உறுதி

—o—

## தமிழக உள்ளூராட்சித் தேர்தல் தரும் முடிவு

'ஜனப் பெருக்கம் அதிகரிக்கும் இந்நாட்களில் நகரங்கள் சீர்குலைவது சகஜம். என்றுலும் சென்னை இதற்கு விதிவிலக்காக இருக்கிறது. அதற்குக் காரணம் ஒழுங்காக நடந்துவரும் நிருவாகம் தான் என்பதில் சந்தேகமில்லை'—இப்படிக் கூறியவர் சுதந்திரக் கட்சித் தலைவர் ராஜாஜி அல்ல, முஸ்லிம்லீக் தலைவர் ஜனுப் இஸ்மாயில் சாஹிப் அல்ல, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் அண்ணுதுரையுமல்ல. கூறியவர் ஆசியாவின் ஜோதி பாரதப் பிரதமர் நேருவேதான். கூறிய காலம் 1961.

இத்தனை தூரம் சீரும் சிறப்புமாகச் சென்னை நகர ஆட்சியைத் தி. மு. கழகத் தலைமை நிர்வகித்து வந்தது. அத்தகைய நிர்வாகத்தின் மீது கம்யூனிஸ்டுக்கட்சி கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வீண் அபாண்டம் சுமத்தியது. அவையனைத்தும் சென்னை நகர மக்களின் மனதை மாற்றிவிடவில்லை. மாறுகக் குற்றம் சுமத்திய கம்யூனிஸ்டுகள் மீதே மக்களின் வெறுப்பு திரும்பியுள்ளது. இந்த உண்மையை நடந்து முடிந்த நகரராட்சித் தேர்தல்கள் நிதர்சனமாக எடுத்துக் காட்டியுள்ளன.

தமிழ் நாட்டு உள்ளூராட்சித் தேர்தல்கள் பெப்ரவரி மாதத்தில் நடைபெற்றன. முதல் கட்டத்தில் 36 உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடைபெற்றது. இரண்டாவது கட்டத்தில் 23 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் மூன்றுவது கட்டத்தில் சென்னை நகரசபைக்கும் முறையே தேர்தல்கள் நடைபெற்றன.

### இரு அணி

இத்தனை நகராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளையும் சீர்தூக்கிச் சமன் செய்து பார்க்கையில் சில நல்ல முடிவுகளையும் அவதானிக்க முடிகிறது. பல கட்சிகளுக்கு இடையில் போட்டிகள் நடைபெற்ற பொழுதிலும், தேர்தல் ஒப்பந்தம் என்ற போர்வையில் கட்சிகள் பலவும் இணைந்து இரண்டு அணியாகவே இயங்கி வந்தன. பாரதநாட்டினதும் தமிழ் நாட்டினதும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் காங்கிரஸ் கட்சி ஒரு புறமும், தமிழ் நாட்டு சட்ட சபையில் எதிர்க்கட்சியாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகம் மறு புறமும் தேர்தல் தலைமையைப் பெற்றிருந்தன.

காங்கிரஸ் கட்சியின் தலைமையின் கீழ் கம்யூனிஸ்டுக் கட்சி, தமிழ் தேசியக் கட்சி, பெரியாரின் திராவிட கழகம் ஆகியன தேர்தல் ஒப்பந்தம என்ற போர்வையில் ஒன்றுபட்டு இயங்கின. மறுபுறத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் முஸ்லிம் லீக், சுதந்திரக் கட்சி ஆகியன ஒன்றுபட்டு இயங்கின. நாம் தமிழர் கட்சி, கள் வேண்டுவோர் கழகம் போன்ற இயக்கங்கள் இத் தேர்தலில் தனித்தியங்கி நேரடியாகத் தேர்தலில் பங்கு பற்றியிருந்த போதிலும் அவர்கள் குறிப்பிடக் கூடியளவு அரசியல் முக்கியத்துவம் பெற்று விளங்கவில்லை. தேர்தல் போராட்டம் காங்கிரஸ் கூட்டணிக்கும், தி. மு. கழகக் கூட்டணிக்கும் இடையிலேயே முக்கியத்துவம் பெற்று விளங்கியது.

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

### பழைய நிலை

1959ம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் காங்கிரஸ் கட்சிக்கும் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் பெரும்பாலும் சாதகமாக அமைந்திருந்தன. மதுரை நகராட்சி கொம்யூனிஸ்டுகள் நிர்வாகத்திலும், சென்னை, உடுமலை நகராட்சி தி. மு. கழகத்தின் நிர்வாகத்திலும் அமைந்திருந்தன. இவற்றைவிட வேறு சில உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகம் தி.மு.க.—கம்யூனிஸ்டுக் கூட்டணியிலும் இருந்தது. சீன ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து கம்யூனிஸ்டுக் கட்சியுடன் உள்ள உறவைச் சகல கட்சிகளும் பெரும்பாலும் துண்டித்துக் கொண்டன. இதைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் விளைவாக நாலு ஆண்டுகளாக தி. மு. க. நிர்வாகத்திலிருந்த சென்னை நகராட்சி காங்கிரஸ் நிர்வாகத்திற்கு மாறியது.

சீன ஆக்கிரமிப்பின்போது தாம் நடாத்திய துரோக படலத்தை மறைப்பதற்காக வலிந்து சென்று காங்கிரஸ் கட்சியுடன் இரண்டறக் கலக்க முற்பட்டனர் கம்யூனிஸ்டுகள். தி. மு. கழகத்தின் வளர்ச்சியைக் கண்டு செயலற்றுநின்ற காங்கிரஸ் கட்சியினருக்கு கம்யூனிஸ்டுகளின் ஆதரவு அரசியல் வரப்பிரசாதமாக இருந்தது. ஏற்கனவே பெரியாரின் திராவிட கழகம், தமிழ் தேசியக்கட்சி ஆகியன கொடுத்த ஆதரவை ஏற்ற காங்கிரஸ் கம்யூனிஸ்டுகளின் ஆதரவை முழுமனதுடன் ஏற்றுக்கொண்டது.

### பிரிவினைத் தடைச் சட்டம்

தி. மு. கழகத்தின் வளர்ச்சியைக் கண்டு அதிர்ச்சியடைந்து நின்ற காங்கிரஸ், கழகத்தை முறியடிப்பதற்குப் பல புதிய வழி முறைகளைக் கையாண்டது. பிரிவினைத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்து கழகத்தை வேரோடு சாய்க்க முற்பட்டது. ஆனல், தி. மு. கழகம் தந்திரமான முறையில் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக் கொண்டது. பிரிவினைக் கொள்கையை விடுத்து திராவிட யூனியன் கொள்கையைக் கழகம் வலியுறுத்தியது.

பிரிவினைக் கொள்கையைக் கழகம் கைவிட்டதால் இயக்கம் அழிந்து விடலாம் என்று ஏனைய கட்சிகள் அரசியல் ஆருடம் கணித்தன. நிலைமை மாறுக அமைந்தது. கழகம் மேலும் மக்களின் ஆதரவை பெற்றது. தென்னுடே போற்றும் இந்தி எதிர்ப்பு போராட்டத்தையும் தொடங்கியது. போராட்டத்தின் விளைவாக, தி. மு. கழக முன்னணித் தலைவர்கள் சிறையில் தள்ளப்பட்டனர். இதைத் தொடர்ந்து நகராட்சி மன்றத் தேர்தல் தமிழ் நாட்டில் ஆரம்பமாகியது.

நகராட்சி மன்றத் தேர்தலில் தி. மு. கழகத்தின் செல்வாக்கை முறியடிக்க வேண்டும், குறிப்பாக சென்னை நகராட்சியில் கழகத்தை அரசியல் அனதையாக்கவேண்டுமென்று காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்டுக் கட்சி, தமிழ் தேசியக்கட்சி, திராவிடகழகம் அனைத்தும் ஒன்றுபட்டுச் செயல்படத் தொடங்கின.

தி. மு. கழக நிர்வாகத்தில் சென்னை நகராட்சி இருந்த காலத்தில் பல ஊழல்கள் நடைபெற்றிருப்பதாகக் கூறி கம்யூனிஸ்டுக் கட்சியினர் பெரும் இயக்கங்களையும் நடாத்தினர். நாடெங்கும் கழகத்திற்கு எதிராக இக் கூட்டணி தீவிர பிரசாரத்தில் முனைந்தது. ஆனல் தேர்தல் முடிவுகளின் பலன் தி. மு. கழகத்திற்குச் சாதகமாக அமைந்துள்ளது.

### தி மு. கழகத்தின் வளர்ச்சி

முதல் கட்டத்தில் நடைபெற்ற தேர்தல் முடிவுகளின் படி தி. மு. கழகம் ஏழு நகராட்சிகளைக் கைப்பற்றக் கூடியளவுக்கு வலிமைபெற்றிருக்கிறது ஏனைய நகர மன்றங்களில் கழகம் குறிப்பிடக்கூடியளவு வளர்ந்திருக்கிறது. குறிப்பாக, பொள்ளாச்சியில் முன்பு (1959ல்) இரண்டு இடங்களில்வெற்றி பெற்றிருந்த கழகம் இம்முறை பதின்மூன்று இடங்களில் வெற்றிவாகை சூடியுள்ளது.

வேலூரில் முன்பு நான்கு இடங்களில் வெற்றிபெற்றி

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழைச்சேனை தாள் ஆலைக் கூட்டரவில் மீண்டும் தனித் தமிழ்

## சமரச உடன்பாட்டை சிங்கள ஊழியர்கள் சிதறடித்தனர்

வாழைச்சேனை காகிதக் கூட்டரவில் மீண்டும் தமிழியக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முன்பு ஏற்பட்ட சமரச உடன்பாட்டிற்கமைய, சிங்கள ஊழியர்கள் ஆங்கிலத்தில் கடமை பார்க்கத் தவறியதே காரணம் என்றும் சொல்லப்படுகிறது. தமிழ் ஊழியர்கள் மிகுந்த உற்சாகத்துடன் தமிழில் வேலை செய்வதாகத் தெரிகிறது.

வாழைச்சேனை தாள் கூட்டரவைச் சேர்ந்த சிங்கள ஊழியர்கள் ஆங்கிலத்தில் வேலை செய்ய மறுத்து விடாப் பிடியாகச் சிங்களத்தில் மட்டும் வேலைகளைச் செய்வதால், கூட்டரவுத் தலைவருடன் ஏற்படுத்திக் கொண்ட சமரச முடிவின் பிரகாரம் கைவிடப்பட்டிருந்த தமிழியக்கத்தை மீண்டும் 24-2-64 காலை 10 மணி தொடக்கம் கூட்டரவுத் தமிழ் பேசும் ஊழியர்களும் வெகு உற்சாகத்தோடு தொடக்கி நடாத்தி வருகிறார்கள். சகல ஊழியர்களும், உத்தியோகத்தர், தொழிலாளர் என்ற வேற்றுமை சிறிதும் இன்றி இந்த இயக்கத்தில் கலந்து கொண்டுள்ளார்கள்.

### தமிழ் இலக்கம்

தமிழ் என்ன கணக்கை க, உ, ங......என்று தனித் தமிழில் எழுதவும் சில ஊழியர்கள் முன்வந்துள்ளனர். ஆரம்பத்தில் இஃது சில இடர்ப்பாடுகளை விளைவித்தாலும் காலப்போக்கில் இதனை எல்லோரும் சுலபமாக வாசிக்க-எழுதப் பழகிவிடுவார்கள். எனதவும் பழக்கத்தில் வைத்துக்கொண்டால் அது எல்லோருக்கும் கெதியில் புரிந்துவிடும் என்று ஊழியர் ஒருவர் குறிப்பிட்டார்.

பேரேடுகள், விநியோக ஏடுகள், உற்பத்தி ஏடுகள் தனித் தமிழிலேயே பதிவாகின்றன.

### எல்லாம் தமிழ்

தொழிற்சாலைக்குள் இதுவரை ஆங்கிலத்தில் காட்சியளித்த அறிவிப்பு அட்டைகள் இப்போது தமிழில் மட்டும் வைக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன், 'சதுரக்கோடு 40 பக்கம், ஆங்கில அட்டை' 'இரட்டைக்கோடு 80 பக்கம், ஆங்கில அட்டை' 'இரட்டைக்கோடு துணைக் கோடுடன் 40 பக்கம்' 'வெற்றுப் பயிற்சிப் புத்தகம் 40 பக்கம்' போன்ற அட்டைகளை எங்கும் பரக்கக் காணக் கூடியதாகவிருக்கிறது.

கூட்டரவுத் தமிழ் பேசும் தொழிலாளர்கள் ஆரம்பித்திருக்கும் இவ் அறப் போராட்டத்தை வாயார வாழ்த்தியும், போற்றியும் ஆதரவு தெரிவித்தும் நாட்டின் நாலா பக்கங்களிலிருந்தும் தந்திச் செய்திகள், கடிதங்கள் வந்து குவிந்தவண்ணமிருக்கின்றன.

கொழும்புக்கு, தலைமைக் காரியாலயத்துக்கு எழுதப்படும் கடிதங்கள் யாவும் தமிழிலேயே எழுதப் படுகின்றன. முகவரியில் காணப்படும் ஆங்கிலப் பெயர்களுக்குத் தமிழில் மொழி பெயர்ப்பும் கொடுக்கப்படுகிறது.

## தி. மு. கழகத்தின் வளர்ச்சி..

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்த கழகம், இம்முறை பன்னிரெண்டு இடங்களில் வெற்றிபெற்றிருக்கிறது. ஆரணியில் முன்பு ஒரு இடம் பெற்றிருந்த கழகம் இம்முறை 11 இடங்களைப் பெற்றிருக்கிறது. நெல்லை மாவட்டத்தில் முன்பு ஒரு இடம்; இம்முறை ஒன்பது இடங்களில் கழகம் வெற்றி பெற்றிருக்கிறது. இப்படிப் பல இடங்களில் கழகம்குறிப்பிடக்கூடியளவு வெற்றி பெற்றிருக்கிறது.

மதுரையில் சென்றமுறை கம்யூனிஸ்டு நிர்வாகம் பதவியிலிருந்தது. இம்முறை காங்கிரஸ் நிர்வாகம் இடம்பிடித்துள்ளது. மதுரை நகராட்சித் தேர்தலில் கழக வேட்பாளர்கள் பலர் நூறுக்கும் உட்பட்ட வாக்குகளால் பல இடங்களில் தோல்வியடைந்துள்ளனர்.

சென்னை நகராட்சியைப் பொறுத்தவரையில் மீண்டும் தி. மு. கழக நிர்வாகம்இடம் பெறப்போகிறது. சென்ற தேர்தலில் கழகம் 45 இடங்களைப்பெற்று பதவியேற்றது. இம்முறை கழகம் 49 இடங்களில் வெற்றிவாகை சூடியுள்ளது. காங்கிரஸ் 40 இடங்களையும், முஸ்லிம் லீக் ஐந்து இடங்களையும் சுயேச்சையாளர்கள் நான்கு இடங்களையும்பெற்றுள்ளார்கள். கம்யூனிஸ்டுக் கட்சி பதினொரு தொகுதியில் போட்டியிட்டு ஒரு தொகுதியில் வெற்றி பெற்றுள்ளது.

### கம்யூனிஸ்டுக்களின் பரிதாப முடிவு

மொத்தத்தில் இந்தத்தேர்தலில் தி. மு. கழகத்துக்கு ஏற்பட்ட இழப்பு சிறிது——இலாபம் பெரிது. காங்கிரஸ்கட்சியைப் பொறுத்தவரையில் என்றுமில்லாத அளவு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. கம்யூனிஸ்டுக் கட்சியைப் பொறுத்தவரையில் தேர்தல் முடிவு பலத்த அரசியல் அடியாக அமைந்துள்ளது. கம்யூனிஸ்டுக்கட்சி எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் தலையெடுக்க முடியுமா என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் எழுப்பப்படுகிறது. சுருங்கக்கூறின் கம்யூனிஸ்டுக் கட்சி தமிழ்நாட்டிலிருந்து வேரோடு களைந்தெறியப்படப் போகிறது என்பதற்கு அறிகுறியாக உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளன.

திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ச்சிபெற்று வருவதற்கும் காங்கிரஸ்கட்சி பலமிழந்து வருவதற்கும் பல காரணங்கள் உள. குறிப்பாக இரு முக்கிய காரணங்களைக் கூறலாம்.

### இரு காரணங்கள்

தென்னாட்டு மக்களின் விருப்பத்திற்குப் புறம்பாக தில்லி அரசு இந்திமொழியை திணிக்க முற்பட்டிருக்கிறது. மீண்டும் உயர்நிலைப்பள்ளி இறுதியாண்டுப் (எஸ். எஸ். எல். சி) பரீட்சைக்குத் தோன்றும் மாணவர்கள் கட்டாயமாக இந்திப் பரீட்சை எழுதவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னர் இதுபோன்று மாணவர்கள் கட்டாயப்படுத்தப்பட்ட பொழுது அவர்கள் காட்டிய எதிர்ப்பின் பிரகாரம் அரசு முடிவை மாற்றியது. எல்லா இந்தியநாட்டு மொழிகளுக்கும் பொது லிபி (எழுத்து) யாக தேவநாகரி லிபியை வைத்துக்கொள்வது என்று மத்திய அரசு மந்திரிகள் கூறிவருகிறார்கள். இவற்றையெல்லாம் தமிழ்நாட்டுகாங்கிரஸ் அரசு மௌனமாக ஏற்றுக்கொண்டுள்ளது. எத்தகைய மறுப்பும் தெரிவிக்க முற்படவில்லை. இதனால் தமிழ்நாடு மக்கள் காங்கிரசின் பால் வெறுப்புக் கொண்டுள்ளார்கள.

இத் திட்டத்தை முறியடிக்க முழுமனதுடன் செயலில் இறங்கும் தி. மு. கழகத்தின்பால் மக்கள் ஆதரவு காட்டுவது தடுக்கமுடியாததாக உள்ளது. தமிழ் நாட்டு காங்கிரஸ் தலைவர்கள் மக்களின் விருப்பத்தை ஏற்று நடப்பதற்குப் புறம்பாக தில்லி தலைவர்களின் நல்ல பிள்ளைகளாக இருப்பதையே விரும்புகின்றனர். எனவே, படித்த மக்கள் காங்கிரசின் உண்மை நிலையை உணர்ந்துவிட்டார்கள். தி. மு. கழகம் வெற்றிபெற்றுள்ள இடங்கள் இதை பட்டவர்த்தனமாக நிரூபிக்கின்றன.

### கூட்டணியால் விளைந்த நாசம்

காங்கிரஸ், கம்யூனிஸ்டுக் கட்சியுடன் தேர்தல் ஒப்பந்தம் ஏற்படுத்தியதன் விளைவாகவும் பல இடங்களை இழந்து உள்ளது. கம்யூனிஸ்டுகள் சீன ஆக்கிரமிப்பின்போது நடந்துகொண்ட முறையினை மக்கள் மறந்துவிடவில்லை. இதை காங்கிரஸ் கட்சி உணர்ந்துகொள்ளாமல், தி. மு. கழகத்தை முறியடிக்க ஆதரவு எங்கிருந்து வந்தாலும், ஏற்றுக்கொள்கிறது. ஆதரவு கொடுப்பவர்களின் பூர்வீகத்தை தெரிந்துகொள்ள காங்கிரஸ் மறந்துவிடுகிறது. ஆனால், மக்கள் மறந்துவிடவில்லை. இந்தகூட்டணியினால் விரக்தி அடைந்த மக்கள் பலர் நாட்டு நலனில் நாட்டமுற்ற கழகத்தினபால் ஆதரவு காட்ட முனைந்துள்ளனர். எனவே, காங்கிரஸ் பல இடங்களை இழந்துள்ளதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகும்.

### அமிர்தலிங்கம் கருத்து

படித்தவர்கள், மாணவர்கள் வாழும் பகுதியிலேயே தி. மு. கழகம் பெரும்பாலும் வெற்றி பெற்றுள்ளது. இந்தித் திணிப்பின் ஆபத்தை உணர்ந்தவர்கள் கழகத்தை ஆதரித்துள்ளார்கள். வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அமிர்தலிங்கம் கூறியதுபோல தேர்தல் முடிவு-தி. மு. கழகத்தின் வெற்றி-இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு கிடைத்த மாபெரும்வெற்றியாகும்.

### முன்னறிவிப்பு

தி. மு. கழகத்தின் வெற்றி வாய்ப்பை இழக்கச்செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் தில்லி மந்திரிகளே வந்து தேர்தல் பிரசாரத்தில் கலந்துகொண்டார்கள். அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் சென்னை நகரில் வீடு வீடாகச் சென்று வாக்கு வேட்டையில் ஈடுபட்டாராம். 'தி. மு. கழகத்தின் வாடையே சென்னை நகராட்சி மன்றத்தில் இல்லாமல் செய்வேன்" என்று திரு. காமராஜ் வீம்பு பேசினாராம். தி. மு. கழக முன்னணித்தலைவர்கள் பலர் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் காரணமாக வெஞ்சிறையில் தள்ளப்பட்டுள்ளனர். ஆனால் கழகம் மீண்டும் சென்னை நகராட்சியைக் கைப்பற்றியுள்ளது.

தி. மு. கழகம் உள்ளூராட்சி நகராட்சி மன்றத்தேர்தலில் பெற்றிருக்கும் வெற்றி, அடுத்த பொதுத்தேர்தலில் தமிழ் நாட்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்குமுன் அறிவித்தலாக அமைந்துள்ளது. இது அரசியல் அவதானிகளின் கருத்து.

## சிங்கள மக்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லுள்ள முகாமுக்குச் சென்றிருந்த போது, வாயில் காவலாளராகக் கடமைபார்த்த ஒரு இராணுவ வீரனின் கவலையீனத்தால், அவருடைய காரில் வாசலிலிருந்த கதவு முட்டிவிட்டதாம்.

அந்த வீரனைக் கோபத்துடன் கடிந்து கொண்ட மேற்படி அதிகாரி 'பஹத்தரட்ட பள்ளா' (தாழ்ந்த பிரதேச நாயே)என்று திட்டினாராம்.

இச் செய்தி இராணுவத்தினரிடையே பரவியதாகவும், அங்கேயும் 'கண்டியப் பிரதேசம், தாழ்ந்த பிரதேசம்' என்ற பாகுபாடு ஏற்பட இம் மாதிரியான செயல்களால் வழி பிறக்கின்றது என்றும் விஷயம் தெரிந்தவர்கள் கூறுகின்றனர்.

## ஆசிரியர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சங்கங்கள் பல பிரசாரக் கூட்டங்களையும் நடாத்தின. ஆசிரியசங்கங்களின்ஏகோபித்த கூட்டு முன்னணியின் தீர்மானத்துக்கொப்ப தமிழ் ஆசிரியர்கள் அனைவரும் தங்களுக்குக்கிடைத்த சிங்களக் காசோலைகளைத் திருப்பி அனுப்பிவருகின்றனர்.

## சர்வாதிகார...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றும் அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றனர். இலங்கை அரசின் இன்றையப் போக்கு எதிர்காலத்தில் இலங்கையைக் "காலவி ஆட்சி"க்குள் கொண்டுவந்துவிடுமோ என்றும் பல பிரமுகர்கள் கவலை கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

ஆதிக்க வெறி பிடித்த அந்நிய நாடு ஒன்றுடன் இலங்கை அத்தியந்த உறவு கொண்டாடுவதால் மேற்படி நாட்டிலிருந்து வியாபார நோக்கமாகவும், வேறு பல காரணங்களுக்காகவும் ஆயிரக்கணக்கானவர்கள் மாதாமாதம் இலங்கைக்கு வந்து, குடியேறுகின்றனராம். அவர்களுடைய வர்த்தக நிலையங்களும் நாட்டின் பல பாகங்களிலும் திடீர் திடீரெனத் தோன்றுவதாகவும் அவதானிகள் கூறுகின்றனர். இந்நிலைமை நீடிக்குமானால் சமாளிக்க முடியாத ஒரு பெரும் பிரச்சினை உருவாகிவிடும் என்றும் அபிப்பிராயம் தெரிவிப்போர் மேலும் வர்ணித்துள்ளனர்.

—

### சென்னை மேயர்

சென்னை நகராட்சி மேயராக 39-வது வட்டார (சூளை) உறுப்பினர் திரு. [illegible] தெரிவுசெய்யப்படலாம் என்று அறியப்படுகிறது.

## புரியாத......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராண்மைக் கழகத் தலைவர் திரு. சிவானந்தமும் வாகன மாற்றல் விபரங்கள் சிங்களத்தில் எழுதப்பட்டதை எதிர்த்து அதனைத் திருப்பி அனுப்பியுள்ளார்.

இரண்டு விடயங்களுக்கும் என்ன நடவடிக்கை எடுப்பதென்று கேட்டு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் மந்திரிக்கு எழுதியுள்ளார் என அறியப்படுகிறது.


## தேவை

பின்வரும் ஊர்களில் 'சுதந்திரன்' விற்பனை செய்ய, முன்பணம் கட்டக் கூடிய ஏஜண்டுகள் தேவை.

மாங்குளம்
வவுனியா
அம்பாறை

நிர்வாகி,
சுதந்திரன்.


## விவாகமானோர்

கொழும்பு எம். வயித்திலிங்கம் கூட்டு நிறுவனம் வரையறுத்த அதிபரும் உரும்பிராய் வாசியுமாகிய செல்லையா அழகரத்தினத்திற்கும் புலோலி பெண்கள் பாடசாலை பழையமாணவி ஆசிரியையும் கிருடாவில் வாசியுமாகிய புஷ்பநேசனி இராகலிங்கத்திற்கும் கடந்த 2—2—1964ல் திருமணம் நடைபெற்றது.


## இன்றே எழுதுங்கள்

எந்த விதமான மனக் கவலைகளோ, வாழ்க்கையில் நிறைவேற வேண்டிய காரியங்களோ இருப்பின் அவைகளை விபரமாக எழுதி அனுப்புங்கள். தெய்வ பலத்தினாலும், மந்திர சக்தியினாலும் உங்கள் காரியங்களை நிவர்த்தி செய்து தர முடியும். இரகசியங்கள் வெளியிடப்பட மாட்டாது.

கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்

பி. எம். திசாநாயக்க

நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா

அருத எண்ணெய் தலைமை காரியாலயம்

கம்பளை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினசரியில் முன் பக்கச் செய்தித் தலைப்பைப் படித்த அருளப்பன் இரும்புக் குண்டாகக் கனக்கும் சென்னியைச் சிரமத்துடன் திமிர்த்துகிறன். சுடுநீர்த் திரைகட்டிய கண்கள் கைசேதச் சாகரத்துள் அமுங்கும் திணறலிலிருந்து மீட்சி பெற அபயங் கோரிச் சுவரிற் தொங்கும் நாட்காட்டியைக் கௌவ்வுகின்றன. அரைக் கண் விழிப்புச் சலனக் காட்சி போல, ஆழ்ந்து அகன்று, அநித்திய வாழ்வுப் பிடிப்பை எகிறிய மனத்தாற் சிலுவையிற் சிரிக்கும் பெம்மானின் திருக்கோலம் காட்சி வழங்குகிறது.



தனது மாணவ உள்ளத்தின் இலட்சியக் கனவுகளை, கனவை நனவாக்கி மகிழக் கருதி கர்மயோக வைராக்கிய சித்தனாய் நாளெல்லாம் பாடம் படித்துச் சேமித்த விஷயஞானத்தை, வறுமையெனும் எலிப் பொறியின் ரம்பப் பற்களுக்குட் சிக்கிய அமுந்தலினிலேயே கற்கும் பணிக்குத் தன்னை அடைவு சாட்டிய அவாவை, இத்தனைக்கும் தன்னை 'உசி'க்காட்டிய உணர்வுகளையெல்லாம் சிலுவையில் அறைந்துவிட்டதான பிரமை அவனுக்கு.

செய்தித் தலைப்பெனுந் துருவிலை இதயத்தைத் தேங்காய்ப் பாதியாக்கி விட்ட தினவு அவன் திரேகமெலாம் பரவுகிறது. பாதங்களிற் கிளைத்து, சிமேந்துத் தரையை ஊடுருவி வேர் பாய்ந்த நிலையில், நிர்ச்சலன சோபிதனாக நிற்கும் அருளப்பனின் கண்கள் செய்தியை மேய்கின்றன. செய்தியைப் படிக்கப் படிக்கப் பனிப் பாறை இடுவலில் சிக்கிய உணர்வு இழைகிறது.

'டொக்...! டொக்...!'

'தம்பி அழுருப்போல ரிக்கி. பேப்பரும் நனையுது. நாலு பத்துப் பேர் படிக்கிற பேப்பராச்சே'

சவரக்கடைக் காசிப்பிள்ளையின் காரியநோக்கு வார்த்தைகள் அருளப்பனை உலுப்பி விடுகின்றன. அதன் தாக்கத்தில் சுய நிலையடைகிறன்.

'என்னையறியாமலே அழுகை வந்திற்று. மன்னித்துக் கொள்ளுங்கண்ணே'

குனிந்து வேட்டித் தொங்கலால் கண்களை ஒற்றியெடுக்கிறன். மனதை ஒரு நிலைப்படுத்திக் குளவிக் கூட்டில் கல்லெறிந்தவனின் ஆதுரத்தை தன்னிலே பின்ன விட்டுச் செய்தி முழுவதையும் படித்து முடித்ததும் அருளப்பனுக்குக் கோவென்று கதற வேண்டும் போலிருந்தது.

அதனுலாவது மனச்சுமையின் பெரும்பாகம் கழியக் கூடுமல்லவா? தான் நிற்கும் களம் பற்றிய பிரக்ஞையின் எச்சரிக்கையை ஏற்று இதழ் விளிம்புகளை உள் மடித்து ஒரு விசிப்பை மாத்திரம் உதிர்த்து விட்டு, பத்திரிகையைக் கடை வாங்கிலே போட்டு விட்டு வெளியேறுகிறன். போகும் போதே கடையை ஒரு தரம் திரும்பிப் பார்க்கிறன். தன் மன அவசத்தின் பார அழுத்தத்தால் கடைத்தளம் இடிந்திருக்க வேண்டுமென்ற எண்ணம் அவனுக்கு.

## (2)

கிராமப் புறங்களில் அநேகமாக வறிய மாணவர் விவேகிகளாகவும், வகுப்பு முதன்மை பெறுபவர்களாகவும் அமைந்து விடுகிறர்கள் என்பதை அவர்களோடு உடனிருந்து பழகியவர்கள் ஒப்புக்கொண்டே தீர்வர். அந்த அபிப்பிராயத்தை மேலும் வலுப்படுத்தியவன் அருளப்பன். தெரு உறங்கிகளுக்கும் மாளிகை வாசத்துக்குமிடையிலான எட்டாக் கை தங்களுக்கும் பள்ளிப் படிப்புக்குமென்று மலைக்கும் நிலையிலுள்ள வறியவர்களும் முயன்றல் முன்னேறலாம் என்பதற்கு அருள், நமூனவாக அமைந்தவன். கணிதம், புவியியல் போன்ற பொறுக்கும் துாடங்கள் அவன் விசேட ஆற்றலுக்குரியவை. அதனுல் அவன் மற்றப் பாடங்களில் யாருக்கும் சளைத்தவன் என்றர்த்தமல்ல.

பிறந்த முதல் மாதத்திலேயே தகப்பனைத் தின்று ஏப்பம்விட்ட அவனை ஊட்டி வளர்க்கும் வரம் பெற்று வந்த ஒரே ஆத்மா, சுசரோகக் கிருமிகளின் பசிக்குத் தன்னை இரையாக்கிக் கொண்ட அவன் தாய்தான். எண்பது ரூபாக்களால் இரு மனித ஜீவன்களும், கோடிக் கணக்கான புழுக்களும் உயிர் வாழ்வதென்பது இலகுவான காரியமன்று. அந்த அசுர சாதனையை அவன் தாய் நிலைநாட்டி வருகின்றுள்.

தலைமையாசிரியர் சுவான் பிள்ளை அருளின் தாய்மாமன், புகழின் கொடு முடியிலே அரியாசனங் கொண்டிருப்பவர். உத்தியோக வாசனையே அறியாத கிராமம் புகழ் பூக்க வந்த முதல் ஆசிரியர் என்ற தகைமையை மாத்திரம் மூலதனமாக வைத்து கிராமத்தின் ராஜ குடும்பத்திலே பெண் கொண்டவர்.

புகுந்தகத்து நிர்ப்பந்தம் பிறந்து விடத்துக்குப் பரிவு காட்ட நீளவொட்டாது தன் கரங்களுக்குத் தளையிட்டதை இளமைத் துடிப்புக்கு ஆட்பட்டு ஆரம்பத்தில் எதிர்த்தாலும் காலக்கிரமத்தில், வாழும் புத்தி என்று கருதி ததாஸ்து போட்டவர். பெற்றவர்கள் நித்திய யாத்திரையை மேற்கொள்ள, இரத்த உறவு என்று சொல்லிக் கொள்ள இருந்த ஒரே ஜீவன் அருளின் தாய்தான். என்ன விருந்தாலும், நெருக்கமும், அசுத்தமும் கொண்ட பகைப்புலத்தில் அமைந்து, வறுமைக் கலையைப் பயிற்றுவித்த வாழ்க்கைப் பல்கலைக் கழகம் தங்கையைப் பட்டதாரியாக்கி விட்டதைச் செவியுற்ற ஆரம்பத்தில், சுவான்பிள்ளையின் நெஞ்சம் அவளுக்கு மானசிகப் பரிவு காட்டியதை மறுக்கக் கூடாது.

தன் குடும்பத்தில் இப்படியானதொரு துருப்புச் சீட்டைத் தேவன் பிரயோகித்திருக்கக் கூடாது என்று வருந்திஞலும், காலகதியில், அவள் தேடி வந்த சாபல்யம் அப்படி என்று தன்னைத் தேற்றிக் கொண்டார். சகோதர பாசத்துக்காக, பணக்கார மனைவியால் உதறிவிடப்படும் ஆபத்துக்குத் தன்னை ஆளாக்கிக் கொள்ள அவர் விரும்பவில்லை. சுருக்கமாகச் சொல்லப் போனல், சவரஞ்செய்யப் பணங் கொடுப்பது முதல் உடுப்பு வாங்கிச் சருவது வரையுள்ள எல்லாக் கருமங்களையுமே மனைவியிடம் ஒப்படைத்து விட்டு நிம்மதியாகக் காலங் கழிப்பவர்.

சுவான்பிள்ளையின் வாழ்க்கையில் பல தனிச் சிறப்புகளுண்டு. வாழ்க்கைக் கழனியில் ஒவ்வொரு போகத்திலும் வெற்றிகரமாக அட்டுவங்கட்டவென்றே அவதரித்த புண்ணியயாத்துமா. அவர் பாஷையிற் சொல்லப் போனல், கிராமத்தின் கல்வி வளர்ச்சியிற் பல மைல்க் கற்களை நாட்டும் பிரீதியில் சொந்தவூர்ப் பாடசாலையின் தலைமைப் பொறுப்பைக் கையேற்றுள்ளார். சொந்த நலன்தான் உள்ளுறை உண்மை என்று சுட்ட விரும்புவோர் விசுவாச பங்கம் செய்த தான்தோன்றிகள்—எனும் பட்டத்தைச் சுமக்கத் தயாராக இருக்க வேண்டும்.

## (3)

அருளப்பன் முதல் அவன் வகுப்பு மாணவர் எழுவருக்கும், க. பொ. த. பரீட்சைக்கான பிரவேசப்பத்திரம் வந்தது. அதே பரீட்சைக்கு மேற்பார்வையாளராக சுவான் பிள்ளையும் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகக் கூறும் மேலிடத்துக் கட்டளையும் கூடவே வந்தது. சுவான் பிள்ளைக்கு ஜீவன் முக்தியே கிடைத்துவிட்டதான பூரிப்பின் புளகத்தில் தலைதொன் கணக்காகக் கனத்துவிட்டது என்று கூறுவது மிகைத்துரைத்ததாகாது.

'அடுப்பிலேறியது கொடுப்பிலேற வழியில்லை' யென்பதைப் பிரமாணமதெரிந்தவர்கள் சுட்டிக் காட்டிய போது, இமயத்தைப் பெயர்த்தவர் நெஞ்சிலே போட்ட அவஸ்தை முட்டி நின்றது. அருள் தன் பாதையில் காட்டாருக நிற்கிறனென்பதை எண்ணியபோது அவனைக் கொல்ல வேண்டும் போல் இருந்தது அவருக்கு.



பரீட்சை மேற்பார்வை பண்ணுவதாற் கிடைக்கும் மேலதிக வருமானத்திற்காக அவர் அங்கலாய்க்கவில்லை. தனது தகுதியையும் எகிறிக் கிடைக்காமற் கிடைத்த கீர்த்தியை இழப்பதை நினைத்தபோது இதயத்தைத் திருக்கைமுள்ளால் சல்லடை போடும் வேதனை கம்மி நின்றது.

கௌரவத்திற்கு இழுக்கென்றுதெரிந்தும், காலமில்லாக்காலம தன் காலடிக்கு வந்த தமையனின் கெஞ்சுதலை நிராகரிக்க அருளின் தாயான புழுவரித்த கூட்டின் ஏழை மனம் ஒப்பவில்லை. சுவாசப் பையை அரித்த புழுக்களால் சுபாவமான அவள் மனத்தை அரிக்க முடியவில்லைப் போலும். தனது சொல்லை மீறி நடக்கும் பிள்ளையாக அருளப்பனை அவள் வளர்த்திருக்கவுமில்லை.

அருளின் சுகவீன அத்தாட்சிப் பத்திரம் மாட்சிமை தங்கிய மகாராணியின் சேவைக்காக' என்ற வாசகச் சுருக்கம் பொறித்த முத்திரை ஒட்டிய உறையில் அடக்கம் செய்யப்பட்டு, பரீட்சாதிகாரியின் விலாசமிடப்பட்டு; உடனடியாகக் கொழும்புத் தபாலில் சேர்க்கப்பட்டது.

ஊரை ஏமாற்றி மகிழ்ந்த இடையனைப் புலி ஏமாற்றிய கதையாக அடுத்த வருடம் பரீட்சைக்காலமாகப் பார்த்துக் குளிர் ஜன்னி அருளப்பனை அடித்து குடிசையுள் போட்டது.

இரு வருடங்கள்—

சுவான் பிள்ளையைப் பொறுத்தவரை ஏற்ற இறக்கத்தையோ, திருப்பத்தையோ நிகழ்த்தாது மிகச் சாதாரணமாக நகர்ந்துவிட்டன.

அருளப்பன் விஷயத்திலோ, அரசியலின் போக்கையே திசை திருப்பி நிர்வாக மாற்றங்களை ஏற்படுத்திய யுகசந்தி.



## (4)

புகையில் வெந்த பிஞ்சு வாழைக்காயின் வெது வெதுப்பில் முகத்தைப் பொலியவிட்டு வரும் அருளைக் கண்டதும் ஆறுமுகம் ஒரு கணப் அதிர்ந்து போனன். பாரதூரமான சஞ்சலத்தினுல் நண்பனின் மனம் செங்கற் சூளையாகக் கனன்றுகொண்டிருக்கின்றது என்பதைத்தீர்மானிக்க அவனுக்கு நேரமெடுக்கவில்லை.

ஆறுமுகம் அருளப்பனின் துன்பத்தைப் பகிர்ந்து கொள்பவன். இன்பத்தை நுகரவும் அவனுக்குக் கொள்ளையாசை அந்த வாய்ப்பு பாலை வெளியில் மருதை மரமாகவே ஆகிவிடுகிறது. சமயவேற்றுமையோ பொருளாதார ஏற்றத் தாழ்வோ அவர்கள் நட்புக்கு வேலி கட்டியதில்லை. புதுக் கிணற்றடி வாழைபோல மனசிலே பசுமையோடிக்கிடக்கும் அருளப்பனின் ஆற்றலை--அனுயாசமாக, தனக்கு மலைப்பைத் தரும் கணக்குகளின் சிக்கறுத்துதவிய சந்தர்ப்பங்கள் நினைவுக் குவியத்தில் தோற்றம் வழங்கும் போதெல்லாம் அருளைப் பேராசிரியராகவே கண்டு பரவசப்படும் சுபாவம் ஆறுமுகத்துக்கு. தானும், சக மாணவர்களும் பரீட்சை சித்தியடைந்திருப்பதையும், அருளுக்கு இன்னும் அந்த வாய்ப்புக் கிட்டாதிருப்பதையும் நினைக்குந்தோறும், அருளின்மீது ஆறுமுகத்தின் பரிவுணர்ச்சி மடைதிறந்து பாய்வதுண்டு.

அருளை ஒதுக்குப்புறமாக அழைத்துச்செல்ல விரும்பிய ஆறுமுகம், அவன் கையைப் பிடித்து இழுத்துச் செல்கிறன். வழிகாட்டியைத் தொடரும் கபோதிபோல ஆறுமுகத்தைப் பின் தொடர்கிறன் அருளப்பன். நீரில் முக்குளிப்பவன் மரத்தின் வேர்பற்றிய தெம்பில் பிதக்கின்றனு?

இருவரும் தெருவின் வளைவைக் கடந்துஒழுங்கையிலே கிறுகுகிறர்கள். ஆறுமுகம் ஒன்றும் கண்டிய நடன அபிநயம் பிடிக்கவில்லை. சூரியனை நகல் பண்ணிய கருமணலின் தகிப்பு அவனை அவ்வாறு இயங்கச் செய்கிறது. அருளப்பனே...? மாமிசச் சிலை போல சலனமற்று நடந்து கொண்டிருக்கிறனே! நஞ்சை நண்பனுக ஏற்று உயிர்வாழப் பழகிப்போன உடலில் விரிபுடையனின் விஷங்கூடத் தோற்றுப் போவதே போல, அருளப்பனின் மன வேக்காட்டின் முன் கருமணலின் வெம்மை பின்வாங்குகிறதா? குறுகி, தன் கவடுகளுக்கிடையிற் சிறைபட்டுத் தொடரும் அவனது நிழலிலே அப்படி என்ன கவர்ச்சியைக் கண்டு விட்டான். சுவான் பிள்ளையின் 'கடுகினுஞ் சிறிய உள்ளத்தை' உருவகித்துக் கொள்கிறனு?

எதிரே தென்பட்ட தேநீர்க் கடையுள் அருளை அழைத்துக்கொண்டு நுழைகிறன் ஆறுமுகம்.

'அருள் என்ன நடந்தது? நீ இப்படி அதிர்ந்து போனதை இன்றுதான் பார்க்கிறேன்.'

ஆறுமுகம் பரிவோடு கேட்ட வினு அருளின்செவிப் பறையைத்தீண்டியதாகவே தெரியவில்லை. அவன் பார்வை எதிர்ப்புறச் சுவரிலேயே நிலைத்திருக்கிறது. சுவர் காரை உதிர்ந்து பிளந்துபோய் இருக்கிறது; அவன் நெஞ்சைப்போல.

தேநீர்க்கடைச் சுவாமிநாதன் பருப்புவடைத் தட்டத்தை அவர்கள் முன் வைக்கிறன். தனது வாடிக்கைக் காரரில் யார் யாருக்கு எந்தெந்தச் சுவை பிடிக்கும் என்பதைக் கிரகித்துவைத்திருக்கும் அனுபூதி அவன்.

'அருள், பழுக்கக் காய்ச்சிய இரும்புக்கு நிகராக எதையோ மனதிலே புதைத்து வைத்திருக்கிறய் போலிருக்கிறது என்னநடந்தது?'

'ம்.........'

சுவாமிநாதன் பால் வார்த்த இரு கண்ணுடித் தமிளர்களை அவர்கள் முன் வைக்கிறன். பாலின் மேல் மட்டத்தில் சாடையாகப் பிழிந்து விடப்பட்ட தேயிலைக் கஷாயம் தொட்டங் கட்டி, பாலைக் கலங்க வைக்கிறது. ஆவி இருவர் முகங்களையும்பாரவிச் சுழல்கிறது.

'ம்...யாரதும் தனிப்பட்ட விவகாரங்களை நாமேன் அறிய வேண்டும்.'

'இன்றையப் பத்திரிகையைப் படித்துப் பார்!'

'அண்ணே, தயவுசெய்து பேப்பரிருந்தாத் தாங்க'

சுவாமிநாதன் பத்திரிகையை எடுத்துக்கொடுக்க, அதை அவசரமாக வாங்கி முன் பக்கத்தில் பார்வையை மேயவிடுகிறன் ஆறுமுகம்.

'க. பொ. த. பரீட்சையில் புதிய திருத்தங்கள்.'

(15-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரதரின் 'பல குறிப்பு' தமிழில் புது முயற்சி

## மாணவ சமூகத்திற்கு ஒரு பல்கலைக் கழகம்

### வர்த்தகருக்கும் பொது மக்களுக்கும் அரிய பொக்கிஷம்

"தம்பி! விமானத் தபாலுக்கு எத்தனை சதம் முத்திரை?"—இப்படி அம்மா கேட்பார்.

"எங்கள் பாராளுமன்ற உறுப்பினரின் தொலைபேசி இலக்கம் யாது?" — இப்படி அப்பா கேட்பார்.

"கண்டிக்குப் போகும் போது எப்பாதை வழி போகலாம்?" — இப்படிக் கார்ச் சாரதி கேட்பார்.

"திருக்குறள் நாடக மன்ற முகவரி என்ன?"—என நடிகர் ஒருவர் கேட்பார்.

"இந்தமாசத்தில் திருமண முகூர்த்தம் உண்டா?"—இவ்விதம் கலியாணத் தரகர் வினவுவார்.

"வருமானவரி விபரம் தெரியுமா?"—இப்படி ஒருவர் கேட்பார்.

"ஆண்டு விழாவல்லவா? பேச்சாளரது முகவரிகள் வேண்டுமே?"

"புகைவண்டிகள் புறப்படும் நேரம் வேண்டுமே!"

"எப்போது கடைகள் மூடியிருக்கும்?"

"எங்கே இரும்புச் சாமான் வாங்கலாம்?"

"ஓவியர் எங்கே வாழ்கிறார்?"

அப்பப்பா? தினமும் எத்தனை வினாக்களை உறவினர்கள், நண்பர்கள் கேட்கிறார்கள்.

எல்லா விபரமும் தெரிந்தவர்கள் யாருமே கிடையாது. அந்தந்த விடயம் பற்றி அறிந்தவரையல்லவா தேடியோட வேண்டும். அது சுலபமானதா? நேரம் வீணல்லவா? அதுவும் சரியாக உள்ள படி பதில் கிட்டுமா?

வாழ்வில் தினமும் — ஏன் ஒவ்வொரு கணமும், எத்தனையோ விடயங்களையறிய வேண்டிய தேவைகள் சூழ்ந்த உலகில் வாழ்கின்றோம். இவற்றுக்கெல்லாம் பதிலாக—எல்லா விபரமுமடங்கியதாக—ஒரு புத்தகமிருந்தால்......??

ஆம்! இருக்கிறது! இருக்கிறது!

அதோ 'டைரக்டறி...' ...அது ஆங்கிலத்திலல்லவா உள்ளது. இதோ சிங்களத்திலல்லவா உள்ளது.

தமிழில் உண்டா?—பதில் என்ன?

இத்தனை நாளும் 'இல்லை' என்றே பதில் வந்தது. இனி 'ஆம்' என ஓங்காரக் குரலிடலாம்.

'வரதரின் பல குறிப்பு' என்னும் நூல் எல்லா விபரமுமடங்கியதாக, மக்களது அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கிறது.

தமிழில் புது முயற்சி! வரதரின் அசாத்திய துணிவு தமிழுக்கு ஒருபுதுமை சேர்க்கிறது. புது வழி சென்று புதுமை சிந்தும் வரதரின் இம் முயற்சி கண்டு தமிழ் மாதா இறும்பூது கொள்வாள்.

'எங்கள் மொழியிலெல்லாமுண்டு' என நாம் தலைநிமிர்ந்து கூற வரதர் வழி சமைத்துள்ளார்.

எனவே, தமிழ்பேசும் மக்கள் யாவரும் இம் முயற்சிக்கு ஆதரவு நல்க வேண்டும். வரதர் கேட்பது, ஆதரவு மட்டுமே.

ஒவ்வொரு வீட்டு மேசையிலும் இந் நூலிருப்பின்... ...'வீட்டில் ஒரு பல்கலைக்கழகம்' இருப்பது போல, எதையும் உடனே எடுத்துப் பார்த்துக்கொள்ள முடியும். எதையும் ஒரு கணத்தில் பார்க்கக்கூடியதாக அமைந்து, அகரவரிசைப்படி ஒழுங்கு செய்து—பக்கங்களுடன் இப்பல குறிப்பு வெளிவரவுள்ளது.

பத்து ரூபாவுக்கு பலரூபா விடயம் கிட்டும். வர்த்தகருக்கும் பொது மக்களுக்கும் ஓர் அரிய பொக்கிஷம், என்பதை நூலைக்கண்டதும் யாவரும் ஒப்புக்கொண்டே யாவர்.

—புதுமைலோலன்.

## உரிமை பெற்று வாழ....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்து வருகிறது. மொழிக்கு பூரண உரிமையும் கிடைக்கும் வரையும் தொடர்ந்து நாம் போராடுவோம். அதைப் போல், குடியுரிமைக்காகவும் வாக்குரிமைக்காகவும், நாம் தொடர்ந்து போராடுவோம்."

### தோட்டக் குழு

கூட்டத்தில் கீழ்க்காணும் தோட்டக்குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவர்: திரு. சின்னப்பன், உபதலைவர்: திரு. கே. செல்லப்பன், காரியதரிசி: திரு. கே எஸ். குள்ளன், உபகாரியதரிசி: பி. கணபதி, பொருளாளர்: திரு. எம். வீரய்யா, கலக்டர்: திரு. டீ. ராமசாமி.

கமிட்டி மெம்பர்கள்:

திருவாளர்கள்: வையாபுரி, எஸ். கந்தசாமி, அடைக்கன், வெள்ளையன், கே. பெருமாள், எம். பழனி, கே. ஏ. முத்துசாமி, சிக்கன், மருதை, பூ. பழனியாண்டி, ம. சப்பாணி, வீரபுத்திரன்.

மாதர் குழு:-

திருமதிகள்: செல்லம்மாள் தலைவி, மரியாய் உப தலைவி, ஆராய், காரியதரிசி, வள்ளியம்மை, உப காரியதரிசி, பாப்பாத்தி, பொருளாளர். குழு அங்கத்தினர்கள்: அங்கம்மாள், குள்ளம்மாள், தனபாக்கியம் பொட்டு, ஆண்டிச்சி, பொன்னம்மா, சின்னபிள்ளை, நாகம்மாள், நீலம்பாள், செல்லம்மாள். தொண்டர்கள்: ஐயம்பெருமாள், பழனிவேல், ஆறுமுகம், ம. ராமன், கிருஷ்ணன், எஸ். ராமசாமி, எஸ். கந்தசாமி, பி. ராமசாமி, சுப்பையா, கு. பெருமாள், ஆ. சண்முகம், சுப்பிரமணியம், மருதைவீரன்.

## சட்டமறிந்து...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தீவிரமாக எதிர்த்து எட்டு மணி நேர வேலைக்கு வழி செய்தவரும் அவரே.

### பெரிய கங்காணியின் எதிரி

பெரிய கங்காணி வழி வளர்ந்த திரு பெரிசுந்தரம் பெரிய கங்காணிகளின் எதிரியாகவும் மாறினார்.

தோட்டத் தொழிலாளர்கள் இடைவிடாதுஉழைத்து மாத முடிவில் தாம் பெறும் ஊதியத்தைப் பெரிய கங்காணிகள் இடையில் நின்று பற்றிக் கொள்வர். குட்டிச் சர்வாதிகாரிகளாகஇயங்கிய கணக்குப் பிள்ளைகள், பெரிய கங்காணிகள் தொழிலாளர்களின் ஊதியங்களைச் சூறையாடாவண்ணம் சட்டஒழுங்குகளைக் கொண்டு வந்தார் திரு. பெரிசுந்தரம். இந்தச் செயலினால் பெரியகங்காணிகள் இவரது எதிரியாகவும் மாறினர்.

(தொடரும்)


## 'வரதரின் பலகுறிப்பு [DIRECTORY]

ஆங்கிலத்தில் பலவிதமான சிறந்த 'டைரக்டரி'கள் இருப்பதை அநேக அன்பர்கள் அறிவார்கள். சமீபகாலமாகச் சிங்களத்திலும் அவ்வித டைரக்டரி வெளிவந்துள்ளது. ஆனால் நமது ஈழத் தமிழகத்தில் இதுவரை அவ்விதமான நல்லதோர் டைரக்டரி தமிழில் வெளிவராதது ஒரு பெரிய குறையாகும்.

இந்தக் குறையைப் போக்க வேண்டும் என்னும் அவாவினால் மிகுந்த பிரயாசையுடன் 'பலகுறிப்பு' என்னும் பெயரோடு ஒரு தமிழ் 'டைரக்டரி'யை வெளியிட முன் வந்துள்ளோமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தப் 'பல குறிப்பு' வர்த்தகப் பெருமக்களுக்கும், பொது மக்களுக்கும் மிகச் சிறந்த கைத்துணையாக விளங்குமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

முக்கியமான பல விஷயங்களையும் இந்தப் 'பல குறிப்பு' நூலில் சேர்ப்பதற்காக, பல துறைகளிலும் அனுபவம் மிக்க அறிஞர்கள் மிகுந்த சுறுசுறுப்புடன் வேலை செய்து வருகிறார்கள். பல நூற்றுக் கணக்கான பக்கங்களுடனும் நல்ல கட்டுக்கோப்புடனும் எதிர்வரும் 1964 ஏப்ரல் மாதத்தில் இந் நூல் வெளியாகும்.

ஈழத்தமிழகத்துக்கே ஒரு புதுமுயற்சியான இந்த 'பல குறிப்பு' மிகச் சிறந்த முறையில் வெளிவருவதற்குத் தங்கள் பேராதரவும் மிக முக்கியமானதாகும்.

இந்நூலில் சேர்ப்பதற்கான மதிப்பு மிக்க விளம்பரங்களைக் கொடுத்து உதவுவதன்மூலமும் இந்நூலின் ஒரு பிரதியை வாங்குவதன் மூலமும் தங்கள் பேராதரவைத் தருவீர்களென நம்புகிறோம்.

வர்த்தகத்தொழில் அதிபர்களுக்கு:

கீழே குறிக்கப் பெற்றுள்ள வர்த்தகம் அல்லது தொழில்களில் தாங்கள் எவ்வெவற்றைக்கொண்டு நடத்துகிறீர்களென்பதைத் தயவுசெய்து குறிப்பிடுங்கள். 'வரத'ரின் "பலகுறிப்பு" நூலில் குறிப்பிட்ட வரிசையில் தங்கள் பெயர் முகவரி விபரங்களை வெளியிட விரும்புகிறோம்.

அர்ச்சகங்கள், அடைவுகடை, அலுமினியப் பாத்திரம் தயாரிப்போரும் விற்பனை செய்வோரும், அந்தியகால—விவாக சகாய நிதிகள், அழகு சாதனங்கள் விற்போர், இனிப்பு வகை தயாரிப்போர், இரும்புக் கேற்றுகள் யன்னல்கள் தயாரிப்போர், இரும்புக்கடை, இரும்புப் பெட்டி விற்போர், உணவு விடுதிகள்—உடுப்புகள் தயாரிப்போரும் விற்போரும்.

எவர்சில்வர் பொருட்கள் விற்போர், ஏலவிற்பனையாளர்—தரகர், ஏற்றுமதி இறக்குமதியாளர், ஓடுகள் விற்போர், ஓவியர், கதாப் பிரசங்கம் நிகழ்த்துவோர், கடிகாரம் விற்பனையோர்-திருத்துவோர், கட்டிட மாதிரி தயாரிப்போர், கட்டிடப் பொருள்கள் விற்போர், கட்டிட ஒப்பந்தக்காரர், கணக்குப் பரிசோதகர், கண் பரிசோதகரும், மூக்குக் கண்ணாடி விற்பனைசெய்வோரும், கமெரு, கலண்டர் தயாரிப்போர்.

கராச், காட்போட்பெட்டி தயாரிப்போர், குடிவகை விற்போர், குளிர்பானம் தயாரிப்போர், குளிர்ச்சாதனப் பொருட்கள் விற்போர், கொப்பறு வியாபாரிகள், சங்கீதக் கச்சேரிசெய்வோர், சங்கீத ஆசிரியர்கள், சங்கீதக் கருவிகள் விற்பனை செய்வோர், சப்பாத்து, செருப்பு விற்பனையாளர், சலவைத் தொழிற்சாலை, சாயம் போடுவோர், சிகை அலங்கரிப்போர், சினிமாத் தியேட்டர்கள்.

சுருட்டு, சிகரெட் தயாரிப்போர், சோட், சோப் தயாரிப்போர், சோடனைப் பொருள்கள் - சப்பறம் வாடகைக்கு விடுவோர், சைக்கிளும் உபகரணங்களும் விற்போர், தட்டச்சு (டைப்ரைட்டர்) விற்பனை செய்வோர்— திருத்துவோர், தளபாடங்கள் தயாரிப்போரும் விற்போரும், தீப்பெட்டி தயாரிப்போர், தேயிலை விற்பனையாளர், தையல் மெஷின் விற்பனையாளர், பக்கவாதத் திபக்காரர், பத்திரிகை விற்பனையாளர், பலசரக்கு விற்பனையாளர், பல் வைத்தியர், பாக்கு விற்பனையாளர்.

பாடம் சொல்லிக் கொடுப்போர் (டியூசன்), பிளாஸ்டிக் தொழிற்சாலை, பிரசுராலயம், பிரயாண வசதி செய்வோர், பிறேம் போடுவோர், பிஸ்கட் தயாரிப்போர், பீடி தயாரிப்போர், பீங்கான் பாத்திர விற்பனையாளர், புகைப்படம் பிடிப்போர், புடைவை வர்த்தகர், புத்தகசாலை, பெயின்ற் வகைகள், பேப்பர் விற்பனையாளர்.

மட்பாண்டம் தயாரிப்போர், மருந்துச்சாலைகள், மர வியாபாரம், மின்சார உபகரணங்கள் விற்போர், மின் விளக்கு, ஒலிபரப்பி வாடகைக்குக் கொடுப்போர், மீன்பிடி உபகரணங்கள் விற்போர், மேள நாதஸ்வர கோஷ்டிகள், மோட்டார் வண்டி திருத்துவோர்.

நகை வியாபாரிகள், நடனக் கச்சேரி நிகழ்த்துவோர். விவசாய யந்திரங்கள், கருவிகள் விற்பனை செய்வோர், விளம்பர ஏஜண்டுகள், வெல்டிங் வேலை செய்வோர்.

இதில் குறிப்பிடப்படாத வேறு ஏதாவது வர்த்தகம், தொழில் செய்பவர்களும் அவற்றைக் குறிப்பிட்டு எழுதலாம்.

அநேக பக்கங்களைக் கொண்டதும் நேர்த்தியான கட்டுக் கோப்புகளைக் கொண்டதும் எந்தச் சமயத்திலும் உங்களுக்கு வேண்டிய பலவித குறிப்புகளையும் தெரிந்து கொள்ளக் கூடியதுமான இந்நூலின் விலை ரூபா 10/- மட்டுமே. நீங்கள் இதில் ஒரு பிரதி வாங்குவீர்களானால் உங்கள் பெயரும் முகவரியும் 'முகவரிகள்' என்ற பகுதியில் எவ்வித கட்டணமுமின்றி வெளியிடப்படும். அதுமட்டுமல்ல, உங்களுக்குச் சொந்தமான தொழில் வர்த்தக நிலையங்களின் பெயர் விபரங்களும் எவ்வித கட்டணமுமின்றிப் பிரசுரிக்கப்படும்.

ஆகவே ரூபா 10/- கொடுத்து நீங்கள் ஒரு பிரதியை வாங்கிக் கொள்வது எல்லா வகைகளிலும் சிறந்ததும் லாபகரமானதுமாகும்.

தொலைபேசி: யாழ்ப்பாணம் 348
தந்தி: அச்சகம், யாழ்ப்பாணம்.

**வரதர் வெளியீடு**

[illegible] வீதி, யாழ்ப்பாணம்.

தி. ச. வரதராசன்
நிர்வாகி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரோஜாதேவி இலங்கை வருகிருர்

## கொழும்பில் நடைபெறும் களியாட்ட விழாவில் கலந்துகொள்கிருர்

(நமது சென்னை நிருபர்)

கன்னடப் பைங்கிளி சரோஜாதேவி தன் குழுவினருடன் மார்ச் மாதம் 12ம் திகதி இலங்கை வருகிருர் எனத் தெரிகிறது. இலங்கையில் நான்கு நாட்கள் தங்கவிருப்பதாகவும் கூறப்படுகிறது.



தென்னகத்து முன்னணி நட்சத்திரமாகத் திகழும் பி. சரோஜாதேவி 12ம் திகதி வியாழக்கிழமை இலங்கைக்கு வரவிருக்கிருர். சரோஜா தேவியின் தாயாரும், நெருங்கிய உறவினர் மூவரும், வேறு இருவரும் மொத்தம் 7 பேர் இலங்கை வருவதற்கான ஆயத்தங்கள் சென்னையில் நடைபெறுவதாக அறிகிருேம்.

'கல்யாணப் பரிசு' படம் இலங்கையில் திரையிடப்பட்டு வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் போது சரோஜா தேவி இலங்கை வருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றிருந்தன. ஆனுல் திடீரெனப் பயணம் கைவிடப்பட்டது. ஆனுல் இம்முறை இலங்கை வருவது உறுதி என்று கூறப்படுகிறது.

இலங்கையில் நடைபெறவிருக்கும் ஒரு களியாட்ட விழாவில் கலந்து கொள்ளவே இலங்கை வருகிருர் என்றும், 4 நாட்கள் இலங்கையில் கழிப்பார் என்றும் சென்னையில் கூறப்படுகிறது.

## எமது விமர்சனம்

கஸ்தூரி பிலிம்ஸ்

## பார் மகளே பார்

செல்வப் பெருக்கால் ஏற்பட்ட செருக்கு—அத்துடன் சேர்ந்துகொண்ட அந்தஸ்து மிடுக்கு இத்தனைக்கும் நடுவில் குடும்பப்பாசம்; அதனுல் உண்டான ஏமாற்றம், சிவாவை ஆட்டிப் படைக்கின்றன.

எரிமலைக்குள் அடங்கிக் கிடக்கும் பூகம்பம் ஒருநாள் வெடித்து விடுகிறது. அன்புக்குப் பாத்திரமான அருமை மனைவி பாரதூரமான ஒரு இரகசியத்தைப் பதினெட்டு வருடங்கள் மறைத்து வைப்பதென்ருல் எந்தக் கணவனுல்தான் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? தனது அந்தஸ்துக் கோட்டை சரிவதைச் சகிக்க மாட்டாத சிவா தற்கொலை செய்யும் முடிவுக்கு வருகிருன். ஆனுல் ஈடேறவில்லை.

பூகம்பத்தின் வேகம் அடங்க, மகளான சந்திரா தன் முடிவைத் தேட முனைந்தும் புயல் ஓயவில்லை. சிவாவின் உள்ளம் படம் போடப் படுவதால், அவன் பண்புக் கயிற்றைக்கொண்டு குடும்ப உறவைப் பிணைக்கிருன்.

பணம் படைத்த சீமான் வேடத்தில் வரும் சிவாஜியைப் பற்றி நாம் வர்ணிக்க முடியாது. அவருடைய வாயில் மதுரைத் தமிழ் விளையாடுகிறது. பாசம்—அந்தஸ்து இவற்றுக் கிடையில் சிக்கி அல்லலுறும் கட்டங்களில் நம்மை எங்கோ கொண்டு சென்றுவிடுகிருர். அவருக் கேற்ற மனைவியாக வருபவர் சௌகார் ஜானகி. இக் குடும்பத்திற்குள் நட்டுவனுராக சதா 'ஜதி' சொல்லிக் கொண்டு ராதா புகுந்து விடுகிருர்.

சிவாவின் இரு குழந்தைகள் சந்திரா—காந்தாவாக வருபவர்கள் விஜயகுமாரியும், புஷ்பலதாவும். காந்தாவின் பால்ய தோற்றத்தில் பேபி விமலா தோன்றித் துடுக்காக நடிக்கிருர். வருங்கால கலை வளர்ச்சிக்கேற்ற முத்திரையும் தென்படுகிறது.

கருணாநிதி, சீதாலட்சுமி சோடி பேசும் 'இராமநாதபுரம்' தமிழ் அற்புதமாக அமைந்திருக்கிறது. அவர்களுடன் மதராஸ் தமிழை மோத விடுவதும் சிறப்பாகவிருக்கிறது. வி. கே. ராமசாமி, முத்துராமன் முதலானேரும் வருகின்றனர்.

பீம்சிங்கின் தரமான டைரக்ஷனில் தயாரான 'பார் மகளே பார்' பலவிதமான ரசபாவங்களைப் பிரதிபலிப்பதால் பார்ப்போருக்கு நிச்சயம் பரவசமேற்படுத்தும் என்பது திண்ணம்.

—நாதன்



வண்ணை

## சரவணபவா நாடக மன்றம் ஆண்டு விழா நாடக விழா

"இசையும் நடனமும் இசைந்து ஆங்காங்கு உரை நடையில் நிகழ்வது நாடகம். ஆனுல் நாடகம் என்ற சொல் பண்டைக் காலத்தில் கூத்தென்றே வழக்கில் இருந்திருக்கிறது. இந்தக் கூத்தினைக் கூத்தர் என்ற ஒரு இனமே நடாத்திவந்திருப்பதாகப் பண்டைய நூல்கள்மூலம் தெரியவருகிறது.'

இவ்வாறு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற வண்ணை ஸ்ரீ சரவணபவா நாடக மன்ற 5வது ஆண்டு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசிய மேல் மாகாணத் தலைமையாசிரியர் சங்கத் தலைவர் புலவர் வித்துவான் இ. சி. சோதிநாதன் தமது தலைமையுரையில் கூறினுர்.


தேவார பாராயணத்துடன் ஆரம்பித்த விழாவில் அமரர் சரவணமுத்துவின் படத்தினைத் திரைநீக்கம் செய்து வைத்து உரை நிகழ்த்திய வித்துவான் சோதிநாதன், அமரர் சரவணமுத்து நாடக உலகிற்கும் கலை உலகிற்கும் செய்த அரும்பணியினை எடுத்துரைத்தார்.

நாடக மன்ற இயக்குநர் திரு. ஏ. எஸ். மணியின் சேவை நலனைப் பாராட்டிப் பொன்னுடை போர்த்தப்பட்டது.

வரவேற்புரையினைத் திரு. ஆ. கனகசபாபதி நிகழ்த்தினுர். சரவணபவா நாடக மன்றத் தலைவர் திரு. ஏ. எஸ். மணி நன்றி நவின்ருர்.

ஆண்டு விழாவில் 'அடங்காப்பிடாரி' என்ற நகைச்சுவை நாடகமும், 'செம்மனச் செல்வி' என்ற புராண நாடகமும் நடைபெற்றன. இசைக் கச்சேரியும், செல்வி ஜெயந்தினி, குமாரி யோகவதனி யோகலிங்கம், ஆடற்கலைஞர் வேல் ஆனந்தன் ஆகியோரின் பரதநாட்டிய நடனங்களும் விழாவைச் சிறப்பித்தன.

மூன்று தினங்களாக நடைபெற்ற இவ் வைபவத்தில் கடைசி இரு தினங்களும் நாடக விழாவாக நடைபெற்றது. இதில் 'ஏன் சிரித்தாய்', 'வாழப் பிறந்தவள்' என்ற சமூக நாடகங்கள் விழாவினைச் சிறப்பித்தன. இவ்விழாவிற்கு குடியேற்ற வெளியேற்றக்கட்டுப்பாட்டு இலாகா உதவி அதிபர் திரு. எஸ். கணேசராசா தலைமை வகித்தார்.



சத்தியா மூவீஸ் தயாரிக்கும் 'தெய்வத் தாய்' படப்பிடிப்பின் போது டைரக்டர் மாதவன் சரோஜாதேவிக்கு அன்றைய காட்சி விளக்கத்தைக் கொடுக்கிருர். நெப்டியூன் ஸ்டுடியோவில் படம் வேகமாகத் தயாராகிறது. புரட்சி நடிகர் தான் இப்படத்தின் நாயகன்.

## வாக்களிப்பு விபரங்கள்:

நாடகப் போட்டிக்காக எமக்கு வந்து குவிந்துள்ள விடைகளைக் கணக்கிட்டு முடிப்பதற்கு பல சிரமங்கள் ஏற்பட்டன. கடந்த 25-2-64 வரை கிடைக்கப் பெற்ற விடைகளைக் கொண்டு கொழும்பில் நடைபெற்ற நாடகங்களின் கணக்கைப் பரிசிலித்து இம் முறை தருகிருேம். அடுத்த வாரம் வெளியூர் நாடகங்களின் விபரங்களைத் தருகிருேம்.

சிறந்த தயாரிப்பாளர், சிறந்த வெளியீட்டாளர் ஆகிய இரு இடங்களிலும் பல இரசிகர்கள் தப்பாக விடையளித்துள்ளனர். தயாரிப்பாளர் வரிசையிலும் வெளியீட்டாளர் வரிசையிலும் மொத்தம் 82 வாக்குகளை திரு. கே. பாலச்சந்திரன் பெற்றுள்ளார். ஆனுல் கடந்த வருடத்தில் திரு. பாலச்சந்திரன் எவ்வித நாடகங்களையும் வெளியிடவில்லை என்று தெரிகிறது. ஆகவே இரசிகர்கள் 1963-ம் ஆண்டு மேடையேற்றப்பட்ட புதிய நாடகங்களை மட்டுமே அவதானித்துக் கணக்கிடுமாறு கோருகிருேம்.

சிறந்த நாடகம்:—

| | |
|---|---|
| மண்ணும் மங்கையும் | 112. |
| விந்தியத்தின் விளிம்பிலே | 98. |
| அது அப்ப இது இப்ப | 87. |
| சிங்கமுழக்கம் | 84. |
| வாடகை வீடு | 78. |
| ஸ்புட்னிக் சுருட்டு | 57. |
| எரிமலை | 44. |
| யாருக்காக அழுதான் | 38. |
| ஒன்றே குலம் | 27. |
| மஞ்சள் குங்குமம் | 24. |

சிறந்த நடிகர்:—

| | |
|---|---|
| இராஜேஸ்வரன் | 74. |
| கே. எம். வாசகர் | 52. |
| வரணியூரான் | 52. |
| ஏ. கிதார் | 51. |
| தேவன் அழகக்கோன் | 49 |
| லடீஸ் வீரமணி. | 38. |
| உதய குமார் | 28. |
| எஸ். விமலநாதன் | 24. |

சிறந்த நடிகை:—

| | |
|---|---|
| சந்திரகலா | 122. |
| கிருஷ்ணகுமாரி | 78. |
| நிர்மலா ஜோர்ஜ் | 68. |
| இராஜேஸ்வரி சண்முகம் | 34. |
| யோகா சொக்கநாதன் | 26. |

சிறந்த நகைச்சுவையாளர்:—

| | |
|---|---|
| எஸ். ஆறுமுகம் | 126. |
| ராஜரத்தினம் | 103. |
| ரொசைரோ பீரிஸ் | 82. |

சிறந்த கதாசிரியர்:—

| | |
|---|---|
| சி. சண்முகம் | 88. |
| கே. எம். வாசகர் | 73. |
| வெற்றி வேந்தன் | 71. |
| ராஜரத்தினம் | 52. |

சிறந்த இயக்குநர்:—

| | |
|---|---|
| ஆர்: ஜெகசோதி | 68. |
| எஸ். சண்முகநாதன் | 44. |
| லடீஸ் வீரமணி | 36. |
| எம். வி பாலன் | 28. |
| எம். எப். டேவிட் | 21. |

சிறந்த தயாரிப்பாளர்:—

| | |
|---|---|
| எஸ். சண்முகநாதன் | 103. |
| வேலணை வீரசிங்கம் | 82. |
| சில்லி செல்லையா | 31. |
| விமலா சொக்கநாதன் | 29. |
| லடீஸ் வீரமணி | 26. |

வெளியூர் நாடகங்களுக்கான விபரங்கள் அடுத்தவாரம் இடம் பெறுகின்றன.

### முடிவுத் திகதி 1—4—64

நடந்த நாடகம்:

## காதலா கடமையா?

பாசையூர் உதயசூரியன் நாடக மன்றத்தினரின் மூன்ருவது தயாரிப்பான "காதலா கடமையா" என்ற நாடகம் நடைபெற்றது. நல்ல நகைச்சுவைக் கருத்துக்களுடன் நல்ல கருத்துக்களும் பொதிந்த நாடகமாகத் திகழ்ந்தது.

இந்நாடகத்தில் எஸ். ராஜலட்சுமி, தேவதாசன், பாக்கியன் ஆகியோர் நடித்தனர். எஸ். இஙிஸ்ரி நாடகத்தை எழுதி டைரக்ஷன் பொறுப்பையும் ஏற்றிருந்தார்.

## அறிமுகப்படுத்துகிறோம்

இடமின்மையால் கடந்த இரு வாரங்களிலும் அறிமுகப்படுத்துகிருேம் பகுதி வெளியாகவில்லை. அடுத்த வாரம் முதல் தொடர்ந்து வெளிவரும்.

ஆ-ர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்ச்சிக் கவி எழுதி....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வெல்லும் ஒரு படை
வீணர் படையெனில்
வீழும் கலியுகமே!
ஆயிரம் பூச்சி புழுக்கள்
அரித்திடும்
அற்ப உடலெதற்கு?
—தமிழ்த்
தாயிவள் கூனித்
தலைகவிழ்ந்தாள்! இனித்
தாவுக போர்க்களமே!'

கவிஞரின் கட்டளைக்குக் காது கொடுத்த சமுதாயம் 'நாங்கள் போர்க்களம் செல்லத் தயார். ஆனால் ஊழ்வினை எங்களுக்கு மாருக இருக்கிறதே!' என்று முறையீடு செய்கிறது. உணர்ச்சிக் கவிஞர் 'ஊழ்வினையா? அது தமிழினத்தை வென்று விடுமா?' என்று எள்ளி நகையாடுகிருர்.

'உலகம் அனைத்தையும்
வென்ற குலத்தினை
ஊழ்வினை வெல்லுமோ?
— எங்கள்
மலைகள் எனும் இரு
தோள்களையும் விதி
மங்கை மறந்தனளோ?
—அவள்
கலகம் நடத்தித் தமிழர்
குலத்தைக்
கவிழ்க்க முடியுமோடா?
—அன்னை
முலையில் பருகிய
மூச்சுடனே பறை
முழக்கிப் புறப்படடா!'

அவருடைய பாடலைக் கேட்ட தமிழ்ச் சமுதாயம் புதிய தென்போடு போர்க்களம் செல்லப் புறப்படுகிறது.

'முடங்கி வளைத்த முதுகே
நிமிர்வாய்!
நடுங்கிக் கிடந்த நாட்கள்
ஒய்ந்தன!
காய்ந்த தமிழன் கண்ணை
விழித்தான்
தேய்ந்த வீரம் திரும்ப
வந்தது!
மான உணர்ச்சி மலர்ந்து
விட்டதால்
கூனி நடந்த கோழை
மடிந்தான்!
விதியின் கைக்கு விலங்கு
போடப்
புதிய சந்ததி புறப்பட்டு
வந்தது!'

என்று போர்ப்படைதண்டு புறப்பாடல் பாடுகிருர் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்.

'கடமுட என ஒரு கவியிடி
கொடியவர் பொடிபட
வெடியாதோ?
திடு திடுமென ஒரு படையணி
அடிமைகள் படுதுயர்
துடையாதோ?
மட மட எனஒரு நொடியினில்
இடுகர விலங்குகள்
ஒடியாதோ?
கொடியொடு படையொடு
முடியொடு
தமிழின விடுதலை
கிடையாதோ?'

என்று ஏங்கிக் கிடந்த கவிஞருக்கு அணியணியாக விடுதலைக் களம் நோக்கி வீர நடை போடும் மறவர் படை புதிய தெம்பை யூட்டுகிறது.

'ஏடா! தமிழ் வீரா...!
உனை
எலிபோல் நினைத்தாரா?
வாடா படையூடே... அற
வலிவின் துணையோடே!
நாடா பிணக்காடா என
நால்வர் மடிந்தாலும்
போடா அவர் வழியே!
நகைபுரிவாள் தமிழ்
மொழியே!

மேலும் மேலும் தமிழர் படைக்கு உணர்ச்சியும், உற்சாகமும் தருகிருர் கவிஞர்.

'என்னடா தமிழ்
இளைஞனே! உனை
ஈழ நாட்டிலோர் ஈன
மாவிடன்
'சின்னவன்' எனச் செப்பி
வாழ்வதும்
சிங்களச் சிறை செய்து
வைப்பதும்
என்னடா...அட! இன்னும்
உன்னிடம்
ஏடு தீட்டுமோர்
எண்ணமில்லையோ?
அன்னை என்பவள் அன்று
தந்த பால்
ஆடு தந்ததோ? மாடு
தந்ததோ?'

என்று படை வரிசையில் சேராமல் ஒதுங்கி இருப்பவர்களையும் கூடக் கிண்டல் செய்து களம் நோக்கி விரட்டி அடிக்கிருர் கவிஞர்.

களத்தில் தமிழினம் கால் வைத்துவிட்ட தென்பதை நினைக்க நினைக்க கவிஞரின் நெஞ்சம் வீர உணர்ச்சியால் விம்மிப் புடைக்கிறது.

'தடையொன்று
வந்தாலென்ன?
தலை கொய்து
போனுலென்ன?
வெடி குண்டு
பட்டாலென்ன?
படை வந்து
சூழ்ந்தாலென்ன?
பாடையில்
வைத்தாலென்ன?
கொடிகொண்டு சபதம்
ஏற்போம்!
குருதியால் மானம்
காப்போம்!

என்று தமிழ் மறவர்கள் முழக்கமிடுவதாக உணர்ச்சிக் கவிஞர் பாடுகிருர்.

களத்தில் இருந்து கொண்டே முடிவைக் கணிக்க முடிகிறது கவிஞரால். பாரதியார் 'பள்ளுப் பாட்டு' பாடியது போல் இவரும் விடுதலை பெற்ற தமிழினத்தைப் பாடுகிருர்.

'நீலச்சிறகடித்துப் பாடு
குயிலே—தமிழர்
நெஞ்சம் விரிந்த
தென்று பாடு குயிலே!
கோலக் குரலெடுத்துப்
பாடு குயிலே—எங்கள்
கொடுமை தொலைந்த
தென்று பாடு குயிலே!'
எட்டுத் திசைகளிலும்
வெற்றிபடைத்தோம்!
—விண்ணில்
எல்லை அளந்துவரக்
கப்பல் விடுத்தோம்!
கொட்டும் முரசொலியில்
ஆடிமகிழ்ந்தோம்!
—எங்கள்
கொள்கை மலர்ந்த
தென்று பாடு குயிலே!

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் கவிதைகள் தாழ்வுற்ற தமிழினத்தைத் தட்டி எழுப்பும் அரிய படைப்புகளாகும். தமிழகத்தில் இந்திய ஏகாதிபத்தியத்தையும், இலங்கையில் சிங்கள சர்வாதிகாரத்தையும் எதிர்த்து அவர் முழங்கும் பாடல்கள் தமிழ் பேசும் சமுதாயத்தின் பொற்காலத்தை உருவாக்கும் அற்புத கீதங்களாகும்.

கவிஞர் காசி ஆனந்தனைப் பற்றி தமிழர் தலைவர் ஆதித்தனுர் பின் வருமாறு கூறுகிருர்:—

"வெள்ளைக்காரனிடமிருந்து இந்தியா சுதந்திரமடைய கவிஞர் பாரதியார் பாட்டுப்பாடினுர். உணர்ச்சிமிக்க பாடல்களைப் பாடி மக்களைத் தட்டி எழுப்பினுர். அதேபோல டெல்லியின் பிடியிலிருந்து தமிழ் நாடு விடுதலை அடைய நமக்கு உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் கிடைத்திருக்கிருர். அவரை தமிழர் விடுதலை இயக்கத்தின் பாரதி என்றே சொல்லலாம்."

# ஆபிரிக்க மக்களின்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

திற்காகப் பலிகொடுத்துத் தம் எதிர்கால சந்ததிகளின் சரித்திரத்தையே பிற இனங்கள் மதிக்கும் வகையில் தலைகீழாக மாற்றி விட்டிருக்கின்ருர்கள். ஆனுல் இந் நாடுகள் சிலவற்றில் வாழும் மக்களின் எண்ணிக்கை—அவர்களின் கடந்த கால வரலாறு—அவர்கள் துணிந்து நடத்திய போராட்டங்கள்—நாகரிகம் போன்றவைகளை எல்லாம் எண்ணிப் பார்க்கும் நாம், மறுபுறத்தில் ஈழத் தமிழ் பேசும் மக்களை எண்ணி வேதனைப்படுகின்ருேம்.

5 லட்சம் காபன் மக்கள், 9 லட்சம் காங்கோ குடியாட்சி மக்கள், 8 லட்சம் மோரிட்டானியா மக்கள், 12 லட்சம் டோகோ மக்கள், 12 லட்சம் லிபியா மக்கள், 13 லட்சம் லைபீரிய மக்கள் போன்ற பல சின்னஞ்சிறு இனங்களும்—நாடுகளும் உரிமைப் போராட்டங்கள் பல நடத்தி வெற்றி கண்டிருக்கும்போது, 29 லட்சம் தமிழ் பேசும் மக்கள் தம் விடுதலைக்கு விதிவிலக்கானவர்களா? இனப் பாதுகாப்பென்னும் சமஷ்டி ஆட்சிக்குத் தகுதியற்றவர்களா?

### வீரம் விலைப் பொருளல்ல

ஆண்ட இனம் தமிழினம்—தனக்கென வீர வரலாறுகள் பல கண்ட இனம்—வங்கக் கடலைக் கலக்கிப் பர்மாவிலே பவனி வந்த இனம்—தடுக்கத் துணிவு கொண்ட எவருமின்றி வட நாடுபடை நடத்தி இமயத்தில் வெற்றிக் கொடி பொறித்த இனம்—பன்னிரெண்டாயிரம் சிங்களக் கைதிகளைக் கொண்டே காவேரி ஆற்றுக்கு கல்லணையில் கரை கட்டுவித்த இனம், [illegible] சிறு சிங்களக் கூட்டத்தின் பாதம் தொழுது நிற்பதென்ருல் ஐயகோ அவமானம்—அவமானம். வேலுக்கும்

# ஆளவந்தார்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்சமாக) மொழிப்பிரச்சினை என்று வீம்பு பேசியவர்கள் அப்படியொருபிரச்சினை இருப்பதாகக் கூறி அதைத் தீர்க்கப்போவதாக முன்வந்திருக்கிருர்கள். அடுத்தடுத்து அடக்குமுறையை அவிழ்த்து விட்டுத் தாங்கொணுத் துன்பமும் அவமானமும் இழைத்துக்கூட தமிழன் தலைவணங்க மறுத்துவிட்டதைக் கண்டு 'ஞானம்' பிறந்திருக்கிறது அரசுக்கு. தமிழனின் முதல் எதிரியாக இன்றுவரை இருந்த ஒரு பொறுப்புள்ள மந்திரி சுருதியை மாற்றித் தமிழன் பால் அநுதாப கீதமிசைக்கிருர்.

ஏமாற்றி ஏமாற்றித் தமிழன் மனதிலே எரிச்சலையும் எதிர்ப்பையும்கிளப்பிவிட்ட அரசாங்கம் இனியாவது தனது தவற்றைத் திருத்திக் கொள்ளவேண்டும். நல்லதொரு முடிவுக்குச் சீக்கிரம் வரவேண்டும். அதையும்உடனடியாகச் சட்டபூர்வமாக உறுதிப்படுத்திவிட வேண்டும். செயலில் உறுதியாக்க வேண்டும்.

விழி வணங்காத வீரர் வழி வந்த தமிழ்ப் பெருமினமே! வீறிட்டுப் பாயும் உன் தமிழ்க் குருதிக்கும்—விம்மிப் புடைத்த உன் தோளுக்கும்—அகண்ட உனது மார்புக்கும் பணி என்ன அடங்கிக் கிடப்பதா? கொழுந்துவிட்டு அக்கினி ஜுவாலையுடன் சீறி எழும் தீயை அணைக்க பஞ்சு முட்டைகள் பயன்படாது என்பதைச் சிங்கள அரசு [illegible] விட்டது.

(முற்றும்)

# சமஷ்டி....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கிறது என்று 'லங்காதீப' அரசியல் நிருபர் 22-2-64ந் திகதி பத்திரிகையில் எழுதியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுவதாவது:-

'அண்மையில் பொதுத் தேர்தல் நடந்தாலு சரி, நடக்காவிட்டாலும் சரி, பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் இறுதியாக முடிவு செய்திருப்பது வரவேற்கத் தக்கதாகும். குறிப்பிட்ட கோஷ்டியினருடன் இரகசியப் பேச்சுகள் நடத்துவதற்குப்பதிலாக எல்லா அரசியற் கட்சிகளின் தலைவர்களையும்அழைத்து, நேர்மையான முறையில் கருத்துகளைப் பரிமாறிக்கொண்டு, சிங்கள——தமிழ் மக்களிடையே மீண்டும் கருத்து வேற்றுமை ஏற்படாவண்ணம் இறுதியாக இப்பிரச்சினையைத் தீர்த்து வைத்துவிடவேண்டும்.

சிங்கள இனத்தைக் காட்டிக்கொடுத்துவிட்டார்கள் என்று எதிர்கால சந்ததியினர் குறைகூற முடியாத முறையில் பிரச்சினையைத் தீர்க்கும்படி பிரதமருக்கும் மந்திரிகளுக்கும் நாட்டின் பெயரால் சுட்டிக்காட்டுகின்ருேம்.'

(இடதுசாரி ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த சிங்களப் பத்திரிகைகளும், யூ. என். பியின் சிங்களப் பத்திரிகையும் இவ்வாரம் மொழிப் பிரச்சினையையிட்டு மௌனம் சாதித்தன.)

# மொழிப்....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களது ஜீவாதார உரிமைகள் பறிக்கப்படும் பொழுது, அவைகளைப் பெறுவதற்கு வேறு வழி வகைகள் இல்லாத கட்டத்தில்தான் அவர்கள் ஆட்சியாளர்களை எதிர்த்து அறப்போர் தொடுப்பதற்கு முன்வருகின்ருர்கள்.

இந்த நடவடிக்கையில் ஒன்ருகத்தான் நேரடி நடவடிக்கைக்குத் தேதியும் குறிப்பிடப்பட்டது. ஆனுல் ஆட்சியாளர்கள் இப் பிரச்சினைகளின் மீது பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்குக் கருத்து வெளியிட்டதும் இந்த நேரடி நடவடிக்கையைஒத்திவைத்ததானது தமிழ் பேசும் மக்கள் சமரச முயற்சியில் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிருர்கள் என்பதையே நன்கு படம் பிடித்துக்காட்டுகின்றது.

இக் கட்டத்தில் முன்பும் ஆட்சியாளர்கள் இப்படிப்பட்ட கனவான் ஒப்பந்தங்களை ஏற்படுத்தி பின்பு அவைகளைக் காற்றில் பறக்கவிட்ட நிகழ்ச்சிகளைத் தமிழ் பேசும் மக்கள் இதற்குள் மறந்துவிடவில்லை என்பதையும் சுட்டிக் காட்ட வேண்டியிருக்கின்றது. இத்தடவையிலாவது ஆட்சியாளர்கள் இதய சுத்தியுடன் இப் பிரச்சினைகளுக்கு முடிவு காண முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.


## 'சுதந்திரன்'
### புதிய சந்தா விபரம்

தபால் கட்டணம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பின்வருமாறு சந்தா உயர்த்தப் பட்டிருக்கிறது.

ஒரு வருடம் ரூபா 14-00
ஆறு மாதம் ரூபா 7-50

நிர்வாகி
'சுதந்திரன்'

## வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

## வேல் தைலம்
## மிகச் சிறந்த சஞ்சீவி

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்ருகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சிவி.

**விலை ரூபா 1-50**

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:
**S. P. S. ஜெயம் கம்பெனி,**
மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:
**M. A. R. S. மனுவேல் நாடார் அன் கோ.,**
34, செட்டியார் தெரு,
கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிறுவர் தொடர்கதை:

## மந்திரக் கண்ணாடி

'சுதந்திரன்'

### (5)

யானைகள் சென்ற பின்னர், இருவரும் புதர்களிலிருந்து வெளிவந்தனர். ராமுவின் கைகளிலும், பாலுவின் கைகளிலும் ஏராளமான முட்கள் குத்தியதால் இருவரின் கைகளிலிருந்தும் குருதி வெளியே பாய்ந்துகொண்டிருந்தது.

இருவரும் நீரோடையில் குளிர்ந்த ஜலத்தைக்குடித்த பின், கைக் குட்டைகளையும் நீரில் நனைத்துக் கைகளில் சுற்றிக்கொண்டார்கள்.

மந்திரக் கண்ணாடிக்காக அலைந்த அலைச்சல் போதும்: வீட்டுக்குப் போகலாம், என்று நினைத்தான் ராமு.

"இவ்வளவு தூரம் வந்ததற்கப்புறம், வீட்டுக்குப் போவதா? எப்படியும் நாளை மாலைக்குள் மந்திரக் கண்ணாடியை எடுத்துவிடவேண்டும்" என்று பாலு சொல்லிக்கொண்டே, துப்பாக்கிக்குள் சில ரவைகளைப்போட்டான்.

"நீவேண்டுமானால்சென்று மந்திரக் கண்ணாடியை எடுத்துக்கொண்டு வா; நான் இங்கேயே ஒரு இடத்தில் இருக்கின்றேன்" என்று ராமு கூறிவிட்டு, கையைச் சுற்றி இருந்த கைக்குட்டையைத் தொட்டுப்பார்த்தான்.

"வேண்டாம் ராமு! எல்லையற்ற இக் காட்டில் உன்னை இங்கே விட்டுவிட்டுச் செல்வதை நான் விரும்பவில்லை. நீ இங்கே இருந்தால் சில சமயங்களில் காட்டு மிருகங்கள் உன்னைத் துன்புறுத்தக்கூடும். ஆகவே, நீஎன்னுடன் வருதலே நன்று!" என்று பாலு ராமுவைத் தேற்றி அவனையும் அழைத்துக்கொண்டு மரங்களடர்ந்த பகுதியால் வந்துகொண்டிருந்தான்.

### (6)

வானுற வோங்கி வளர்ந்த மரங்களின் மத்தியில் ராமுவும், பாலுவும் நடந்துகொண்டிருக்கையில், பல நரிகள் ஊளையிட்டன. அச் சத்தத்தினால் ராமுவும் பாலுவும் அச்சமடைந்தார்கள்.

"மந்திரக் கண்ணாடியும் வேண்டாம்! ஒன்றும் வேண்டாம். நாம் வந்த வழியாலே திரும்பி சுகமாகவீடுபோய்ச் சேர்ந்தால் காணும்!" என்று ராமு சற்றுக் கண்டிப்பான குரலில் சொன்னான்.

"மந்திரவாதியின் குடிசை வெகு அண்மையில் தான் இருக்கும்போலத் தெரிகின்றது. அக் கண்ணாடியை எடுத்துவிட்டோமானால் வெகு சுலபமாக வீட்டை அடைந்துவிடலாம். நாம் எடுத்த காரியங்களும் கைகூடும். அதனால் எப்படியாவதுஇந்தமந்திரக்கண்ணாடியை எடுத்தே தீரவேண்டும்!" என பாலு ராமுவுக்குத் தேறுதல் வார்த்தைகளைக் கூறினான்.

பாலு, துப்பாக்கியைச் சுடுவதற்கு கையிலே ஆயத்தமாகவைத்துக்கொண்டான்.

"எந்நேரமும்எதிர்பாராத விதத்தில் காட்டு விலங்குகள் நம்மைத் திடீரென்று தாக்கக்கூடும்; மிகவும் எச்சரிக்கையாகவே இருக்கவேண்டும்" என்றுராமுவுக்கு பாலு கூறிக்கொண்டுசென்ற போது—

மரங்களுக்கு மத்தியில் கறுப்பாக ஏதோ ஒரு பெரிய உருவம் இருவருக்கும்தெரிந்தது.

இருவரும் அவ்வுருவத்தை உற்று நோக்கினார்கள். அவ்வுருவம் யானையாக இருக்கக்கூடுமென இருவர் மனமும் எண்ணியது.

ராமுவை ஒரு மரத்தில் ஏறி நிற்கச்சொல்லிவிட்டு, துப்பாக்கியைச் சுடத் தயாராக வைத்துக்கொண்டு, கறுப்பு உருவம் இருந்த பக்கத்தை நோக்கி பாலு, அடிமேல் அடிவைத்துச் சென்றான்...

(தொடரும்)

---

எனது கிராமம்:

## கச்சார்வெளி

—: ஏ. வி. கணேசன் :—

தென்னை, பனை, நெற்காணிகள் நிறைந்து பொலிவுற்று விளங்கும் எனது கிராமத்தின் பெயர் கச்சார்வெளி. இங்கே அனேகமானவர்கள் விவசாயிகளே.

சரித்திர காலத்திற்கு அப்பாற்பட்ட ஓர் விநாயகர் ஆலயமுமிருக்கின்றது. பண்டு தொட்டுப் பண்பிலேயுறைந்தவர்களாகிய நம் ஊரவர்கள் கல்வி கேள்விகளில் வல்லுனராகவிருக்கின்றனர். இப்படியான ஓர் கிராமத்தைப் பண்படுத்த அவசியமாக ஓர் பாடசாலை தேவை. இப்பொழுது எமது தேவையை, இரண்டு மைல் தொலைவிலுள்ள பளை மகாவித்தியாலயமே நிறைவு செய்கின்றது.

"கச்சார்வெளி" யென்பது கருணையேயுருவான விநாயகப் பெருமானின் நாமதேயத்தைப் பின்னிப் பிணைந்துள்ள பெயர். ஏன்? இப்பகுதியில் காலத்தால் கடந்த விநாயகர் ஆலயமே இதற்குச் சான்று.

சில்லென வீசிய தென்றலைப் பல கோணங்களிலிருந்தும் கிரகிக்கக் கூடிய பெறுபேறு, இங்கு விஜயம் செய்தவர்களுக்கே தெரியும். நீங்களும் ஒருமுறை எனது கிராமத்துக்கு விஜயம் செய்யுங்களேன்!

### (2)

## மானிப்பாய்

—இரா. குமாரகுலசிங்கம்—

சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம் போன்ற உலகப் பெரியார்கள் பிறந்த இடம் மானிப்பாயே.

இது நீர்வளம், நிலவளம், மிக்கது. இங்குள்ள மக்களில் அதிகமானோர் உழவுத் தொழிலேயே ஈடுபட்டு இருக்கின்றனர். இங்கு இரண்டு கல்லூரிகளும், வைத்தியசாலையும், இரு பெரிய இந்துக் கோவில்களும், ஓர் கிறிஸ்தவக் கோயிலும் உண்டு.

மானிப்பாய் உடுவில் தொகுதியைச் சேர்ந்தது. தமிழ் மக்களுக்காகப் பாடுபடத் தமிழரசு சார்பில் திரு. தருமலிங்கம் இப்பகுதியில் பிரதிநிதியாக விளங்குகின்றார்.

இங்கு இந்து சமயவிருத்திச் சங்கம் இந்து சமயத்தை விருத்தி செய்து வருகிறது.

---

## இயற்கை விசித்திரம்

### (1) தோன்றி மறையும் குளம்!

அவுஸ்திரேலியாவின் தலைநகர் கான்பெரா. கான்பெராவுக்குச் சில மைல் தூரத்தில், 'லேக் ஜோர்ஜ்' என்ற குளம் உண்டு. அது ஓர் பெரிய குளம். ஆனால் சில சமயங்களில் அது அங்கு இருக்காது.

1817ம் ஆண்டிலிருந்து இன்றுவரை, நான்கு தடவை அந்தக் குளம், இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயிருக்கிறது.

லேக் ஜோர்ஜின் நீளம் ஏழு மைலாகும். ஆனால், இப்பொழுது அது மேலும் மேலும் நீண்டு செல்வது, விஞ்ஞானிகளுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

கான்பெராவுக்குள்ளேயே அது வந்து விடுமோ என்று பயப்படும் கான்பெரா மக்கள் லேக் ஜோர்ஜின் அடுத்த நடவடிக்கை என்னவாயிருக்குமோ என்று திகிலடைந்துள்ளார்கள்.

கடைசியாக இக் குளம் மறைந்தது 1932ம் ஆண்டில். இருந்தாற்போல் இருந்து விட்டு ஒரு நாள், குளம் இருந்த இடமே தெரியாமல், அந்த இடத்தில், துளி நீர் தானும் இல்லாத பச்சைப் பசேலென்ற செழித்த நிலம் தோன்றியது.

இது நடந்து இரண்டொரு வருடங்களுக்குப் பின், குளம் மறைந்து விட்டது. இனி இப்படிப் பச்சைப் புல் தான் இவ்விடத்தில் இருக்குமென்ற திடத்தில் அந் நிலப்பரப்பின் கண் ஆயிரக் கணக்கான ஆட்டு மந்தைகள் தம் மிஷ்டத்துக்கு மேய்ந்தன.

இந்த நிலைமை 17 வருடங்களுக்கு—அதாவது 1949 வரை—தொடர்ந்து இருந்தது. 1949ல், லேக் ஜோர்ஜ் திரும்பவும் வந்து விட்டது.

இப்படி இந்தக் குளம் தோன்றி மறைவதன் மர்மத்தை விஞ்ஞானிகளால் விளக்க முடியாதிருக்கிறது. அவர்களுடைய பயமெல்லாம்,கான் பெரா நகரத்தையே லேக் ஜோர்ஜ் ஒருநாள் விழுங்கி விடுமோ என்பதுதான்!

### (2) பெரிய பாம்பைக் கொன்ற சுண்டெலி!

ஒரு சிறிய வெள்ளைச் சுண்டெலி, நீண்ட, பெரிய நச்சுப் பாம்பொன்றினைக் கடித்துக் கொன்ற சம்பவம் அண்மையில் அவுஸ்திரேலியாவிலுள்ள குவீன்ஸ்லாண்ட் நகரில் நடைபெற்றது.

அங்குள்ள மிருகக் கண்காட்சிச் சாலையொன்றில் தனது இருப்பிடத்தில் ஆறுதலாகத் தூங்கிக் கொண்டிருந்த இந்த நீண்ட, நச்சுப் பாம்பின் மீது மெதுவாக ஏறி, அதன் கழுத்தைக் கடித்துச் சுவைத்தது சுண்டெலி. சிறிது நேரத்துக்குப் பின், பாம்பு இறந்து விட்டது.

அண்மையில் தான், ஒரு சுண்டெலியினால் ஆறு இடங்களில் தாக்கப்பட்ட அப்பாம்பு, சிகிச்சை பெற்றுக் குணமாகி இருந்தது. அது குணமாக நீண்ட காலம் பிடித்தது. ஆனால், குணமாகிச் சில தினங்களில், மீண்டும் ஒரு சுண்டெலி தன் கைவரிசையைக் காட்டி விட்டது.

மிருகக் கண் காட்சிச் சாலை நிர்வாகிகளால் இச் சுண்டெலித் தாக்குதலை விளக்க முடியவில்லை.

இறந்த பாம்பினதும், கடித்த சுண்டெலியினதும் தோற்ற வித்தியாசம், ஒரு மனிதனுக்கும் கட்டெறும்புக்குமுள்ள வித்தியாசமாகுமாம்.

வழக்கத்தில், இந்தச் சுண்டெலிகள் தாம், அப்பாம்புக்குக் காலைச் சாப்பாடாகுமாம். ஒரே நேரத்தில் அது 12 சுண்டெலிகளை விழுங்கினாலும், அதன் வயிற்றில் ஒரு சிறிய வெற்றிடம் தானும் நிரம்பாதாம்.

ஆகவே தான், சுண்டெலியினால் பாம்பை எப்படிக் கொல்ல முடிந்தது என்ற மர்மம், வனவிலங்கியல் நிபுணர்களுக்கு ஒரு புதிராகவே விளங்குகிறது.

---

நகைச் சுவைக் கட்டுரை:

## ரயில் பிரயாணம்

தி. மதுரம்,
அளவெட்டி.

கிராம சூழ்நிலையில் வாழ்ந்த பட்டிக்காட்டானான முருகனுக்குத் தனது வாழ்வில் ஒரு முறையாவது ரயில் பிரயாணம் செய்ய வேண்டுமென்று ஒரே ஆவல்.

ஒரு நாள், அவன் காத்திருந்த சந்தர்ப்பம் வந்தது. ஒரு பையுடன் 3ம் வகுப்புப் பெட்டியில் ஏறி உட்கார்ந்தான்.

சுற்று முற்றும் பார்த்துக்கொண்டு 'குஷன்' சீட்டில் உட்கார்ந்தான். நல்லாய்த் தானிருந்தது.

சிறிது நேரத்தில், வெற்றிலை பாக்குப் பையை அவிழ்த்து, வாயில் போட்டுக் குதப்பினான். இவன் முன்னால் காற்சட்டை சேட்டுடன் இருந்த ஒருவர், இவனை வெறுப்புடன் பார்த்தார்.

முருகன் இதைக் கவனிக்கவில்லை. சாறித் துப்பினான். மேலே மின்விசிறி சுழன்று கொண்டிருந்ததை அவன் அறியவில்லை. துப்பல் காற்றில் சிதறி, கனவானின் உடுப்பில் பட்டது.

கனவான் அவனை முறைத்துப் பார்த்தார்.

முருகன் இறங்க வேண்டிய இடம் வந்தது. விறுவிறுவென்று இறங்கினான்.

ஆத்திரத்திலிருந்த கனவான், அவன் இறங்கும் தருணம் பார்த்து, முதுகில் ஓர் குத்து விட்டார்.

'ஆ'வென்று கீழே இருந்து விட்டான் முருகன். ரயில் சென்று விட்டது.

பின் வீடு வந்ததும், 'ரயில் பிரயாணம் எப்படி?' என்று நண்பர்கள் அவனைக் கேட்டனர்.

அதற்கு அவன், 'ரயில் பிரயாணம் நல்ல சந்தோஷம் தான். ஆனால், இறங்கும் போது கொடுக்கினம் ஒரு குத்து, அதைத் தான் தாங்க ஏலாது' என்றான்!

---

## பள்ளி செல்லும் பாப்பா!

—நிலவண்ணன்—

பள்ளி செல்லும் பாப்பா—ஒரு,
பாட்டுப் பாடு பாப்பா!
துள்ளி யாடி நாளும்,
தமிழ் சொல்லியாடு பாப்பா!

சொந்த மொழி பாப்பா—இதன்
சிறப்பைப் பேணு பாப்பா!
எந்த மொழியும் நம்மை
ஏய்க்கலாமோ பாப்பா?

தாயும் மொழியும் ஒன்று—
இதில்,
[illegible] பாப்பா
சேயும் உன்னை [illegible]
தாயைச்,
சேர்ந்து நில்லு பாப்பா!

---

## நாடுகின்ற அரசு தமிழ்! தமிழே!!

—"நவாலியூர்க் கவிராயர்"—

செந்தமிழ் நற்தமிழ் சீர்தமிழே!
செழித்திடு மின்தமிழ் கனித்தமிழே!
பைந்தமிழ் கவித்தமிழ் இளத்தமிழே!
பகிர்ந்திடு வண்டமிழ் விழித்தமிழே!

மலர்தமிழ் மிளிர்தமிழ் தேன்தமிழே!
முயன்றிடு முழுத்தமிழ் பொருட்தமிழே!
புலர்தமிழ் புவித்தமிழ் பெருந்தமிழே!
பொறித்திடு பழந்தமிழ் பொற்தமிழே!

சேரதமிழ் சோழதமிழ் பாண்டித்தமிழே!
சேர்ந்திடு ஓர்தமிழ் நேர்த்தமிழே!
வீரதமிழ் வீறுதமிழ் வெற்றித்தமிழே!
விரைந்திடு போர்த்தமிழ் அரசுத்தமிழே!

தாய்த்தமிழ் தனித்தமிழ் மேல்த்தமிழே!
தோன்றிடு முத்தமிழ் புகழ்த்தமிழே!
மெய்த்தமிழ் கூர்த்தமிழ் முதுதமிழே!
மிளிர்ந்திடு நெடுந்தமிழ் நிகழ்த்தமிழே!

குலத்தமிழ் படர்தமிழ் கொடித்தமிழே!
கொடுக்கின்ற இன்பம் சுவைத்தமிழே!
நலத்தமிழ் மறைத்தமிழ் குறட்தமிழே!
நாடுகின்ற அரசு தமிழ்! தமிழே!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## அறியாமை அகற்றப்பட வாசிகசாலைகள் அவசியம்

### தமிழரசு வாசிகசாலை திறப்பு விழாவில் இராசதுரை

"மக்களிடையே மண்டிக் கிடக்கும் அறியாமை அகற்றப்பட வேண்டும். அதன் மூலமே மூட நம்பிக்கைகள் போன்ற தீய பழக்க வழக்கங்களை அகற்ற முடியும். இந்த முறையிலே மக்களிடையே சிறந்த சேவை செய்வது வாசிகசாலையாகும். மக்களுக்கு ஏற்படும் ஓய்வு நேரங்களை இப்படியான பயனுள்ள வேலைகளில் செலவு செய்தால் செலவின்றியே அறிவைப் பெற முடியும்." என்று 15-2-64-ந் தேதி மட்டக்களப்பு தமிழரசுக் கட்சி கிளை அலுவலகத்தில் தமிழரசு வாசிகசாலை திறப்பு விழாவுக்குத் தலைமை வகித்த மட்டுநகர் முதற் பிரதிநிதி திரு. செ. இராசதுரை கூறினார்.

தமிழரசுக் கட்சித் தலைவரும் பட்டிருப்புப் பிரதிநிதியுமான திரு. சி. மூ. இராசமாணிக்கம் குத்து விளக்கேற்றி வாசிகசாலையைத் திறந்து வைத்தார்.

'தமிழ் பேசும் மக்கள் இன்றைய நிலையில் தங்களைத் தாங்களே அறிந்து தெரிந்து கொள்வதன் மூலமும் வெளிநாடுகளில் மற்றைய இனங்களின் வாழ்க்கை முறையையும் அரசியல் நிலைமைகளையும் அறிவதன் மூலமுமே தமது விடுதலை இயக்கத்தை வெற்றிகரமாக நடத்த முடியும். உலக வரலாற்றிலே அடிமைப்பட்ட இனங்கள் அறிவை வளர்த்ததன் மூலமே அடிமைத் தளைகளை அறுத்தெறிந்து சுதந்திரம் பெற்று சுயாட்சி அடைந்திருக்கிறார்கள். இவர்களைப் போல நாமும் இவ்வாசிகசாலை மூலம் அறிவைப் பெற்று அடிமை விலங்கொடிக்க வாரீர்,' என்று வேண்டினார்.

அவர் இக் கூட்டத்தில் திரு. மு. மாணிக்கமும் இன்னும் பலரும் பேசினர்.

---

### சென்னை இலங்கைத் தமிழர் மன்றம்

மார்ச் மாதம், சென்னையில் ஆரம்பிக்க விருக்கும் இலங்கைத் தமிழர் மன்றம் பற்றி அமைப்புக்குழு பின்வரும் அறிக்கையை வெளியிட்டுள்ளது:-

இலங்கையில் வாழும் தமிழ் பேசும் பெருமக்கள் படும் தொல்லைகளையும் துயரங்களையும் நீங்கள் அறிவீர்கள்.

அரசியலால் நாமும் அவர்களும் பிரிக்கப்பட்டிருந்தாலும் கலாச்சாரத்தால் அவர்களுக்கும் நமக்கும் இடையில் உள்ள உறவையும் தொடர்பையும் கூட நீங்கள் அறிவீர்கள்.

இந்த உறவை நினைத்தாவது, புண்பட்டிருக்கும் அந்த ஈழம் வாழ் தமிழர்களுக்கு நாம் நமது அனுதாபத்தையும் ஆத்மீக ஆதரவையும் தரக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த நோக்கத்துடனே தான் இலங்கைத் தமிழர் மன்றம் என்ற பொது ஸ்ரீ—கலாச்சார உறவு அமைப்பு ஒன்றினை தமிழகத்தில் நிறுவ நாங்கள் முடிவு செய்திருக்கிறோம்.

இம்மன்றம் ஒழுங்கான முறையில் செயல்பட விருப்பதால் ஒவ்வொரு மாதமும் மாதாந்தர நன்கொடைப் பணமாக ரூபா 2-00 உறுப்பினர்களிடம் இருந்து பெறுவதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

மாதந்தோறும் ரூபா 2-00 தரக் கூடியவர்கள் இலங்கைத் தமிழர் நல்வாழ்வுக்கு பெரியதொரு தொண்டாற்றியவர்கள் ஆவார்கள்.

இம்மன்றத்தின் துவக்க விழா மார்ச் மாத துவக்கத்தில் நடைபெறவிருப்பதால் உங்கள் ஒத்துழைப்பைப் பெரிதும் எதிர்பார்க்கிறோம்.

---

### திரு. இராசலிங்கம் நினைவு தினம்

தினர்களின் தொண்டன் திரு. கே. இராசலிங்கம் அவர்களின் முதலாமாண்டு சிரார்த்த தினம் இரம்புக்கந்தை உதய சூரியன் கலா மன்றத்தினரால் தோட்டக் கமிட்டித் தலைவர் திரு. இ. சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் கலா மன்ற கட்டிடத்தில் 11-2-64 மாலை 7-30 மணியளவில் நடைபெற்றது. திரு. நா. கேசவன் அவர்கள் குத்துவிளக்கேற்றி அன்னாரின் சேவையையும் பொதுநலத் தொண்டினையும் எடுத்துரைத்தார். திரு. ஆ. கேசவன் அவர்கள் திரு. கே. இராசலிங்கம் அவர்களின் உருவப் படத்தைத் திரை நீக்கம் செய்து அன்னார் மலையக மக்களுக்காகத் தனது வாழ்வையே அர்ப்பணித்த தியாகி எனக் குறிப்பிட்டார். பெ. ஆறுமுகமும் பெ. கதிர்வேலு ஆகியோரும் உரை நிகழ்த்தினர்கள்.

---

### பாரதி மன்றம்

நோர்வுட் இராஸாதோட்டம் பனிய கணக்கு பாரதி மன்றம் அங்குரார்ப்பணக் கூட்டம் 21-1-64 என் கருப்பையா தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் பாரதி மன்றம் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: என் கருப்பையா, துணைத் தலைவர்கள்: வி. ராமையா, பஞ்சரட்ணம், அழகன். பொருளாளர்: பொன்னையா, செயலாளர்: முத்தையா. 25 பேர் கொண்ட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது.

---

### முஸ்லிம் எழுத்தாளர் சங்கம்

இலங்கை வாழ் முஸ்லிம் எழுத்தாளர்களுக்கு ஒரு சங்கம் இல்லாக் குறையை நிவர்த்திக்கு முகமாக துவக்கப்பட்டு தற்போது வெற்றிகரமான பல வேலைத் திட்டங்களை நிறைவேற்றி வரும் இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் சங்கம், முதுபெரும் எழுத்தாளர்கள் பலருக்கு ஓர் அரிய வேண்டுகோளை விடுத்துள்ளது.

சங்கத்தின் வளர்ச்சிக்கு சகல வகையிலும் உதவுமாறு கோரி அனுப்பப்பட்டுள்ள கடிதத்தின் வாசகத்தை சங்கத்தின் இணைச் செயலாளர் எம். எம். மக்கீன் பத்திரிகைகளுக்கு வெளியிட்டிருக்கிறார்.

கடிதத்தின் வாசகம் பின்வருமாறு: "சமீபத்தில் அமைக்கப்பட்டுள்ள இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் சங்கம் பற்றிய தகவல்களையும், வேலைத் திட்டங்களையும் நடவடிக்கைகளையும் அறிந்திருப்பீர்களென நம்புகிறோம்.

ஈழத்து இலக்கியத் துறையில் பரவலாக ஏற்பட்டிருக்கும் விழிப்புணர்ச்சிக்கமைய முஸ்லிம் எழுத்தாளர்களும் தங்களது பணிகளைச் செய்து வருகிறார்கள்.

இவர்களை ஒன்று திரட்டி இஸ்லாமிய அடிப்படையில் இயங்கும் ஒரு ஸ்தாபனமாக மிளிர ஆவன செய்து வருகின்றோம். எனினும் இன, மத வேறுபாடுகளோடு இயங்கும் இயக்கமாக இல்லாமல் அமைத்துள்ளோம்.

இந்த வகையில் தங்கள் இலக்கியப் பணிகளைக் கருத்தில் கொண்டு, பல வகைகளிலும் உதவி, ஒத்தாசைகளை வேண்டி நிற்கிறோம்."

---

### இலவச தேவார வகுப்பு

சென்ற ஞாயிற்றுக் கிழமை நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகராலயத்தில் அகில இலங்கைப் பொது ஜன சேவைச் சங்கத்தால் ஓர் இலவச தேவார வகுப்பு திரு. இ. ஞானசேகரக் குருக்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று.

திரு. இ. ஞானசேகரக் குருக்கள், இச்சங்கம் சமயப் பிரசங்கங்கள், இலவச தீட்சை, கூட்டுப் பிரார்த்தனை ஆதியாம் இயக்கங்களுடன் இலவச தேவார வகுப்பையும் ஆரம்பித்தமை பாராட்டுக்குரியதெனவும் யாவரையும் இவ் அரிய சேவையில் பங்கு பற்றும் வண்ணமும் வேண்டிக் கொண்டார்.

திரு. மணிபாகவதர் சிடன் தமிழ்மணி திரு. எஸ். கணேசசுந்தரம், தம்மை இவ் இலவச தேவார வகுப்பை நடாத்தும்படி வேண்டியமைக்கு நன்றிகூறி சில ஆன்றோர்கள் வழிவகுத்த பண்களைப் பிழையாகப்பாடாமல் தடை செய்வதற்கும், இளஞ் சிறுர்களைச் சமய வளர்ச்சியில் ஊக்கு ப்பதற்கும் இவ் இலவச தேவார வகுப்பு பெரிதும் நன்மை பயக்குமாகையால் இத்தகைய இயக்கத்தில் தாம் ஓர் இலவச ஆசிரியராகக் கடமையாற்ற மிகவும் விரும்புவதாகவும் கூறினார்.

செயலாளன்:- திரு. த. இராசரெத்தினம் நன்றி கூறி, ஒவ்வோர் ஞாயிற்றுக் கிழமைகளிலும் காலை 9 மணி முதல் 10 மணிவரை நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகராலயத்தில் இவ்விலவச தேவார வகுப்பு நிறைவேறுமெனவும் யாவரையும் இவ் அரிய தருணத்தை இழந்துவிடவேண்டாமெனவும் வேண்டிக் கொண்டார்.

---

### பாராட்டு விழா

அளவெட்டி தெற்கு அ. மி. பாடசாலையில் ஆங்கில உதவி ஆசிரியராகக் கடமையாற்றி அளவெட்டி சதானந்த வித்தியாசாலைக்கு மாறிச்செல்லும் திருமதி வீ. ச. செல்வத்துரை அவர்கட்கு ஓர் பாராட்டு விழா தலைமை ஆசிரியர் திரு. இ. போ. நவரெட்ணம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

ஆசிரியர்கள்: திரு. நா. செல்வநாயகம், திருமதி த. சிவசுப்பிரமணியம், ஆகியோர் அன்னாரின் சேவைகளைப் பாராட்டிப்பேசினர். மாணவர் கதம்பம், சிற்றுண்டி வழங்கல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஈற்றில் வெள்ளிச் சாமான்கள் அன்பளிப்பு செய்யப்பட்டதுடன் விழா முடிவுற்றது.

---

## குழி

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

'பதினெட்டு வயதைத் தாண்டியவர்கள் பரீட்சை யெழுத முடியாது'

முட்டை கலைக்கப் போய், மேலெல்லாம் முசுறு கொட்டியவனின் பரபரப்புடன் அருளின் முகத்தைப் பார்க்கிறான் ஆறுமுகம். முட்டி நிற்கும் கண்ணீர் வெள்ளத்திற்கு அணை போடச் சக்தியற்று அருளின் இமைகள் பின்வாங்குகின்றன.

(யாவும் கற்பனை)

---

# மொழி மாற்றத்தை விரும்பும் இஸ்லாமியத் தலைவர்கள்

## நாளை மத மாற்றத்தையும் விரும்புவர்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

தற்போது ஈழத்தில் சிறுபான்மையினராயுள்ள மக்களின் போதனா மொழி தமிழ். இம் மொழியிலே பயிற்றப்பட்டவர்களுக்கே இந்த நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் கூடு விட்டுப் பறக்கும் போது — அதிகரித்துள்ள போது, மிகவும் பெரும்பான்மை மக்கள் போதனா மொழியான சிங்களத்தை — இஸ்லாமியர்களும் தமது எதிர்காலச் சமூகத்தினது போதனா மொழியாகக் கொண்டால், அவர்கள் நிலையும் வேலையில்லாத் திண்டாட்டமும் எந்த அளவுக்குத் தலைவிரித்துத் தாண்டவமாடும் என்பதை மேலெழுந்த கண்ணோட்டத்திலாவது ஏனோ காணாது விட்டார்கள்?

காலி முஸ்லிம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை மூடியபோது இதரா இரண்டு, அட்டாளைச்சேனை — கண்டி முதலிய முஸ்லிம் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகளை இருக்கிறபடியே நிலைபெறச் செய்வோமென்று மேடை ஏறி, கோடை இடிபோல் வாக்குறுதி அளித்தார்கள்.

அந்த வாக்குறுதி அடுத்த ஆண்டு ஆரம்பமாகு முன்னமே எந்தவகையில் காற்றில் பறந்தது என்பது நாடறிந்த விஷயம். தொடர்ந்து காலிக் கலாசாலையை, அரசாங்கம் இப்போது மூடினாலும் அதே தொகை பயிற்றப்பட வேண்டிய முஸ்லிம் ஆசிரியர்களை எடுப்போம் என்ற வாக்குறுதியும் இந்த ஒரு சில நாட்களில் எவ் [illegible] லாமிய சமூகம் அறியாததொன்றல்ல.

இந்த சூழலில் முஸ்லிம்கள் நிலை என்ன? இதுவே இப்போது சகல இஸ்லாமியர்களும் சிந்திக்கவேண்டிய தொன்றாகும்.

மொழியைக் கட்டாயப் படுத்தி—அதைப் பலவந்தத்தில் புகுத்துவதுபோல் மதத்தையும் செயல்படுத்துவார்கள். அப்போது இந்த மொழிமயக் கொள்கைக்குச் சரண்புகுந்தது போல் அதற்கும் சாஷ்டாங்கம் செய்யும் கதி ஏற்படும்.

ஆகவே எமது தொன்று தொட்ட, தொட்டில்மொழியான தமிழ் மொழியே இலங்கை இஸ்லாமியர்களது போதனா மொழியாகவிருக்க வேண்டும். தாய்மொழியே போதனா மொழியாகவிருக்க வேண்டும் என்று கல்வி நூலாரே கூறும்போது இவர்களது மொழிமாற்றக் கூற்றுக்கு காரணம் என்ன?

இவ்வரசாங்கம் இன்னும் எத்தனை நாட்களுக்கு ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் என்பது ஆட்சியாளர்களையே ஐயத்துக்குள்ளாக்கியிருக்கிறது.

இதனால் அடுத்துவரும் அரசாங்கம் இன்னுமொரு உரிமையைப் பறிக்கும் சட்டத்தை அமுல் நடத்தும் போது அதற்கும் தாளம் போடும் மத்தளமாக நாம் மாறுவதா? என்றும் கொள்கை, இலட்சியம் என்றில்லாத 'கொழுக்கட்டை'களாக வாழ்ந்து வருவதா?

காலத்துக்கொரு கட்சியும்—நேரத்துக்கொரு கொள்கையும் என்று ஒரு சமூகமோ, சமூகத்தலைவனோ இருந்துவர முடியுமா?

இதுவரை இருந்ததுபோல் எமது உரிமைகள் இருந்து வரவேண்டும். இருந்து—இப்போது இல்லாதிருக்கும் உரிமைகளுக்காக நமக்குரிய பாணியில் போராடவேண்டும். என்றும் எமதுபோதனா மொழி தமிழ்மொழியாகவே இருக்கவேண்டும். இதுவே ஈழத்து இஸ்லாமியரதும் ஏகோபித்த முடிவும்-உரிமைக்குரலும் என்று குறிப்பிட்டுக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இம்முறையில் இருக்கும் ஒன்றுபட்ட உண்மை நிலையைத் தெரிந்தபோதும் எமக்கு ஏன் வாக்கெடுப்பும் அதில் ஒரு கணக்கெடுப்பும் தேவை? குறிப்பிட்ட விடயத்தில் ஒன்றுபட்ட கருத்தில்லாது வேறுபட்ட அபிப்பிராயங்கள் நிலவினுற்றான் வாக்கெடுப்புக்கு விட்டு மக்கள் நிலையினைத் தெரிய கணக்கெடுப்பது அவசியம். ஆனால் ஈழத்து இஸ்லாமியர் போதனா மொழிவகையில் ஒத்த நோக்கும், ஒருமைப்பட்ட கருத்தும்—சான்றுகளுக்குச் சரித்திரமும்-வருங்காலத்தைப் பற்றிய வரைவிலக்கணமுமிருக்கும்போது ஏன் நமக்கு இந்த போதனா மொழி மாற்றம்! அதற்கோர் வாக்கெடுப்பு!

ஆஸாத்—
செயலாளர்,
இ. மு. கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்நெஞ்சையும் கரைய வைக்கும் கருத்துப் படையல்!

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **நவா** (கொம்பனிவீதி)

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) **விஜயா** (மட்டக்களப்பு) **வெம்பிளி** (கண்டி) **மொடேர்ன்** (பதுளை) **ஸ்ரீகிருஷ்ணு** (திருமலை) **விஜிதா** (ஹட்டன்)





கஸ்தூரி பிலிம்ஸ்

## பார் மகளே பார்

டைரக்ஷன்:
ஏ. பீம்சிங்

இசை:
விஸ்வநாதன்-ராமமூர்த்தி

பணத்துக்கும் போலிக் கௌரவத்துக்கும் அடிமையாகி தன் ஆருயிர் மக்களையும் உற்ற மனைவியையும் ஓயாத சஞ்சலத்துள்ளாக்கி தானும் ஆறாத துன்பக் கடலில் மூழ்கித் தத்தளிக்கும் கோடீஸ்வரன் ஒருவனின் பரிதாப வாழ்க்கையைச் சித்தரிக்கும் ஒப்பற்ற உணர்ச்சிச் சித்திரம்!

---

# உள்ளத்தைத் தொடும் 3வது வாரம்!

**சென்ட்ரல்** (மருதானை) **ராணி** (யாழ்ப்பாணம்) **ராஜேஸ்வரா** (மட்டக்களப்பு) **ஜோதி** (திருகோணமலை)

**லிபர்ட்டி** (பதுளை) **ஈஸ்வரன்** (கிளிநொச்சி) **சென்ட்ரல்** (நாவலப்பிட்டி) **பிரீதி** (அட்டன்)





சிவாஜி கணேசன், சரோஜாதேவி, எம். ஆர். ராதா, பாலாஜி,
ரங்கராவ், பத்மினி பிரியதர்சினி, கருணாநிதி, ஏ. ராமராவ்

முதலியோர் நடித்த

பிரசாத் மூவீஸ் அளிக்கும்

## இருவர் உள்ளம்

பணத்தால் மட்டும் சகல பாவையரின் உள்ளங்களையும் கவர்ந்துவிட முடியுமா?
பாவையரின் உளப்பாங்கைச் சித்தரிக்கும் பண்பு நிறைந்த ஓவியம்!

மூலக்கதை: டாக்டர் லட்சுமி

திரைக் கதை வசனம்: கலைஞர் மு. கருணாநிதி

இசையமைப்பு: கே. வி. மகாதேவன்

டைரக்ஷன்: பிரசாத்


---

**கெயிட்டி** (கொட்டாஞ்சேனை)

### மகத்தான 4வது வாரம்!

சிவாஜி கணேசன்,
சரோஜாதேவி, பாலையா,
தங்கவேலு, எம். ஆர். ராதா,
வி. நாகையா

நடித்த



## வளர் பிறை

---

### விரைவில்!

சிலோன் தியேட்டர்ஸ்
திரைகளில்!

எஸ். எஸ். ராஜேந்திரன்,
முத்துராமன், சகஸ்ரநாமம்,
டி. ஆர். ராமச்சந்திரன்,
கமலஹாசன், தேவிகா,
புஷ்பலதா, ஷீலாதேவி

நடித்த

## வானம்பாடி

இசை:
கே. வி. மகாதேவன்

பாடல்கள்:
கண்ணதாசன், அருணசலம்

பின்னணி:
சௌந்தரராஜன், சுசீலா,
ராகவன், ஈஸ்வர்.



இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1964-ம் வருடம் மார்ச் மாதம் 1-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org